இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 82 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 04, வியாழக்கிழமை 16.02.2017

தேங்காய் விலையைக் கட்டுப்படுத்த

## தேங்காய் எண்ணெயின் இறக்குமதி வரி குறைப்பு

கொழும்பு, பெப். 16
தேங்காய் விலை அதிகரிப்பைக் கட்டுப் படுத்துவதற்காக தேங்காய் எண்ணெய் இறக்குமதியை அதிகரிக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்காக தேங்காய் எண்ணெய் இறக்குமதிக்கான வரிக் குறைப்புக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. தேங்காயின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று >> 22

## இலங்கையில் பணியாற்ற 648,000 டொலர் நிதி தேவை

ஐ.நா. ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 16
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் செயற்பாடுகளை இந்த ஆண்டு இலங்கையில் முன்னெடுப்பதற்கு ஆறு இலட்சத்து 48 ஆயிரம் டொலர் நிதி தேவைப் படுவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசைன் தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் செயற்றிறனை வலுப்படுத்துவதற்கு இந்த ஆண்டில் மேலதிக நிதி தேவைப்படுவதாகவும் இதற்கு நாடுகளும், >> 24

## வான் படையினருக்கு எந்த அறிவுறுத்தலும் கிடைக்கவில்லையாம்

முல்லைத்தீவு, பெப். 16
பிலக்குடியிருப்புக் காணிகளை விடுவிப்பது தொடர்பில் வான் படைக்கு எந்தவொரு அறிவுறுத்தலும் - ஆலோசனையும் கிடைக்கப் பெறவில்லை. இவ்வாறு வான்படைப் பேச்சாளர் குரூப் கப்டன் கிஹான் செனவிரத்ன தெரிவித்தார்.
பிலக்குடியிருப்புக் காணிகளை விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இராணுவத் தளபதி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் உறுதி >> 22

## போரினால் பாதித்த பெண்களுக்கு அதிகாரிகளாலும் இராணுவத்தாலும் துன்புறுத்தல்கள்

வெளிநாட்டு ஊடகர்களிடம் இப்படித் தெரிவித்தார் சந்திரிகா

கொழும்பு, பெப். 16
போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் தலைமைத்துவ தமிழ்ப் பெண்கள் அவர்களது சமூகத்தின் அதிகாரிகளினாலும், இராணுவத் >> 24



## கஞ்சா கடத்திய 3 பேர் மாதகலில் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், பெப். 16
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு கடத்த முற்பட்ட 22 கிலோ கஞ்சாப் போதைப் பொருள் பொதிகள் மாதகலில் கைப்பற்றப்பட்டன. அவற்றைக் கடத்த முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் தென்னிலங்கையைச் சேர்ந்த இருவர் உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பயன்படுத்தி >> 23

## நல்லிணக்கம் குறித்து மக்களிடம் கருத்தறியவே வடக்குக்கு வந்தோம்

*யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் ஐரோ. ஒன்றியத்தின் பிரதிநிதி*

யாழ்ப்பாணம், பெப். 16
நல்லிணக்கம் - அபிவிருத்தி தொடர்பில் வடக்கு மக்களின் கருத்துக்களையும் அறிய வேண்டியுள்ளது. அதற்காக வடக்கு நோக்கிய எமது பயணம் அமைந்திருந்தது.
இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவின் தலைவர் ராங்லாய் மார்க் தெரிவித்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனை, >> 24

## தீர்வு கிடைக்காவிடின் வடக்கு முழுவதும் திங்கள் முதல் போராட்டங்கள்

முல்லைத்தீவு, பெப். 16
எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமைக்குள் முல்லைத்தீவு மக்களின் காணிகள் விடுவிக்கப் >> 24

முச்சந்தி முரளி



அப்ப உங்களுக்கு இன்னும் எத்தனை இரவு வேண்டும் எண்டு சொல்லுங்கோ பார்ப்பம்....

# பிலக்குடியிருப்பு மக்களின் காணிப் பிரச்சினைக்கு ஓரிரவுக்குள் தீர்வை தரமுடியாது

## கொழும்பு அரசின் பதில் இது

கொழும்பு, பெப்ரவரி 16
பிலக்குடியிருப்பு மக்களின் காணிப் பிரச்சினைக்கு ஓரிரவுக்குள் தீர்வைக் கண்டுவிட முடியாது. அதற்குரிய நடவடிக்கைகளை கட்டம் கட்டமாகவே முன்னெடுக்க முடியும். இவ்வாறு கொழும்பு அரசு நேற்று அறிவித்தது.
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தப் பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. பிலக்குடியிருப்பு மக்களின் காணிகள் எப்போது விடுவிக்கப்படும் என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, அமைச்சர் ராஜித மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
தமது காணிகளை விடுவிக்கக்கோரி பிலக்குடியிருப்பு மக்கள் தொடர் போராட்டத்தை ஆரம்பித்து 16 நாள்கள் கடந்துள்ள நிலையில் அரசின் பதில் இவ்வாறுள்ளது.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் நிலவும் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. எடுத்த எடுப்பிலேயே ஓரிரு நாள்களில் அதைச் செய்துவிட முடியாது. >> 24

## ஆஸி. முகாம்களில் தடுப்பிலுள்ளோர் நாடு திரும்பினால் தண்டனை இல்லை

அந் நாட்டு அரச தலைவர் முன்னிலையில் ரணில் உறுதி

*(கான்பராவில் இருந்து இ.அ.தேவராஜன்)*



சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறி ஆஸ்திரேலியத் தடுப்பு முகாம்களில் உள்ள இலங்கையர்கள் எந்த வித அச்சமும் இன்றி நாட்டுக்குத் திரும்ப முடியும். அவர்களை நாங்கள் தண்டிக்க மாட்டோம், >> 24

## ஐ.நாவின் கடும் கண்காணிப்புடன் கொழும்புக்கு குறுகிய கால நீடிப்பு

வடக்கு முதலமைச்சரும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்ற இலங்கைக்கு கால நீடிப்பு நீண்ட காலத்துக்கு வழங்கக் கூடாது. >> 4

## சபதத்தின் பின் சிறைக்குள் முடங்கினார் சின்னம்மா

சென்னை, பெப். 16
சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பு வந்ததை அடுத்து நேற்று மாலை பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப் பட்டார் சசிகலா.



சிறைக்குச் செல்வதற்கு முன் மெரினாவில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் சசிகலா மலரஞ்சலி செலுத்தினார். மும்முறை சமாதியில் கையால் அறைந்து அவர் சபதம் எடுத்தார். என்ன சபதம் செய்தார் என்று தெரிவிக்கப்படவில்லை. சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் நால்வரும் >> 23

## மன்னார் மனிதப் புதைகுழி; வெளிநாட்டுத் தடயவியல் நிபுணர்களை அழைப்பது குறித்த நடவடிக்கை என்ன?

*27ஆம் திகதி அறிக்கையை முன்வைக்க உத்தரவு*

மன்னார், பெப்.16
மன்னார் - திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழியை பரிசோதனை செய்வதற்கு வெளிநாட்டுத் தடயவியல் நிபுணர்களை வரவழைப்பது குறித்த முழுமையான அறிக்கை எதிர்வரும் 27ஆம் திகதி >> 23

## 16ஆவது நாள்

பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் விரிவடைகிறது

முல்லைத்தீவு, பெப். 16
மண்மீட்புக்காக அறவழிப் போரைத் தொடுத்துள்ள பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் நேற்று மேலும் விரிவடைந்துள்ளது. இதுவரை மூன்று தகரக் கொட்டில்களின் கீழ் இருந்து போராடிய >> 24



## புதுக்குடியிருப்பு மக்களின் உணவு ஒறுப்பு தொடர்கிறது

*ஒருவர் மயங்கிச் சரிந்ததால் பரபரப்பு*

முல்லைத்தீவு, பெப். 16
நிலமீட்புக்காக புதுக்குடியிருப்பில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவர் நேற்றுத் திடீரென மயக்கமடைந்தார். இதனால் போராட்டக் களத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. மருத்துவரின் உதவியுடன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. >> 04

## போர்க்குற்ற விசாரணை அரசமைப்பு முயற்சியைக் குழப்பும்

*மீளவும் சொல்கிறார் சந்திரிகா*

கொழும்பு, பெப். 16
போர்க்குற்ற விசாரணை - நீதிமன்றப் பொறிமுறை குறித்து இப்போது பேசுவது பொருத்தமற்றது. புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சியை அது பாதிக்கும். புதிய அரசமைப்பு உருவாக்கும் முயற்சி கூட சாத்தியமில்லாமல் போய்விடும். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று முன்தினம் வெளிநாட்டு ஊடகங்களின் செய்தியாளர்களைச் சந்தித்துப் >> 24

## அரசியல் பழிவாங்கலால் பாதித்தோருக்குச் சலுகை

### அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு, பெப். 16
அரசியல் பழிவாங்கல் காரணமாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவர்களுக்கு சலுகைகள் வழங்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி, வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக, அரசியல் பழிவாங்கல்களினால் பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து 31 ஆயிரத்து 666 மேன்முறையீடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.
இதில் 23 ஆயிரத்து 93 மேன்முறையீடுகள் தொடர்பான சிபாரிசுக்கு 3 கட்டங்களின் கீழ் அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 8 ஆயிரத்து 573 மேன் முறையீடுகளில் 6 அமைச்சுக்களுக்கு உரித்தான 3 ஆயிரத்து 440 மேன்முறையீடுகள் தொடர்பான பரிந்துரைகளை உரிய நிர்வாக அதிகாரிகளின் ஊடாகச் செயற்படுத்துவது தொடர்பில் அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டாரவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (வ-5)

## கொழும்பு பாடசாலைகளின் மாணவர்களிடையே மோதல்

கொழும்பிலுள்ள மூன்று பிரபல பாடசாலைகளின் மாணவர்களிடையே இன்று ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 6 மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இந்த மோதல் சம்பவத்தால் பேருந்து ஒன்றுக்கும் பாடசாலை சேவையில் ஈடுபடும் சில வான்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் 15 மாணவர்கள் மருதானை மற்றும் பொரளை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். (வ-5)



ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்று அரச வரவேற்பு அளிக்கப்பட்டது. கான்பராவில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியின் முன்பாக இந்த வரவேற்பு வைபவம் இடம்பெற்றது. 19 பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் இலங்கைத் தலைமை அமைச்சரை ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் மல்கம் ரேன் புல் வரவேற்றார். இந்த வரவேற்பு நிகழ்வில் துறைமுகம் மற்றும் கப்பல்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, நீர்முகாமைத்துவ அபிவிருத்தி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, அயலுறவுத் துறை பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா ஆகியோரும் கலந்துகொண்டனர். (து)

# கட்சிகள் என்ன நினைத்தாலும் பேரவை மக்கள் இயக்கம்தான்

## அடித்துக் கூறுகிறார் விக்கி

யாழ்ப்பாணம், பெப். 16
தமிழ் மக்கள் பேரவையில் அங்கத்துவம் வகிக்கும் அரசியலுடன் தொடர்புடைய தரப்பினர், மக்கள் பேரவையிலிருந்து எப்படியான லாபத்தை பெறலாம் என்று நினைக்கக் கூடும். ஆனால் மக்கள் பேரவை, மக்கள் இயக்கமாகத்தான் செயற்பட்டு வருகின்றது.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
முதலமைச்சரின் செயலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில், தமிழ் மக்கள் பேரவை எதிர்காலத்தில் அரசியல் கட்சியாக மாற வேண்டி இருப்பின் அது தொடர்பில் பேரவையினருடன் பேசி முடிவெடுக்கப்படும் என்று தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்த கருத்துத் தொடர்பில் கேட்ட போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.
அரசியல் கட்சிக்கு அரசியல் ரீதியான முன்நோக்குகள் - தேவைகள் இருக்கக் கூடும். தமிழ் மக்கள் பேரவை மக்களுடைய இயக்கமாகச் செயற்பட்டு வருகின்றது. அரசியலில் சம்பந்தப்பட்டவர்கள் இதில் இருந்து என்ன லாபம் பெற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கக் கூடும். அவர்கள் தங்களுடைய கருத்துக்களை முன்வைப்பார்கள். இவை என் முன்பு வரும்போது அது தொடர்பில் நான் பேசிக் கொள்வேன் என்று முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார். (வ-5-10)



ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவின் தலைவர் ரங் லாய் மார்க் மற்றும் ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி மக்காலோ இருவரும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை, கைதடியில் உள்ள முதலமைச்சர் செயலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினர். (101)

## எழுக தமிழ் மேடையில் பெண் இல்லாதது பெரும் குறைதான்

### பேரவையின் இணைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 16
தமிழ் மக்கள் பேரவையின் 'எழுக தமிழ்' மேடையில் பெண் இல்லாதது குறைதான். பேரவையின் உறுப்பினர்களுக்கே மேடையில் பேசச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. எதிர்காலத்தில் துணிந்த பெண்கள் பேரவையுடன் இணைந்துகொள்ள வேண்டும்.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சரும், தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாணசபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனை, கிழக்கில் நடந்த எழுக தமிழ் நிகழ்வின் போது மேடையில் பேசுவதற்கு சந்தர்ப்பம் வழங்காமை குறித்து எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மேடையில் பெண் இல்லாதது குறைதான். பெண்கள் பேரவையில் இணையவில்லை. பயம் காரணமாக அவர்கள் வராமல் விட்டிருக்கலாம். துணிந்த பெண்களை அழைக்கின்றோம். திருமதி அனந்தி போன்றவரை அடுத்த முறை கூப்பிடுவோம். எல்லோரும் மேடையில் பேச வேண்டும் என்று ஏறினால் மேடையும் விழுந்து விடும்.
கட்சித் தலைவர்களுக்கும், பேரவையினருக்கும் மாத்திரம் பேச இடம்கொடுத்தோம். இது பேரவையின் முடிவு. இதனால்தான் யாழ்ப்பாணத்தில் நடந்த எழுக தமிழ் நிகழ்வில் அமைச்சர் ஐங்கரநேசனுக்கு பேச இடம்கொடுக்கவில்லை - என்றார். (வ-5-101)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தொடர் போராட்டத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 16
இறுதிப் போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களையும் அவர்களின் பெயர் விவரங்களையும் வெளியிட வேண்டும். இலங்கை அரசுக்கு ஐ.நா. கால நீடிப்பை வழங்கக்கூடாது ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமை முதல் கிளிநொச்சி நகரில் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்படும்.
இவ்வாறு இறுதிப் போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.
இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்க வேண்டும் என்று அவர்கள் கேட்டுள்ளனர்.
அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இறுதிப் போரில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் இதுவரை அரசியல்வாதிகளையும் நல்லாட்சி அரசு என்று கூறப்படும் கூட்டு அரசையும் நம்பி ஏமாந்து விட்டோம். எமது பிள்ளைகளைக் கண்டு பிடிக்க நாம்தான் போராட வேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.
எதிர்வரும் 20ஆம் திகதி தொடர் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். அன்றைய தினம் ஒரு கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெற்று மறுநாள் 21ஆம் திகதி எம்மால் ஐ. நா. பொதுச் செயலாளருக்கு மனு கையளிக்கப்படும்.
நாம் சடப்பொருளையோ அசையும் அசையா சொத்தையோ கோரி நிற்கவில்லை. எமது இரத்தத்தின் இரத்தங்களைக் கோரி நிற்கின்றோம். உயிர்களைக் கோரி நிற்கின்றோம். அவர்களை மறைத்து வைத்திருக்கும் இடங்களை வெளிப்படுத்தி அவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடும்படி கோரி நிற்கின்றோம்.
இதற்கு இந்த அரசுக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கக்கூடாது எனக் கோரி நிற்கின்றோம்.
நாம் எட்டு வருடங்களாக எமது உறவுகளை இழந்து உடல், உள, பொருளாதார ரீதியில் நலிவடைந்த நிலையில் அநாதரவாக எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளோம்.
தற்போது நாம் நம்பியிருப்பது அரசியல்வாதிகளை அல்ல. எமது இந்தநிலையை உணரக் கூடிய எங்களில் ஒருவராகிய எங்கள் மக்களையேதான். எனவே மக்களாகிய நீங்கள் தனிப்பட்ட ரீதியிலும் பல்வேறுபட்ட சமூக அமைப்புக்கள், பல்கலைக்கழகம், தொழிற் சங்கங்கள், மத குருமார்கள் என்று அனைத்துத் தரப்பினரும் எமக்கு ஆதரவு தரவேண்டும். எமது போராட்டம் மூலம் எமது உறவுகளை மீட்டெடுக்க தோள் கொடுக்க வேண்டும் என்று மன்றாட்டமாக இரு கரம் கூப்பி கேட்டுக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (வ-106)

## அரசமைப்பில் பௌத்த மதத்தை பலப்படுத்துவாராம் மைத்திரி

பௌத்த மதம் தொடர்பில் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மேலும் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன், அவற்றை எழுத்துடன் மட்டுப்படுத்தாமல் பௌத்த மதத்தை போசிக்கும் அரசின் பொறுப்பை மேலும் செயற்பாட்டு ரீதியாக நடைமுறைப்படுத்துவேன்.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார். கேகாலை, நாபே ஸ்ரீ போதிருக்காராம விகாரையில் நிறுவப்பட்ட புத்தரின் 36 உருவச் சிலைகளை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (வ-5)

# கல்விமான்கள் நாட்டு மக்களுக்கு சேவை வழங்க முன்வரவேண்டும்

## அரச தலைவர் மைத்திரி அழைப்பு

கொழும்பு, பெப்.16
சமூகப் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் சிறந்த சேவைகளை வழங்க கல்விமான்கள் முன்வரவேண்டும்.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
நேற்றுக் கேகாலை வித்தியாலயத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.
கல்விமான்கள் தமது துறைகளுடன் மாத்திரம் சமூகத்திலிருந்து தனிமைப்பட்டுவிடக்கூடாது. சமூகத்தின் பெரும்பாலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கல்விமான்கள் குரல்கொடுக்க வேண்டும்.
கல்விமான்கள் தமது அறிவை சமூகத்தின் முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்த வேண்டும். சமூகத்தின் நன்மைக்காகச் செயற்பட வேண்டும். தற்போது இலவசக் கல்வியின் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்கின்ற காலம். உலகின் பாராட்டைப் பெற்றுள்ள எமது நாட்டின் இலவசக் கல்வித் துறையையும் இலவச சுகாதாரத் துறையையும் மேலும் பலப்படுத்துவதற்கு அரசு தனது பொறுப்புக்களை முழுமையாக நிறைவேற்றும்- என்றார்.
நிகழ்வில் அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, கபீர் ஹாசீம், இராஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேமதாச, பிரதி அமைச்சர் துஷ்மந்த மித்திரபால, முதலமைச்சர் மஹிபால ஹேரத் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களும், முன்னாள் கடற்படைத்தளபதி தயா சந்தகிரி, முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் சரத்மாயாதுன்ன, பாடசாலை அதிபர் ஜீ. ஏ. எம். எஸ். சரத்சந்திர உள்ளிட்ட ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ற)

## உள்ளூராட்சி தேர்தலில் ஐ.தே.கட்சியுடன் கூட்டு

### ஜாதிக ஹெல உறுமய தெரிவிப்பு

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் என்று அந்தக் கட்சியின் உள்ளூராட்சி சபைகளுக்கான குழுவின் தலைவர் புதுகல ஜினவங்ச தேரர் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு, கிழக்கைத்தவிர ஏனைய 18 மாவட்டங்களில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
விண்ணப்பங்களை அனுப்பும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை பத்தரமுல்லை பன்னிப்பிட்டிய வீதியில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.
வடக்கு, கிழக்கில் உள்ள மாவட்டங்களில் போட்டியிடாத போதிலும் யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்தர் ஒருவர் வேட்பாளராகப் போட்டியிட விண்ணப்பித்துள்ளார்- என்றார். (ற)



## கண்டி, கெடம்பேயில் பேருந்துகள் விபத்து

### 25 பேர் காயம்

கொழும்பு, பெப்.16
கண்டி - கெடம்பே பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 25 பேர் காயமடைந்தனர். அவர்களில் மூவர் படுகாயங்களுடன் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
விபத்து கெடம்பே - யஹனதென்ன பகுதியில் நடந்துள்ளது. கடுகன்னாவையிலிருந்து கண்டி நோக்கி பயணித்த பேருந்தும், கண்டி நோக்கி பயணித்த மற்றுமொரு பேருந்துமே விபத்துக்குள்ளாகின.
விபத்தில் படுகாயமடைந்தவர்கள் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற)

## கருணாவின் கட்சியால் சு.கவின் வாக்குச் சிதறும்

### சிறிலங்கா சுதந்திர இளைஞர் முன்னணியின் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.16
விநாயகமூர்த்தி முரளிதரனால் புதிய அரசியல் கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு வடக்கு கிழக்கில் கிடைக்கும் வாக்குகளைச் சிதறடிப்பதற்காவே அமைக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு சிறிலங்கா சுதந்திர இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்தார்.
நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
"இலங்கையில் யாரும் அரசியல் கட்சிகளை ஸ்தாபிப்பதற்கு ஜனநாயக உரிமை உள்ளது. ஆனால் வடக்கு கிழக்கில் வளர்ந்து வரும் சிறிலங்கா சுதந்திர கட்சியின் அணியை வீழ்த்துவதற்கு யாருக்கும் அனுமதி வழங்க முடியாது- என்று அவர் குறிபிட்டார். (ற)



## பிலக்குடியிருப்புப் போராட்டமே முன்னுதாரணமாக அமையும்

### சரவணபவன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, பெப்.16
பிலக்குடியிருப்பு மக்கள் தொடர்ச்சியாக நடத்திவரும் அறவழிப்போராட்டம் முன்னுதாரணமானது.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
பிலக்குடியிருப்பு மக்கள் இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று 16 நாள்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களை நேற்றுமாலை நாடாளுமன்ற உறுப்பினர் சந்தித்துக் கலந்துரையாடினார்.
"பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு நல்ல முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இவற்றைப் போன்று பல காணிகளை இராணுவம் ஆக்கிரமித் துள்ளது. அவற்றை விடு விப்பதற்கு இந்த மக்களின் போராட்டம் முன்னுதாரணமாக அமையும்."- என்று நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (ற-21,7)

## சிறுவர் துன்புறுத்தல் தடுப்புப் பிரிவு திறப்பு

வவுனியா, பெப்.16
மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக தடுப்புப் பணியகம் நேற்று வவுனியா கனகராயன் குளம் பொலிஸ் நிலையத்தில் உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.
ஜரோப்பிய ஒன்றியத்தின் 30 இலட்சம் ரூபா நிதி உதவியில் இந்தப் பணியகம் அமைக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ரிம் சுட்டான், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி உணா மககுலி, ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை, மாலைதீவு, வதிவிடப்பிரதிநிதி துங் லாய் மாகு, வவுனியா மாவட்ட மேலதிக மாவட்ட செயலாளர் த. திரேஸ்குமார், வன்னி மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்



தேசபந்து தென்னக்கோன், கனகராயன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அபயகோன், ஆகியோர் இணைந்து பணியகத்தைத் திறந்தனர்.
நிகழ்வில் பணியகத்துக்கான அலுவலக உபகரணங்கள், முச்சக்கரவண்டி என்பன வழங்கப்பட்டன. (ற-21)

## ஆசிரியர்களின் போராட்டம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப்.16
வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் முன்பாக நடத்தப்பட்ட ஆசிரியர்களின் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்படுகின்றது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.
ஆசிரியர்களுக்கு விதிக்கப்பட்ட பணித்தடையை நீக்கக் கோரித் தொடர் போராட்டம் நடத்தப்பட்டது. போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கும் வடக்கு மாகான கல்வியமைச்சின் செயலருக்கும் இடையே நேற்றுச் சந்திப்பு நடைபெற்றது.
சந்திப்பில் பணித்தடை தற்காலிகமாக நீக்கப்படுகின்றது என்றும், கடமையில் ஈடுபட்ட பாடசாலைகளில் அவர்கள் கடமையைத் தொடர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பான விசாரணை முடிவுகள் வரும்வரை போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டுள்ளது. விசாரணையின் ஊடாக ஆசிரியர்களுக்கு பாதகமான விளைவுகள் ஏற்படும் பட்சத்தில் மீண்டும் போராட்டம் நடத்துவது தொடர்பாக ஆராயப்படும் - என்று தெரிவிக்கப்பட்டது. (ற-8)

## மோட்டார் சைக்கிள் திருடியவர் மது போதையால் சிக்கினார்

வவுனியா, பெப்.16
வவுனியா தேக்கவத்தையில் ஆசிரியர் ஒருவருடைய மோட்டார் சைக்கிளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் போக்குவரத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் புதிய பேருந்து நிலையத்தில் நடந்துள்ளது.
புதிய பேருந்து நிலையத்தை அண்டிய பகுதியில் தலைக்கவசம் இன்றி மது போதையில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் போக்குவரத்து பொலிஸாரால் மறிக்கப்பட்டுச் சோதனையிடப்பட்டார். தலைக்கவசம் இன்றி மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியமைக்காக அவரைக் கைது செய்த பொலிஸார் பொலிஸ் நிலையம் கொண்டு வந்தனர். அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பொலிஸ் நிலையம் கொண்டுவரப்பட்டது.
அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தேக்கவத்தையில் நிறுத்தியிருந்த மோட்டார் சைக்கிளை திருடியமை தெரியவந்தது. மோட்டார் சைக்கிளை காணவில்லை என ஆசிரியர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் ஏற் கனவே முறைப்பாடு செய்திருந்தார். கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் ஆசிரியருடையது என்று அடையாளம் காணப்பட்டது.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், பெப். 16

சைவ பரிபாலன சபையின் புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவ பரிபாலன சபையின் தலைவர் இ.வசந்தசேனன் தலைமையில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலய கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜாவும், சிறப்பு விருந்தினராக பண்டிதர் வ.பேரின்பநாதனும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்.பெப்.16

கண. மகேஸ்வரனின் தீர்வு தேடும் நியாயங்கள் சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ கலந்து கொள்வார். நூலின் வெளியீட்டுரையை எழுத்தாளர் குப்பிளான் ஐ.சண்முகம் வழங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ரி)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இலங்கை கணிசமான முன்னேற்றம்

## ஆஸி. அரச தலைவர் கணிப்பு

(கான்பராவில் இருந்து இ.அ.தேவறாஜன்)

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் இலங்கை அரசு கணிசமான அளவு முன்னேற்றம்கண்டுள்ளதுஎன்று ஆஸ்திரேலியத் அரசதலைவர் மல்கம் ரேன்புல் தெரிவித்தார்.

இரு நாட்டுக் கடற்படைகளினதும் ஒத்துழைப்பால் தற்போது ஆஸ்திரேலியாவுக்கான ஆள்கடத்தல் இல்லாமல்போயுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசிய பின்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

70 வருட ராஜதந்திர உறவுகளை நிறைவு செய்யும் வகையில் இலங்கைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆஸ்திரேலியாவுக்கு மேற்கொண்ட முதல் பயணத்தை வரவேற்கிறேன்.

இரு நாடுகளும் ஒன்றிணைந்து செயற்படக் களம் அமைத்துள்ளன. குறிப்பாக ஆட்கடத்தல் விடயத்தில் நல்ல பயனை எட்டியுள்ளோம். பொருளாதார நிகழ்ச்சி நிரல் ஒன்றை இலங்கை எம்மிடம் சமர்ப்பித்துள்ளது. இதன் மூலம் பொருளாதார உறவை விரிவாக்க புதிய வாய்ப்புக்கள் ஏற்படும். உலகப் பொருளாதாரத்துடன் ஒன்றிணைந்து இந்து சமுத்திரத்தில் ஒரு முக்கிய பொருளாதார வலயமாக இலங்கை மாறலாம் .

இந்து மா சமுத்திரத்தின் ஒரு அயலாகவும் , நெருங்கிய நண்பனாகவும் ஆஸ்திரேலியா உள்ள நிலையில் தொடர்ந்து இலங்கையின் பயணத்தில் கூடவே நிற்கும். மறுசீரமைப்பு விடயங்களில் செயல் ரீதியாகக் கைகொடுக்கும்.

இரு நாடுகளுமே கடல்வழிப் பிராந்தியம் மூலம் நன்மை பெறுகின்றன. சுபீட்சமான, பாதுகாப்பான பிராந்தியத்தை உருவாக்க நெருங்கிய உறவுடனும் அதிக ஈடுபாட்டுடனும் செயற்படுகின்றன.

இரு நாடுகளும் இணைந்து பிராந்திய வர்த்தகத்தை நோக்கி செயற்பட்டால் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் பொருளாதார ஒருங்கிணைப்புக்கும் வர்த்தகத்துக்கும் வாய்ப்புகள் உருவாகும்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆஸ்திரேலிய நிறுவனங்கள் ஒரு முக்கிய பாத்திரமாகலாம். இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால அபிவிருத்தியும் கூட்டுறவும் கடந்த 70 வருட காலத்தில் இலங்கையின் வளர்ச்சிக்குக் கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளன.

பல்வேறு இனத்தவரைக் கொண்ட நகரங்கள் உள்ள ஆஸ்திரேலியாவில் உள்ள இலங்கைச் சமுகம் இந்த நாட்டுப் பொருளாதாரத்துக்கும் சமுதாயத்துக்கும் கணிசமான பங்களிப்பை வழங்கி உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் தொடர்களை மேலும் வளர்த்துக்கொள்ளவுள்ளோம் - என்றார். (வ-த)

## 7,900 ஹெக்ரேயர் நெற் செய்கை யாழ். குடாநாட்டில் பாதிப்பு

### விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

அச்சுவேலி,பெப்.14

யாழ்.மாவட்டத்தில் காலபோகத்தில் 10 ஆயிரத்து 419 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அதில் 7ஆயிரத்து 900 ஹெக்ரேயர் (72 வீதம்) பாதிக்கப்பட்டுள்ளது. உரியகாலப் பகுதியில் மாரி மழை பெய்யாத நிலைமையும் கடும் வறட்சி வெப்பநிலை வீச்சு அதிகரிப்புமே நெற்செய்கை சேதமடைந்தமைக்கு காரணமாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் ஏ.செல்வாசா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்ட விவசாயிகள் ஆர்வத்தோடு நெற் செய்கையில் ஈடுபட்டனர். காலபோகநெற்செய்கை 10 ஆயிரத்து 419 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டது. மாரி மழை உரிய காலப்பகுதியில் பெய்யாமல் பொய்த்தமை மற்றும் கடும் வறட்சியோடு கூடிய வெப்பநிலை நெற் செய்கையில் எதிர்பாராத பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மதிப்பீடுகளின் பிரகாரம் நெற் செய்கையில் 7, 900 ஹெக்ரேயர் சேதமடைந்திருப்பதாக அறியப்பட்டுள்ளது. இது மொத்த நெற் செய்கையில் 72 வீதமாகும்.

வயல்களில் தண்ணீர் தேங்கி நிற்காத நிலையில் புல் பூண்டுகள் மற்றும் களைகள் உரிய வேளையில் பிடுங்கி அழிக்கவோ களை நாசினிகளை விசிறவோ முடியாமல் போய்விட்டதால் நெற்பயிர்கள் வளர்ச்சியிலும் பார்க்க களைகளின் வளர்ச்சி கூடியுள்ளது.

நெற்செய்கை ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் சேத விவரங்கள் உரிய முறையில் திரட்டப்பட்டுள்ளன. பாதிப்புக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டுள்ளது - என்றார். (வ-11)

## மாத்திரை மாறியதால் 14 நாள் சிசு உயிரிழப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

மருந்து வில்லையை மாறி வழங்கியதால் 14 நாள்களேயான சிசு உயிரிழந்தது என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மாவிட்டபுரம் நல்லிணக்க புரத்தில் வசிக்கும் 23 வயது தயாருக்கு ஓர் ஆண் குழந்தை 8 மாதத்தில் பிறந்தது. குழந்தை சுகதேகியாகவே காணப்பட்டது. எனினும் 8 மாதத்தில் பிறந்த குழந்தைக்கு என்று பீகோ மாத்திரை வழங்கப்பட்டது.

தாயாருக்கும் குருதி அழுத்தம் இருந்தமையினால், அவருக்கும் மாத்திரை வழங்கப்பட்டது. இவை இரண்டும் ஒரே நிறத்திலானவை.

இந்த நிலையில் கடந்த 13ஆம் திகதி மாலையில் குழந்தையின் தந்தை கடற்றொழிலுக்குச் சென்றிருந்தார். குழந்தைக்கு தாயார் மருந்து பருக்கியுள்ளார். நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் குழந்தை மூச்சு விட சிரமப்படுவதனை அவதானித்த தாயார் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்ப்பித்தார். மேலதிக சிகிச்சைக்காக குழந்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டது. சிகிச்சை பயனின்றி சிசு உயிரிழந்தது என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (வ-8-101)

## ஆஸி. – இலங்கை இடையே இரு உடன்பாடுகள் கைச்சாத்து

(கான்பராவில் இருந்து இ.அ.தேவறாஜன்)

ஆஸ்திரேலியா - இலங்கை இடையே நேற்று இரண்டு புரிந்துணர்வு உடன்பாடுகள் கைச்சாத்திடப்பட்டன.

அபிவிருத்தி ஒத்துழைப்பு, விளையாட்டு ஒத்துழைப்பு ஆகிய உடன்பாடுகளே இவ்வாறு எட்டப்பட்டன.

ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தலைநகரான கான்பராவில் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஆஸ்திரேலிய அரச தலைவர் மல்கம் ரேன்புல்லைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது இந்த இரு உடன்பாடுகளும் கைச்சாத்திடப்பட்டன. (வ-தி)

### 11 தமிழர்கள் கடத்திக் கொலைக் குற்றச்சாட்டு

## கடற்படையினரைக் காப்பாற்ற அரச உயர்மட்டத்தில் அழுத்தம்

யாழ்ப்பாணம், பெப். 16

தமிழர்கள் 11 பேரைக் கடத்திச் சென்று கொலை செய்த வழக்கில், கடற்படையைச் சேர்ந்த 10 அதிகாரிகளை அடுத்த வாரத்துக்குள் கைது செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு அரசியல் உயர்மட்டத்தில் இருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

திருகோணமலையில் 5 பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை கடத்திச் சென்று கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவர்கள் என்ற வலுவான சான்றுகள் உள்ள 11 கடற்படை அதிகாரிகளைக் கைது செய்யும் முயற்சியிலேயே குற்றப்புலனாய்வுப் பிரிவினர் இறங்கியுள்ளனர்.

இந்தக் கடத்தல்கள் கொலைகளில் இவர்கள் சம்பந்தப்பட்டுள்ளமை தொடர்பான உறுதியான சான்றுகள் குறித்த சாதகமான தகவல்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் உள்ள நிலையில், கடற்படையினரைக் காவலில் எடுப்பது தவிர்க்க முடியாது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

'அவர்கள் போர் வீரர்களாக இருந்தாலும், நாட்டில் உள்ள எவரையும் கொலை செய்வதற்கு உரிமையில்லை, இழிவான குற்றங்களில் ஈடுபடுவதற்கு சீருடையின் அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது என்ற உண்மையை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும்.

இந்த கடற்படையினர், தமது சீருடையின் அதிகாரத்தைப் பயன்படுத்தி கொள்ளைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே கடற்படை லெப். கொமாண்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு அரசியல் மட்டத்தில் தடைகள் ஏற்படுத்தப்பட்டால் அந்தச் சூழலில் என்ன செய்வதென்று தெரியவில்லை. அவ்வாறு நடந்து கொண்டால், குற்றப் புலனாய்வுப் பிரிவின் மீதான நம்பிக்கையை மக்கள் இழப்பார்கள்' என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் மூத்த அதிகாரி ஒருவர் கொழும்பு ஊடகத்துக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட கோட்டை நீதிவான், சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு உத்தரவிட்டிருந்தார். (வ-5)

## அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு விருது

யாழ்ப்பாணம்.பெப்.16

இந்து சமய அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான தேசிய ஆக்கத்திறன் விருது வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் 18ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு 4இல் அமைந்துள்ள பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்து மத அலுவல்கள் அமைச்சு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன. (வ-ரி)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## புதுக்குடியிருப்பு...

இருப்பினும் போராட்டம் தொடர்ந்து முன் னெடுக்கப்படுகிறது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்னால் நில மீட்புக்காகப் போராடி வரும் மக் கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் நீராகாரம் எதுவுமின்றி உணவு ஒறுப்புப் போராட்டத்தை சுழற்சி முறையில் ஆரம்பித்துள்ளனர். முதல் கட்டமாக 3 பேர் உணவு ஒறுப்பை ஆரம்பித்திருந்தனர்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட் டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவ ணபவன் இந்த மக்களை நேற்றுச் சந்தித்தார். இதன்போது ஒருவர் 'அகதியாக அலைந்து திரிகின்றோம். இந்தக் கடையை நடத்திப் போட்டுத்தான் வெளிக்கிட்ட நாங்கள் இன்றும் அகதியாக அலைகின்றோம்' என்று அழுதழுது சொல்லிக் கொண்டிருக்கும் போதே மயக்கமடைந்து விழுந்தார். உடனடியாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் மருத்துவர் போராட்டக்களத்துக்கு வந்தார். அவரைப் பரிசோதித்தார்.

இதன் பின்னர் அங்கு உணவு ஒறுப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூவரையும் அவர் சோதனை செய்தார். போராட்டக்காரர்களின் உடலில் குளுக்கோசின் அளவு குறைந்துள்ள துடன், குருதி அமுக்கமும் குறைந்திருப்பதாக மருத்துவர் தெரிவித்தார்.

நிலம் விடுவிக்கும் வரையில் போராட்டம் தொடரும் என்று அந்த மக் கள் தெரிவித்தனர். அத்துடன் இன்றைய தினம் வேறு மூவர் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றும் குறிப்பிடப்பட்டது. (வ-5-7)



# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்களின் காணிகளே படைகள் வசம்

## பிரிட்டன் உயர் தூதுவரிடம் கிழக்கு முதலமைச்சர் எடுத்துரைப்பு



திருமலை,பெப்.16

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் படையினர் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் பல இன்னமும் விடுவிக்கப்படாமை தொடர்பில் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், இலங்கைக்கான பிரிட்டன் உயர்ஸ்தானிகரிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

பிரிட்டன் உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டவுரிஸ், கிழக்கு முதலமைச்சருக் கிடையிலான சந்திப்பு நேற்று திருகோணமலையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன் போது கிழக்கு முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

படையினரின் ஆதிக்கத்திலுள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் காணிகள் விடுவிக்கப்படுவதன் ஊடாக சிறுபான்மையினரின் நம்பிக்கையை வெற்றிக் கொள்வதற்கு ஏதுவாக அமையும். அரசமைப்புத் திருத்தத்தினூடாக சிறுபான்மையினருக்கான நிரந்தரமாக பாதுகாப்பானதீர்வொன்றை பெறுவதுதொடர்பில் சிறுபான்மை மக்கள் ஆர்வமாக உள்ளனர்.

கிழக்கு மாகாண கல்வித் துறையை மேம்படுத்துவதற்கான உதவி நிகழ்ச்சித் திட்டமொன்றை உருவாக்க வேண்டும். அதனூடாக பௌதிக வளப்பற்றாக் குறையுடன் இயங்கும் கிழக்கு மாகாணத்தின் பின்தங்கிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் கட்டடங்கள் நிர்மாணம் மற்றும் தொழில் நுட்ப வசதிகளை ஏற்படுத்தல் போன்றவற்றுக்கு பிரிட்டனின் ஒத்துழைப்பு வேண்டப்படுகின்றது.

மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதிகள் குறைக்கப்பட்டுள்ளதால் மாகாண சபைகளின் கீழுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதில் பெரும் சிக்கல் நிலை தோன்றியுள்ளது. அதேவேளை கிழக்கின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் பிரிட்டன் உதவ வேண்டும் என்றும் முதலமைச்சர், உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக் கொண்டார்.

கிழக்கு மாகாண அபிவிருத்தி தொடர்பில் முதலமைச்சர் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் பிரிட்டன் உயர்ஸ்தானிகர் தமது பாராட்டுக்களை இதன் போது தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர், காணி அமைச்சர் ஆரியவதி கலப்பதி மற்றும் முதலமைச்சரின் செய லாளர் யூ. எல். அப்துல் அஸீஸ் உட்பட பிரிட்டன் உயர்ஸ்தானி கரால யத்தின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ஐ-46)

---

அரசு நிர்ணயித்த விலையில்

# சங்கக் கடையிலும் அரிசி கிடையாது

## மக்கள் குற்றச்சாட்டு

யாழ். மாவட்டத்தில் கட்டுப்பாட்டு விலையில் அரிசி விற்பனை கேள்விக்குறியாகிய நிலையில் தனியார் துறையினர் மட்டுமல்ல பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களும் அதிகரித்த விலையிலேயே அரிசியை விற்பனை செய்கின்றன. அரிசி ஒரு கிலோ 90 ரூபாவுக்கு மேல் நூறு ரூபா வரையும் விற்பனையாகின்றது.

அரசு அண்மையில் அறிவித்த கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்பனை செய்யாமல் தனியார் துறையினர் அரிசி வியாபார நடவடிக்கையை மேற்கொண்டு வரும் அதேநேரம், பொது நிறுவனங்களான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் தனியார் துறையினருக்குச் சமமான நிலையில் அரிசி வியாபார நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றன.

அரிசியைக் கூடிய விலைக்குக் கொள்வனவு செய்து அரசு அறிவித்துள்ள கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்வது பெருமளவில் நட்டத்தை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். அரசு குறைந்த விலையில் அரிசியை வழங்கினால் கட்டுப்பாட்டு விலைக்கு அரிசியை விற்பனை செய்ய முடியும் என்று வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. இதே கருத்தையே பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகங்களும் வலியுறுத்துகின்றன.

அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசியை அதிகரித்த விலையில் விற்பனை செய்வதோடு அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையைக் காரணம் காட்டி நெல்லை மிகக் குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்வதற்கு முயற்சிப்பதால் தாங்கள் எதிர்பாராத பொருளாதார இழப்புக்கு உள்ளாக வேண்டி இருப்பதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது. (வ-1)

---

# வடக்கு ஆசிரியர்கள் மூவர் பணி நீக்கம் செய்யப்பட்டதை கண்டிக்கிறது தமிழாசிரியர் சங்கம்

மட்டக்களப்பு,பெப்.16

இடமாற்றத்தின் போது இழைக்கப்பட்ட அநீதியைச் சுட்டிக் காட்டிய வடமாகாணத்தைச் சேர்ந்த 3 ஆசிரியர்கள், பழிதீர்க்கும் விதமாக பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.- இவ்வாறு கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். ஜெயராஜா தெரிவித்தார்.

வடமாகாணத்தைச் சேர்ந்த 3 ஆசிரியர்கள் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் பதவி நீக்கம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து கிழக்கு மாகாணத் தமிழாசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தெரிவித்ததாவது:

இடமாற்றங்களின்போது தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைத் தட்டிக் கேட்ட ஆசிரியர்கள், தன்னைத் தாக்க வந்தார்கள் எனக்கூறி, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் கடந்த ஜனவரி 11 ஆம் திகதி 3 ஆசிரியர்கள் பழிவாங்கப்பட்ட சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமானது.

குறித்த ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டது நாகரிகமற்ற செயலாகும். இதனை அரச உத்தியோகத்தர் மீது அரச அதிகாரிகள் மேற்கொள்ளும் அராஜக செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

போர்க்காலத்தில் கூட கல்வியில் முன்னணியில் இருந்த வடமாகாணம் தற்பொழுது, கல்வித் தரப்படுத்தலில் எட்டாவது மாகாணமாகக் கணிக்கப்பட்டுள்ளது. வடமாகாணக் கல்வி அமைச்சரே இதற்குப் பொறுப்புக் கூறவேண்டியவராகும்.

இடமாற்றங்களின் போது இவ்வளவு குளறுபடியானால், நியமன அதிகாரங்கள் வழங்கப்பட்டால், நிலமை எவ்வாறு இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளது.

எவ்வாறிருப்பினும், வட மாகாண ஆசிரிய சமூகமும், வடமாகாணத்தில் இயங்கும் ஆசிரியத் தொழிற் சங்கங்களும் பலமுள்ளதாக மாற வேண்டும். தங்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்களை ஆசிரிய சமூகம் ஜனநாயக ரீதியில் வன்முறையற்ற முன்மாதிரியான வழிமுறையில் தட்டிக் கேட்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

---

# முல்லை நீதிமன்றால் மணல் ஏலவிற்பனை

முல்லைத்தீவு,பெப்.16

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மன்றால் எதிர்வரும் 22 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு மணல் ஏலவிற்பனை செய்யப்படும்.

பனிச்சங்குளம், கிழவன் குளம் ஆகிய இடங்களில் பறிமுதல் செய்யப்பட்ட மணலே இவ்வாறு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மன்றப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஐ-7)

---

# திருக்கேதீஸ்வரத்துக்குப் பாதயாத்திரை

யாழ்ப்பாணம்,பெப்.16

மகா சிவராத்திரியை முன்னிட்டு எதிர் வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு நல்லூரில் இருந்து திருக்கேதீஸ்வரத்து க்கான பாதயாத்திரை இடம்பெறவுள்ளது. எனவே பாதயாத்திரையாகச் செல்ல விரும்பும் சிவனடியார்கள் அன் றைய தினம் பங்குபற்றலாம் என்று உலக சைவத்திருச்சபை அமைப் பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

---

# சாயி சமர்ப்பண உரை

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இராமநாதன் சாலையில் அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிறுவனத்தின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு சாயி சமர்ப்பண உரை நாளை வெள்ளிக்கிழமை மாலை 5மணியிலிருந்து 6மேணிவரை நிறுவனத்தின் மண்டபத்தில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஓய்வுநிலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் இலங்கை சத்தியசாயி பன்னாட்டு நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் பிரதி மத்திய இணைப்பாளருமான மருத்துவர் வி.ஜெகநாதனின் சாயியுடனான அனுபவப்பகிர்வு இடம்பெறவுள்ளது.

அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு நிறுவனத்தலைவர் கேட்டுள்ளார். (வ)

சிவபூமி முதியோர் இல்ல
10 ஆவது ஆண்டு நினைவாக
புதிய கட்டடம் திறப்பு விழா அழைப்பு
இடம்
சிவபூமி முதியோர் இல்லம்,
வழக்கம்பராய், சுழிபுரம்
காலம்
16.02.2017 வியாழக்கிழமை மு.ப 9.30 மணி
தலைமை
கலாநிதி . ஆறு.திருமுருகன்
(தலைவர் - சிவபூமி அறக்கட்டளை)
பிரதம விருந்தினர்
திருமதி ஜெயலக்ஷ்மி சாரட
(மெல்போன் - ஆஸ்திரேலியா)
சிறப்பு விருந்தினர்
திரு .S.P.ஏஞ்சல்
(நீர்கொழும்பு)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நன்றி
சிவபூமி முதியோர் இல்லம், வழக்கம்பராய், சுழிபுரம். 021 225 0085
சிவபூமி அறக்கட்டளை கோண்டாவில், இலங்கை. 021 222 7938
Sivapoomi@gmail.com

பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்களான
திரு. ஜெ. கோகுலவாசன்,
திருமதி சுயாதினி யோசப் அனுரா ஆகியோர்
அதிபர் தரம் - III

பரீட்சையில் சித்தியடைந்து 02.01.2017 தொடக்கம் திரு.ஜெ. கோகுலவாசன் அவர்கள் யா/வட்டு சுப்பிரமணிய வித்தியாசாலை அதிபராகவும், திருமதி சு.யோசப் அனுரா அவர்கள் எமது பாடசாலையின் பிரதி அதிபராகவும் பதவி உயர்வுபெற்றமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள்.
யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் அராலி
(J.6185) (13.18)

## வானூர்தி நிலையப் பாதுகாப்புக்கு நாய்கள்

கட்டுநாயக்க வானூர் நிலையத்தின் பாதுகாப்புக்காக 20 நாய்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள் ளது. போக்குவரத்து மற்றும் சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா முன்வைத்த அமைச்சரவைப் பத்தி ரத்துக்கு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது.

வானூர்தி நிலையத் தில் வெடிபொருள்கள், ஆயுதங்கள், போதைப் பொருள்கள், பணம் மற்றும் சட்டவிரோதப் பொருள்களைக் கண்டு பிடிப்பதற்கான பயிற்சிகள் 20 நாய்களுக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-ஜ)

**உடனடி வேலைவாய்ப்பு**

எமது Dynamic Organization Pvt.LTD வடக்கில் வவுனியா, மன்னார்,கிளிநொச்சி முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் திறக்கப்பட இருக்கும் கிளைகளுக்கு O/L,A/L படித்த இளைஞர்கள் தேவை.

- ★ பயிற்சி அளிக்கப்பட்டு நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்படும்
- ★ பயிற்சியின் போது 15000 மேல்
- ★ வயதெல்லை 18-35
- ★ தங்குமிட வசதி உண்டு.

**077 230 2795, 077 664 4442**

## அசிட் வீசி மாணவி கொலை;
# மேலதிக சாட்சியங்களின் விசாரணைகள் மார்ச் 6இல்

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்ப்பாணம், இளவாளையில் மாணவி ஒருவர் அசிட் வீசப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கில் மேலதிக சாட்சியங்களின் விசாரணைக்கள் எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

2010ஆம் ஆண்டு இரவு 9 மணியளவில் மாணவி ஒருவர் மீது அசிட் வீசப்பட்டது. வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்த போதே அவர் மீது இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. அசிட் வீசிய நபர் தப்பிச் சென்றார். படுகாயமடைந்த மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு 55 நாட் கள் சிகிச்சை பெற்றார். எனினும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

மாணவிக்கு அசிட் வீசிய சம்பவம் காதல் விவகாரத்தால் இடம்பெற்றது என்று உறவினர்களால் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், இந்த காதல் விவகாரம் தொடர்பில் இளைஞன் ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. அந்த இளைஞனைப் பொலிஸார் கைது செய்தனர். இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பான சுருக்க முறையற்ற விசாரணைகள் மல்லாகம் நீதிவான் மன்றில் இடம்பெற்றன. மேலதிக நடவடிக்கைக்காக வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு நீதிவான் மன்றால் பாரப்படுத்தப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞனுக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்ப்பாணம் மேல் மன்றில் குற்றப்ப கிர்வுப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைகளுக்கு எடுத்து கொள்ளப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, முக்கிய சாட்சியாக இனங்காணப்பட்ட மாணவியின் தாயாரைச் சாட்சியமளிக்க சந்தர்ப்பம் வழங்கினார்.

'சம்பவம் இடம்பெற்ற அன்று இரவு 9.30 மணியளவில் நான் வீட்டில் சமயலறையில் இருந்தேன். எனது மகள் வீட்டின் முன் விறாந்தையில் இரவு உணவு சாப்பிட்டுக்கொண்டிருந் தார். அந்த நேரம் திடீரென மகள் அம்மா என்று அபயக் குரல் எழுப்பினார். தனக்கு ஏதோ ஒன்று ஊற்றப்பட்டதாகவும் உடல் எல்லாம் எரிவதாகவும் கூறி அவர் நிலத்தினுள் உருண்டார். நாம் உடனடியாக வைத்தியசாலையில் மகளைச் சேர்ப்பித்தோம். மருத்துவ பரிசோதனையில் மகள் மீது அசிட் ஊற்றப்பட்டமை தெரியவந்தது. எனினும் மகள் மீது யார் அசிட் ஊற்றினார்கள் என நான் காணவில்லை. மகளும் அதை அறிந்திருக்கவில்லை. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் எனது மகளைக் காதலித்து வந்ததும் அலைபேசியில் குறுந்தகவல் மூலம் மிரட்டல் விட்டதையும் அறிந்தே பொலிஸாருக்கு தகவல் வழங்கியிருந்தேன்' என்று தனது வாக்குமூலத்தில் மாணவியின் தாயார் தெரிவித்தார்.

'55 நாட்கள் மகள் வைத்தியசாலையில் இருந்த பொழுதும் தனக்கு அசிட் ஊற்றியவர் யார் என்பதைக் கூறவில்லையா' என்று சாட்சியிடம் மன்று கேள்வியெழுப்பியது.

அதற்கு பதிலளித்த சாட்சியான தயார் 'மகளுக்கும் யார் என்று தெரியவில்லை. ஏனெனில் மகளுக்கு பின்புறமாக நின்றுதான் அசிட் வீசப்பட்டுள்ளது - என்றார்.

மேலதிக சாட்சியாளர்களிடம் விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்று தெரிவித்த நீதிபதி இளஞ்செழியன் வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ-21,ரி)

**அறிவித்தல்**

12.02.2017 இல் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுக் கோரல் ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனத் தின் வேம்பன் வீதி, உரும்பிராயில் அமைந்திருக்கும் கொங்கிறீற் பகுதியில் இருக்கும் மின்கம்பங்கள் மற்றும் தொலைபேசிக் கம்பங்கள் விலை மனுக்கோரல் இரத்துச் செய்யப்படுகிறது.

தலைவர்
ஸ்ரீலங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்.

## தாய்மொழித்தின விழா வடமராட்சியில்

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கமும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் இணைந்து நடத்தும் பன்னாட்டு தாய்மொழித்தின விழா எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறும். (வ)

## தென்னையிலிருந்து தவறி வீழ்ந்த முதியவர் உயிரிழப்பு

சாவகச்சேரி, பெப். 16

30 அடி உயர தென்னை மரத்திலிருந்து தவறி வீழந்த் முதியவர் சிகிச்சை பயனின்றி ஐந்து தினங்களின் பின்னர் சாவடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மந்துவில் கிழக்கைச் சேர்ந்த வேலன் யோகராசா (வயது-63 ) என்னும் முதியவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கடந்தவியாழக்கிழமை மாலை மந்துவில் கிழக்குப் பகுதியில் கள் எடுப்பதற்காக மரத்தில் ஏறியபோது அவர் தவறி வீழ்ந்தார். இடுப்பு மற்றும் கழுத்துப் பகுதிகளில் அவருக்குப் பாதிப்பு ஏற்பட்டது. சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட முதியவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரின் சாவு தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிவான் மன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்டு பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலம் விசாரணைகளை நடாத்தி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (வ - 9)

**வலி - வடக்கு ஓய்வூதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம் (வ - து)**
**பதிவு இல - N.J.71**
**வருடாந்தப் பொதுக்கூட்ட அறிவித்தல்**

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 18.03.2017 சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு துர்க்காபுரம் அரிமாக் கழக மண்டபத்தில் நடைபெறும். தனிநபர் பிரேரணைகள் 01.03.2017 புதன்கிழமைக்கு முன்னதாக ஏற்றுக் கொள்ளப் படும்.

சி.நித்தியானந்தம்
தலைவர்.

மா.கதிரமலைப்பிள்ளை
செயலாளர்.
சாத்தா கலட்டி
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.
077 190 7995

அங்கத்தவர்களாக சேர விரும்பும் ஓய்வூதியர்களும் மேற்காண் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

**வேலையாள்கள் தேவை**

சாவகச்சேரியில் அமைந்துள்ள பால்பண்ணை ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக் கூடிய வேலையாள்கள் தேவை.

**077 737 7799**

**வீடு விற்பனைக்கு**

கோண்டாவில் மேற்கு. நவரட்ணராஜா வீதியில் நான்கு பக்க சுற்றுமதிலுடன் 2 பரப்பு 11 குளி காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.

**076 390 9732**

**காவலன் மாங்கல்ய சேவை**
கல்வி வீதி, சங்கரத்தை, வட்டுக்கோட்டை

பதிவு இல: VW/FIN/BR/1/26/2016

மணமக்கள் தேடும் தங்கள் உறவுகளை காவலன் மாங்கல்ய சேவை தேடிக் கொடுப்பதற்குத் தயாராக உள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

உள்நாடு, வெளிநாடு, தனியார், அரச உத்தியோகத்தர்களுக்கும்.

தொடர்புகளுக்கு: அ.சி.சேதுகாவலன்
077 886 4348 Viber : 077 117 4872
பதிவுக்கட்டணம் ஆகக்குறைந்தது 100/-மட்டுமே

**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவகத்திற்கு.

01. Heavy Vehicle Driver. (Colombo - Jaffna)
02. Marketing Sales & Executives for Distribution.
03. Accounting Staff (Ms office, Ms Excel, Quick Book).

தேவை. மேலதிக விவரங்களுக்கு

KINGS ELECTRONICS(PVT) LTD
No.12, Pointpedro Road, Jaffna.
021 454 6699

**ஆள்கள் தேவை**

சர்வதேச ரீதியில் பிரசித்திபெற்ற முன்னணி கல்வி நிறுவனம் ஒன்றிற்கு யாழ்ப்பாண கிளை அலுவலகத்துக்கு வேலையாள்கள் தேவை.

விருப்பம் உள்ளவர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளவும்.

நேர்முக தேர்வு: 17,18, 19. பெப்ரவரி 2017 காலை.9.00 - பி.ப.4.00 மணிவரை

பதவி: மாணவ ஆலோசகர் / அலுவலகமேலாளர், நிறுவன இணைப்பாளர்.

தகுதி: சரளமாக ஆங்கிலம் பேச, எழுதக்கூடியவர் மற்றும் கணினி அறிவு

வயதெல்லை: 20 - 30

பெண் விண்ணபதாரர்கள் வரவேற்கப்படுவர்.

இல.273, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 454 8464

STUDY IN CANADA
"Study in Canada... Step up in Life"
PROGRAMS OFFERED
• INFORMATION TECHNOLOGY
• BUSINESS ADMINISTRATION
• HOTEL MANAGEMENT
ST.CLAIR
Work permit upon graduation
Scholarship available
Pathway programs
PR options Available
St.Clair College, Windsor, Ontario
Pathway programs : JOIN IN SRILANKA ! COMPLETE IN CANADA !!
First semester in INDIA March'17, Rest in CANADA September'17
Also available direct study programs
Admission Interview on 17th 18th & 19th of Feburary'17
ICGE
TIES, 273, Main street, Northern Province, Jaffna, Srilanka
srilanka@icge.education | www.ICGE.education | (+94) 021 45 48464

### மட்டக்களப்பு எல்லைப்பகுதிகளில்

# காடுகளை அழித்து திட்டமிட்ட குடியமர்வுகள்

### நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டு

செங்கலடி,பெப்.16
மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதிகளில் உள்ள காடுகளை, வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்கள் அழித்து, அங்கு திட்டமிட்ட குடியேற்றங்களை மேற்கொள்கின்றனர். அத்துடன பரம்பரையாக பண்ணையாளர்கள் கால்நடை வளர்த்த பகுதிகளில் அத்துமீறி நுழைந்து, பண்ணையாளர்களைத் தாக்குவது, கால்நடைகளைத் துப்பாக்கியால் சுடுவது போன்ற நடவடிக்கைகளும் இன்னும் தொடர்ந்த வண்ணம் உள்ளன.
இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.
மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு பிரதேச ஒருங் கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கோறளைப்பற்று தெற்குப் பிரதேசத்தில் 18 கிராம அலுவலகர் பிரிவுகளில் நூற்றுக் கணக்கான



கிராமங்கள் காணப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை அடிப்படை வசதிகள் இல்லாத மிகவும் பின்தங்கிய கிராமங்கள் ஆகும். பாட சாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை, சுகாதார வசதிகள் இன்மை எனப் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.
அதனால் மாவட்டத்துக்கு என்று நிதி வரும் போது சமனாக பங்கிடும் நடைமுறையில் மாற்றம் கொண்டு வரப்பட்டு, பின்தங்கிய பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# பெண் கிராம அலுவலர் பணிகளுக்கு இடையூறு

### கடற்படைச் சிப்பாய் கைது

கொழும்பு,பெப்.16
பெண் கிராம அலுவலர் ஒருவரின் பணிகளுக்கு இடையூறு விளை வித்தார் என்ற குற்றச்சாட்டில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார் என்று சாலியவெள பொலிஸார் தெரிவித்தனர்.
மதவாச்சி, பூனேவ முகாமில் பணியாற்றும், மேல் புளியன்குளம், பலகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த கடற்படைச் சிப்பாய் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.
கருவலகஸ்வெள பிரதேச செயலகத்தின், மெதகம கிராம அலுவலராகப் பணியாற்றும் பெண் வழங்கிய முறைப் பாட்டை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.
மேல் புளியன்குளம், பலகொல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயதுடைய முதியவர் ஒருவர் கடந்த 10 ஆம் திகதி உயிரிழந்தார். அவரது இறப்புத் தொடர்பில் அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக, சந்தேக நபர் உள்ளிட்ட சிலர் கிராம அலுவலரிடம் சென்றனர்.
குறித்த இறப்புத் தொடர்பில் நான் அறிந்திருக்கவில்லை. அதனால் என்னால் அறிக்கை தர முடியாது' என்று பெண் கிராம அலுவலர் அவர்களிடம் கூறினார்.
இதன் போது சந்தேகநபர், என்னைத் திட்டி எனது பணிகளுக்கு இடையூறு விளைவித்தார் என்று கிராம அலுவலர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார். இதனையடுத்து குறித்த சந்தேகநபரான கடற்படைச் சிப்பாய் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## சைட்டம் பிரதம அதிகாரியின் வாக்குமூலங்களில் முரண்பாடாம்

தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத் துக்கான தெற்காசிய நிறுவகத்தின் (சைட்டம்) பிரதம நிறைவேற்று அதிகாரி மருத்துவர் சமீர சேனாரத்ன வின் கார் மீது, நடத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில், அவர் வழங்கிய வாக்கு மூலங்களில் முரண்பாடு காணப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்த நிலமை தொடர்பாக மூத்த பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்ததாவது:
இந்தச் சம்பவம் தொடர்பாக அரச பகுப்பாய்வாளரின் அறிக்கைக்குக் காத்திருக்கிறோம். எனினும், மருத்துவர் சேனா ரத்னவால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலங்களில் உறுதியற்ற தன்மைகள் காணப் படுகின்றன.
சம்பவம் தொடர்பான கண்காணிப்புக் கமராவின் காட்சிகளை, பொலிஸார் இன்னமும் ஆராய்ந்து வருகின்றனர். அரச பகுப்பாய்வுத் திணைக்களம், சம்பவம் தொடர்பான அறிக்கையை இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் வழங்குவதாகத் தெரிவித்தது. அறிக்கையைச் சமர்ப் பிப்பதற்கு முன்பாக, சில ஆதாரங்களைப் பெற வேண்டியுள்ளது. அவற்றைக் கையளிக்குமாறு பொலிஸாரிடம் கேட்டுள் ளோம்' - என்றார்.
மருத்துவர் சேனாரத்னவின் கார்மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், இந்த மாதம் 6 ஆம் திகதி நடத்திய தாக்குதலில், அவருக்குக் காயம் ஏற்படவில்லை. எனினும், காரின் முன்பக்கக்கண்ணாடிக்குச் சேதம் ஏற்பட்டிருந்தது.
அதைத் தொடர்ந்து, அவரது காரும், அவரது உடைகளும், அரச பகுப்பாய் வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
மருத்துவர் சேனாரத்னவுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஐ)

## கண்ணீர் அஞ்சலி



வலயக்கல்வி அலுவலகம்
கிளிநொச்சி **கணினி வளநிலைய**
முகாமையாளராக
கடமையாற்றும்
**நா.சந்திரமோகன்**
அவர்களின் அன்புத் தாயார்

**தங்கம்மா நாகநாதன்**

அவர்கள் 14.02.2017 காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிசங்கம்**
**வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி.**

## மரண அறிவித்தல்

### திருமதி சற்குணதேவி முத்துலிங்கம்

**(இளைப்பாறிய இரசாயனவியல் ஆசிரியர் - யா/ வயாவிளான் மத்திய கல்லூரி)**



பெற்றோல் நிலைய ஒழுங்கை, உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சற்குணதேவி முத்துலிங்கம் 13.02.2017 திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு - சிவக்கொழுந்து தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் வீ.முத்துலிங்கத்தின் (இளைப்பாறிய உத்தியோகத்தர் இ.போ.ச. கோண்டாவில்) அன்புமனைவியும் நவகாந்த் (ஆசிரியர், யா/ கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), ஷாமிலா (ஆசிரியர், யா/கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயம்), மைதிலி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயும் முருகதர்ஷினி (ஆசிரியர், யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), குகநாதன் (ஆசிரியர், யாழ்/இந்து மகளிர் கல்லூரி), சிவமயூரன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் கோமுகி, பிறவீனா, டிரோசன், சதுர்சன், ஹவிசன், ஜஸ்விகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் கமலேஸ்வரி, சிவபாதசுந்தரம், சிவலோகநாதன் (லண்டன்), சிவானந்தன் (கனடா), சாந்தி (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும் பஞ்சலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர் யாழ்.இந்துக்கல்லூரி) காலஞ்சென்ற இராஜேந்திரம் மற்றும் ஜெயதேவி, சதாஜினி, சற்குணதேவி, காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் தவமலர், பரமயோகன் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2017) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காட்டு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெற்றோல் நிலைய வீதி,**
**உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**077 596 3550, 077 624 4910**

## மரண அறிவித்தல்கள்

### கணேசமூர்த்தி இலம்போதரன்



**மண்ணில் 27.05.1987 விண்ணில் 30.01.2017**

கோவிற்கடவை துன்னாலை மத்தியைப் பிறப்பிடமாக கொண்ட கணேசமூர்த்தி இலம்போதரன் இத்தாலி பலர்மோவில் 30.01.2017 அகால மரணமானார்

அன்னார் கணேசமூர்த்தி கண்ணம்மாள் தம்பதியினரின் பாசமிகு மகனும் நிதாகரன், பிரதீனா, பகீரதன், வாகீசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17.02.2017 வெள்ளிக்கிழமை கோவிற்கடவையில் உள்ள அன்னாரது இல்லத்தில் காலை 8.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேரொண்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோவிற்கடவை,**
**துன்னாலை,**
**கரவெட்டி.**

(AJA/IN/741)
(22,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**



### திருமதி கனகம்மா செல்லையா

12 ஆம் வட்டாரம் புங்குடுதீவை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா செல்லையா 14.02.2017 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடராஜா (தபாலதிபர்), மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான தம்பிராசா, புவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் பேரின்பம், விஜயசுந்தரம் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், பாலசுப்பிரமணியம், புவனேஸ்வரி மற்றும் பராசக்தி ஆகியோ ரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னம்மா, மகேஸ் வரி, கார்த்திகேசு, குமாரசுவாமி மற்றும் நாகேஸ்வரி, சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியும் சறோஜினி-குகேந்திரன், ஜெயலலிதா-ஆறுமுகதாஸ், மகாலக்ஷ்மி-கிருபாகரன், மதீஸ்வரன்-பதுமநிதி, தர்சினி-பிரசன்னா, விக்னேஸ்வரன்-யசோதா, மதிவதனி-துஷியந்தன் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**12 ஆம் வட்டாரம்,**
**புங்குடுதீவு.**

(AJA/419)
(22,17)

தகவல்:
**தம்பிராசா-மகேஸ்வரி**
**(மகள்)**

# டெங்கு நுளம்பு அதிகரிப்புக்கு ஏதுநிலையில் வீட்டு வளாகம்

## மூவருக்கு தண்டம் விதிப்பு

தென்மராட்சி, பெப். 16

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏது நிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த நால்வருக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மாத இறுதியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினர், தென்மராட்சி பிரதேச செயலகத்தினர் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலைய சுற்றாடல் பிரிவினர் ஆகியோர் இணைந்து முன்னெடுத்தனர்.

இதன்போது டெங்கு நுளம்பு அதிகமாகக் காணப்படும் வரணி இடைக்குறிச்சிப் பகுதியில் மதிலில் வைக்கப்பட்டிருந்த பூச்சாடிகள் வெட்டப்பட்டாமை, வாழை மர அடிக் குற்றிகள், கால்நடைகளுக்கு வைக்கப்பட்டிருந்த நீர்ப் பாத்திரங்கள் மற்றும் டெங்கு நுளம்பின் குடம்பிகள் காணப்பட்டமை போன்ற குற்றச் சாட்டுகளில் குடியிருப்பாளர்களுக்கு எதிராக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் மன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, வழக்குகளைத் தனித் தனியாக விசாரித்த நீதிவான் நால்வருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதித்தார். (வ - 9)

# நாவற்குழி வீட்டுத் திட்ட மக்கள் யாழ். செயலகத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம் பெப் 16

அதிகாரிகளை நம்பி வீட்டுக்கான அத்திபாரத்தை வெட்டி விட்டோம். ஆனால் வீட்டுத் திட்ட நிதி இன்னும் கிடைக்கவில்லை என்று தெரிவித்து நாவற்குழி வீட்டுத் திட்ட மக்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குள் உள்நுழைந்து நேற்றையதினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாவற்குழிப் பகுதியில் காணி அற்ற மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டன. அவர்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. வீட்டுத் திட்டத்தை வழங்குவதற்காக தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அண்மையில் நாவற்குழி வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல்லும் நாட்டப்பட்டது. எனினும் வீட்டுத்திட்ட வேலைகளுக்கான உதவித்தொகை இன்றுவரை தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தியே அவர்கள் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்குள் உள்நுழைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலில் போராட்டக்காரர்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் போராட்டக்காரர்களின் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும் என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்தனர். இதனை ஏற்க மறுத்த போராட்டக்காரர்கள் அருகில் இருந்த யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தை நோக்கி படையெடுத்தனர்.

மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நின்ற போராட்டக்காரர்கள் ஒரு கட்டத்தில் தங்களை உள்ளே விடுமாறு கோசங்களை எழுப்பி யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் வரவேற்பு நுழைவாயினுள் உட்புகுந்து வரவேற்பு வாயிலை இடைமறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டக்காரர்கள் நுழைவாயினுள் அமர்ந்த படி தங்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை இந்த இடத்தை விட்டு விலக மாட்டோம் எனக் கூறி அவ்விடத்தை விட்டு விலகாது போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்,

நாவற்குழிப் பகுதியில் வசித்து வரும் எமக்கு வீட்டுத்திட்டம் தருகின்றோம் என்று அதிகாரிகள் அறிவித்தனர். இதனை அறிந்து நாங்கள் மிகவும் சந்தோசமடைந்தோம். ஆனால் இப்போது அடிக்கல் நடப்பட்டதுடன் மட்டும் அந்தப் பணிகள் நின்று விட்டன. அடிக்கல் நடப்படுவதால் எங்கள் வீட்டுத்திட்ட வேலைகளுக்கான பணம் கிடைத்துவிடும் என்று நம்பி நாங்கள் மற்றவர்களிடம் கடன் வாங்கி வீடுகளுக்கான அத்திவாரங்கள் வெட்டி விட்டோம். ஆனால் எங்களுக்கு பணம் இன்றுவரை வந்து சேரவில்லை. அத்துடன் இப்போது இருக்க இடம் கூட இல்லாமல் குளிரிலும் வெயிலும் குழந்தைகள், பெண்கள் என அனைவரும் மிகவும் துன்பப்பட்டு வருகின்றோம். ஆகவே எங்களுக்கான தீர்வை உடனடியாக வழங்குங்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

போராட்டக்காரர்களை நேரில் வந்து சந்தித்த யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்ததாவது:

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உங்களின் பிரச்சினைகளை நானும் உணர்கின்றேன். உங்களுக்கான வீட்டுத்திட்டத்தின் ஆரம்ப வேலைகளை நான்தான் தொடக்கி வைத்தேன். ஆகவே உங்களின் பிரச்சினைகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படும். உங்கள் பிரச்சனை தொடர்பில் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் கதைத்து உங்களுக்கான தீர்வுகள் விரைவில் வழங்கப்படும் – என்றார்.

மாவட்டச் செயலரின் கருத்தை ஏற்றுக்கொண்ட போராட்டக்காரர்கள் தங்கள் போராட்டத்தை கைவிட்டு மாவட்டச் செயலகத்திலிருந்து வெளியேறினர். (வ-8)

# சத்திர சிகிச்சை மருத்துவர்களுக்கு புதிய விதிமுறை

சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படுகின்ற நோயாளர் ஒருவர் அபாயக்கட்டத்தை தாண்டும் வரை, அந்தச் சத்திரசிகிச்சையை மேற்கொண்ட மருத்துவர் நோயாளிக்கு அருகில் இருக்க வேண்டும் என்ற புதிய விதிமுறையை அறிமுகப்படுத்த சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்ததாவது: பல தனியார்வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டவுடன் சத்திர சிகிச்சையை மேற்கொண்ட வைத்தியர்கள் வேறு கடமைகளுக்காகச் செல்கின்றனர். அதனால் நோயாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது.

அதற்கமைவாக இந்தப் புதிய விதிமுறை கொண்டு வரப்படவுள்ளது. அதனை மருத்துவர்கள் பின்பற்றுகிறார்களா என்பதை மேற்பார்வை செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்படும். அதன் மூலம் தனியார் வைத்தியசாலைகளில் சத்திரசிகிச்சைகளுக்காகச் செலுத்தும் அதிக கட்டணத்துக்கு நிகரான சேவையை நோயாளர்கள் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்–என்றார். (ஐ)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
அமரர் நாகலிங்கம் சிங்கராசா
தோற்றம் 15.06.1946
மறைவு 28.02.2016
திதி: சஷ்டி
வையத்துள் வாழ்வாங்கு
வாழ்ந்து வாழவைத்து
பாருளோர் புகழ்ந்தேத்த
பெருமையாய் வாழ்ந்த தெய்வம்
இகவாழ்வில் சுமை துறந்து
இறைபணியைத் தொடர்ந்திட
குமரனடி போற்றி செய்வோம்
குடும்பத்தினர்.
கைதடிவடக்கு, கைதடி.

நீங்கா நினைவுகளோடு கழியும் ஓராண்டு
அமரர்
இராமலிங்கம் செல்லத்துரை
(முன்னாள் அரச ஒப்பந்தகாரர்)
மண்ணில் 10.02.1933
விண்ணில் 28.02.2016
(திதி: மாசிமாத அபரபக்க சஷ்டி)

மண்பற்றும் மதப்பற்றும் மாசிலாக் குணமுங் கொண்டு
எண்பத்து மூன்றாண்டு இப்புவியில் வாழ்ந்தீர்கள்
கண்பட்டுப் போனதுவோ காசினியை விட்டின்று
ஓராண்டு சென்றாலும் ஓயாது எம் கவலை
அன்பாலும் பண்பாலும் ஆதரித்து வளர்த்தவரே
என்றும் எங்கள் இதயமதில் இருந்தெம்மை வாழ்விப்பீர்
எத்தனைதான் உறவிருந்தும் எந்தையைப் போல் வந்திடுமோ
கேதுவூர் பிள்ளையார் சீரடிக்கீழ் அமைதி கொள்வீர்
இன்று (16.02.2017) முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
வாதரவத்தை, புத்தூர். குடும்பத்தினர்.

## வீட்டு உரிமையாளர் கொலை

# சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்க மேல் நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்ப்பாண நகர் மார்ட்டீன் வீதியில் உள்ள வீடு ஒன்றில் அதன் உரிமையாளரைக் கொலை செய்து அவர் வீட்டின் முற்றத்தில் புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கின் சந்தேக நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். 2009ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தக் கொலை சம்பவம் தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் இடம்பெறுகிறது. யழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை வழக்கு விசாரணைக்காக எடுத்து கொள்ளப்பட்டது.

விசாரணைகளின் போது கொலை செய்யப்பட்ட வீட்டு உரிமையாளரின் உறவினர்கள், சம்பவத்தை விசாரித்த யாழ்ப்பாண குற்றத்தடுப்புப் பிரிவின் அப்போதைய உப பரிசோதகர் போன்றவர்களின் சாட்சிகள் மன்றில் பதிவு செய்யப்பட்டன. சாட்சியப் பதிவுகளைத் தொடர்ந்து குறித்த வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 13ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக அறிவித்த நீதிபதி, சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

**பின்னணி**

2009 ஆம் ஆண்டு ஜெரோம் என்பவர் அவருடைய மனைவியுடன் யாழ்ப்பாணம் மார்ட்டீன் வீதியில் உள்ள வீடு ஒன்றை வாடகை பெற்றுக் குடியிருந்தார். அந்த வீட்டின் உரிமையாளரான லில்லி மேரியுடன் அவர் அடிக்கடி முரண்பாட்டில் ஈடுபட்டு வந்தார் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் வீட்டின் உரிமையாளர் காணமல் போயுள்ளார் என்று அவரது உறவினர்களிடம் ஜெரோம் தெரிவித்திருந்தார். உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டனர். ஜெரோமுக்கும் அவரது மனைவிக்கும் இடையில் குடும்பத்தகராறு ஏற்பட்டது. மனைவி அவரை விட்டுப் பிரிந்து காணாமல் போயிருந்த உரிமையாளரின் உறவினர் ஒருவருடைய வீட்டின் அருகில் குடியமர்ந்தார். மூன்று மாதங்கள் கடந்தன. காணாமற்போன வீட்டின் உரிமையாளரை எனது கணவன் ஜெரோமே கொலை செய்தார். அவரது சடலம் வீட்டின் முற்றத்திலேயே புதைக்கப்பட்டுள்ளது என்று ஜெரோமின் மனைவி கொலை செய்யப்பட்டவரின் உறவினர்களிடம் தெரிவித்தார். உறவினர்கள் இதுபற்றி உடனடியாக யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான், மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி ஆகியோரின் முன்னிலையில் ஜெரோமின் மனைவி உடலம் புதைக்கப்பட்ட இடத்தை அடையாளம் காட்டினார். உடலம் தோண்டி எடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்டது. ஜெரோம் கைதுசெய்யப்பட்டார். (வ-21,ரி)

# மெய்வன்மைப் போட்டி

வட்டுக்கோட்டை, பெப். 16

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் மெய் வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குத் முதன்மை விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர் லயன் பி.கே.பி.பாலசங்கரும், சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் அ.கிருபாகரனும் கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை அதிபர் மா. செல்வராசாவும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# கட்டடத் திறப்பு விழா

யாழ்ப்பாணம் பெப் 16

சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தின் திறப்பு விழா இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக திருமதி.ஜெயலக்ஷ்மி சாரட், சிறப்பு விருந்தினராக எஸ்.பி.ஏஞ்சல் ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-8)

## கிளி. பொருளாதார சந்தை உள்ளூர் வர்த்தகர்களுக்கு

### குறைந்த வாடகையில் வழங்குவதற்கு நடவடிக்கை

கிளிநொச்சி, பெப்.16
கிளிநொச்சியில் உள்ள பொருளாதாரச் சந்தைக் கட்டடம் நீண்ட காலமாக உபயோகிக்கப்படாதுள்ளது.
அதைக் குறைந்த வாடகையில் உள்ளூர் வர்த்தகர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கனகபுரத்தில் உள்ள பொருளாதார சந்தைக் கட்டடம் நீண்டகாலமாக உபயோகிக்கப்படாதுள்ளது. அதில் 40 கடைகள் உள்ளன. அதை உள்ளூர் உற்பத்திகள் விற்பனை மையமாக மாற்றும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அதற்குரிய விவரங்கள் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளன.
கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு விற்பனை நிலையங்கள் வழங்கப்படும். மாதாந்தம் 3 ஆயிரத்து 500 ரூபாவை வாடகையாக அறவிட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. விற்பனை நிலையங்களை விரைவில் இயங்க வைக்க எதிர்பார்த்துள்ளோம். - என்றார். (ந-101)

## வெற்றிலை, பழங்கள் விற்பதற்கு மாங்குளம் சந்தையில் கட்டுப்பாடு

முல்லைத்தீவு, பெப்.16
மாங்குளம் பொதுச் சந்தையில் வெற்றிலைக் கடைகள், பழக் கடைகள் தவிர்ந்த இடங்களில் வெற்றிலை,பாக்கு, பழங்கள் விற்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு புதுக்குடியிருக்குப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். சந்தையில் உள்ள வியாபாரிகளின் கோரிக்கையை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
நாம் வாழ்வாதாரத்துக்காக சந்தையில் கடைகளை வாடகைக்கு எடுத்து வியாபாரம் செய்கின்றோம். வெற்றிலை, பாக்கு, பழங்களை மட்டுமே வியாபாரம் செய்கின்றோம். அதில் பெரிதாக வருமானம் கிடைப்பதில்லை. இங்கு பெண்தலைமைக் குடும்பங்களைச் சேர்ந்த பலர் வியாபாரத்தில் ஈடுபடுகின்றனர். தற்போது மாங்குளம் நகரப் பகுதியில் உள்ள வியாபாரிகளும் இந்த வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். எமது வியாபாரம் வீழ்ச்சியடைந்து ள்ளது. கொள்முதல் செய்த பணத்தைக் கூட எடுக்க முடிவதில்லை. ஏனைய கடைகளில் இவற்றை வியாபாரம் செய்வதைத் தடுக்க வேண்டும்.- என்று சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகள் கோரிக்கை விடுத்திருந்தனர்.
வியாபாரிகளின் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டது. இனிவரும் காலங்களில் சந்தையில் ஏனைய கடைகளில் வெற்றிலை, பாக்கு, பழங்கள் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. சந்தை வியாபாரிகளுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.- என்று புதுக்குடியிருப்புப் பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (ந-7)

# தூதரகங்களின் அழுத்தம் காணி விடுவிப்பில் தேவை

### ஜப்பான் தூதர்க ஆலோசகரிடம் வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் கோரிக்கை



மன்னார், பெப்.16
இராணுவத்தின் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும்என கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு மக்கள் நடத்தும் போராட்டத்துக்கு வெளிநாட்டுத் தூதரங்கள் ஆதரவு வழங்க வேண்டும். காணிகளை உடனடியாக மக்களுக்கு வழங்க வேண்டும் என அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.
இவ்வாறு யப்பான் தூதரக ஆலோசகர் மரிக்கோ யமாமோட்டாவிடம் கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன்.
அமைச்சருக்கும், தூதரக ஆலோசகருக்கும் இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பு நடைபெற்றது. அமைச்சின் மன்னார் மாவட்ட உப அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு கோரிக்கை முன்னெக்கப்பட்டது என்று அமைச்சர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
அதில் உள்ளதாவது:
இந்தச் சந்திப்பில் பல விடயங்கள் ஆராயப்பட்டன. கடந்த ஆண்டு ஜப்பானியத் தூதுவருடன் நடத்தப்பட்ட சந்திப்பில் புனர்வாழ்வு வழங்கப்பட்ட போராளிகள்தொடர்பானவேலைத் திட்டத்துக்கு நிதி கோரப்பட்டது. நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பில் அது தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டது.
நாட்டின் தற்போதைய அரசியல் நிலமை தொடர்பாகவும் ஆராயப்பட்டது. கடந்த 15 நாள்களாக கேப்பாப்பிலவு, புதுக்குடியிருப்பு மக்கள் நடத்தும் நில மீட்புப் போராட்டம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.
மக்களின் போராட்டத்துக்கு வெளிநாட்டுத் தூதரங்கள் ஆதரவு வழங்க வேண்டும். மக்களின் உறுதிக் காணிகள், அரசால் வழங்கப்பட்ட காணிகளை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப் பட்டது. நீண்ட கால மாகச்சிறைகளில் உள்ள தமிழ் அரசியல்கைதிகளை விடுவிப்பது தொடர்பாகவும் தூதரங்கள்அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைக்கப்பட்டது.
வடக்கு மாகாணத்தில் பல அபிவிருத்திகளைச் செய்ய வேண்டிய கட்டாய தேவை இருக்கின்றது.
வடக்கு மாகாணத்துக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் போதாதுள்ளன. வெளிநாட்டுத் தூதரங்களின் உதவியுடனேயே நாம் பெரும் வேலைத் திட்டங்களை முன்னெடுக்க முடியும்.
யப்பானிய தூதரகம் மூலமும் எமது மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்பதையும் தூதரக ஆலோசகரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. - என்றுள்ளது. (ந-21)



வவுனியா. ஓமந்தை பெரியமடுவில் இருந்து கனகராயன்குளத்துக்கு கடத்தப்பட்ட 13 முதிரை மரக் குற்றிகள் வன பரிபாலனத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டன. ஓமந்தை உப வனபரிபாலனத் திணைக்களத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவை கைப்பற்றப்பட்டன. வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டார். ஒருவர் தப்பியோடியுள்ளார். மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ந-21)

## காணி விடுவிப்பு: ஆனந்த சங்கரி மைத்திரிக்கு கடிதம்

முல்லைத்தீவு, பெப்.16
கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை மீள ஒப்படைக்க அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் வி. ஆனந்த சங்கரி கோரிக்கை விடுத்துள்ளார்.
அரச தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயேஇவ்வாறுகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் அனுப்பியுள்ளசெய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் உள்ளதாவது:
பல ஆண்டுகளாக மக்கள் வசித்த காணிகளை அவசியமில்லாது, நீதிக்குப் புறம்பாக கையகப்படுத்தி விடுவிக்க மறுப்பது அரசுக்கு தேவையற்ற விடயம். ஒருவரது சொந்தக் காணியையோ, அரசால் வழங்கப்பட்ட காணியையோ மீளப் பெறும் உரிமை அரசுக்கு இல்லை. ஒரு காணியில் ஒருவர் ஏற்கனவே வசித்தாரா என்று அறிந்து தீர்வு காண்பதே சரியான முறையாகும்.
அந்த இடத்தில் விமான நிலையம் அவசியம் தானா என்பது தொடர்பாக அரச தலைவர் ஆய்ந்தறிய வேண்டும். பல்லாயிரக்கணக்கான மக்கள் பசியால்வீதியில்அலையும் போது எந்த வருமானமும் தராத விமான நிலையம் அவசியமா?. பலகோடி ரூபா பணத்தை எதுவித பலனும் இல்லாத ஒரு திட்டத்துக்கு செலவு செய்ய மாட்டீர்கள் என்று நம்புகின்றேன். காணி விடுவிப்பு தொடர்பாக தீர்க்கமான முடிவை அரச தலைவர் எடுக்க வேண்டும் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்து. - என்றுள்ளது. (ந-8)

# வவுனியா தமிழ் மத்திய ம.விக்கு பழைய பொலிஸ் வாகனம் கையளிப்பு

யாழ்ப்பாணம், பெப்.16
வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தின் தொழில்நுட்பப் பீட மாணவர்களின் பயன்பாட்டுக்காக வவுனியா பொலிஸார் வாகனம் ஒன்றைக் கையளித்தனர்.
இந்த நிகழ்வு நேற்றுக் காலை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் த.அமிர்தலிங்கத்திடம் வன்னிப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வாகனத்தைக் கையளித்தார்.பாடசாலை அதிபர் பொலிஸ்மா அதிபரிடம் கோரியதை அடுத்து இந்த வாக னம் வழங்கப்பட்டுள்ளது.
எம்மால் வழங்கப்பட்ட வாகனத்தின் பெறுமதி 6 லட்சம் ரூபாவாகும். தற்போதைய காலகட்டத்தைப் பொறுத்தவரை இது பெரிய பணமல்ல.
வாகனத்தைப் பயணிப்பதற்காக நாம் வழங்கவில்லை. இதைப் பயன்படுத்தி தொழில்நுட்ப ரீதியில் மாணவர்கள் முன்னேற வேண்டும்.
எம்மால் வழங்கப்பட்ட வாகனம் பெறுமதியற்றதாக இருந்தாலும் மாணவர்கள் கற்றுக் கொள்வதற்கு இலகுவானதாக இருக்கும்.- என்று வன்னிப் பிராந்திய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நிகழ்வில் தெரிவித்தார். (ந-21)



## தேர்தல் தொடர்பாக மக்களுக்கு விளக்கம்

மன்னார், பெப்.16

தேர்தல் தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடல் மன்னாரில் நேற்று நடைபெற்றது.

மார்ச் 12 இயக்கம் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தது. சர்வோதய அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடலில் சர்வோதயம், சேவாலங்கா, ஆர்.பி.ஆர்., அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் என்பனவும் இணைந்திருந்தன.

மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கி கிரா மட்டத் தலைவர்கள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு தேர்தல் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

மார்ச் 12 பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் தொடர்பாகவும், தேர்தல் ஒன்று நடத்தப்படும்போது மக்களின் செயற்பாடுகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

புதிய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைமையுடன் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-56)

## விசேட தேவைக்குட்பட்டோர் விவரங்கள் சேகரிப்பு

வவுனியா, பெப்.16

வடக்கு மாகாணத்தில் உள்ள விசேட தேவைக்குட்பட்டவர்களின் விவரங்கள் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் திரட்டப்படுகின்றது.

விசேட தேவைக்குட்பட்டவர்களின் விவரங்களை கணினிமயப்படுத்தி, அவர்களுக்கான சேவைகளை இலகுவாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தத் திட்டம் செயற்படுள்ள நிலையில், வவுனியா மாவட்டத்தில் இந்தத் திட்டம் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. ஆரம்ப நிகழ்வு வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் மு.ப. 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

(ற-21)

# பல கொள்ளைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் கைது

### வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவின் அதிரடி நடவடிக்கையில்

வவுனியா, பெப்.16



வவுனியா உட்படப் பல பகுதிகளில் கொள்ளைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 12 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன என்று வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவின் பல இடங்களில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகக் கடந்த ஆண்டு இறுதியில் 3 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்களும், பெருமளவான நகைகளும் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்டவர்கள் சிலாபத்துறை, ஒட்டுசுட்டான், அடம்பன், மன்னார், மாங்குளம், கனராயன்குளம், புளியங்குளம், செட்டிகுளம், வவுனியா போன்ற இடங்களில் நடந்த கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் 2013 ஆம் ஆண்டு முதல் கொள்ளைச் சம்பங்களில் ஈடுபடுகின்றனர் என்று கூறப்படுகின்றது. அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் அவர்கள் கொள்ளையடிக்கும் நகைகளை வவுனியாவில் உள்ள நகைக் கடை ஒன்றில் விற்பது தெரியவந்தது.

நேற்றுமுன்தினம் வவுனியா குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசேட நடவடிக்கை மேற்கொண்டனர். நகைக் கடை ஒன்றில் நகைகளை விற்பனை செய்ய வந்த சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 12 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

மூத்த பொலிஸ் அதிகாரி நிசிர குமார, உப பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பர்ணாந்து ஆகியோரின் வழிநடத்தலில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொ.ப.ரட்ணதிலக தலைமையில் ஜேசுதாசன், ஜீவானந்தன், கருணாதிலக, ரணதுங்க, சாலிய, வீரசேன, சானக, பிரசன்ன, அதுல ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழு சந்தேகநபரைக் கைது செய்தது.

கைது செய்யப்பட்டவர் நேற்று வவுனியா மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ற-21)

## தேங்காய் திருட்டை கட்டுப்படுத்த கோரிக்கை

வவுனியா, பெப்.16

வவுனியாவில் அண்மைக் காலமாக தேங்காய்கள் திருடப்படுவது அதிகரித்துள்ளது. திருட்டைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

பூவரசன்குளம் பகுதியில் தேங்காய்த் திருட்டு அதிகரித்துள்ளது. ஆள்கள் நடமாட்டம் குறைந்த தென்னம் தோப்புகளில் தேங்காய்கள் திருடப்படுகின்றன. இளைஞர் குழுக்களே திருடுகின்றனர். தேங்காய்களை விற்கும் அவர்கள் கிடைக்கும் வருமானத்தில் மது அருந்துகின்றனர் என்று தெரிய வருகின்றது.

திருட்டைத் தடுக்க பொலிஸார், சிவில் பாதுகாப்பு அமைப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

(ற-21)



# அவசர சிகிச்சைக்கான நோயாளியை பேருந்தில் அலைய விட்ட மருத்துவர்

கொழும்பு,பெப்.16

அவசர சிகிச்சை நோயாளியான மாண வன் ஒருவரை, மேலதிக சிகிச்சைக்காக பேருந்தில் அழைத்துச் செல்லுமாறு, அந்த மாணவ னின் பெற்றோருக்கு மருத்துவர் பணித்தார்.

இந்தச் சம்பவம் மொனராகலை சியாம் பலாண்டுவைப் பகுதியில் அண்மையில் இடம்பெற்றது. கந்தவுடபங்குவ மகா வித்தி யாலயத்தில் கல்வி கற்கும் 18 வயதான குறித்த மாணவன், மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானர்.

அந்த விபத்தில் மாண வனுக்கு படுகாயங் கள் ஏற்பட்டதுடன், அவசரமாக சிகிச்சை வழங்க வேண்டியும் இருந்தது.

விபத்துக்குள்ளான மாணவன் சியாம் பலாண்டுவை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு மாண வனின் நிலை கவலைக்கிடமாக இருந்தது. அவரை உடனடியாக மொனரா கலை அரசினர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லும்படி, மாணவனின் பெற்றோரி டம் வைத்திய அதிகாரி பணித் தார். மொனரா கலைக்கு அடிக்கடி இ.போ.ச பேருந்துகள் செல்வதால் பேருந்தில் மாணவனைக் கூட்டிச் செல்லுமாறும் அவர் கூறினார்.

இதனையடுத்து, கவலைக்கிடமாக இருந்த மாணவனை, அவனது பெற்றோர் இ.போ.ச பேருந்தில் மொனராகலை வைத்திய சாலைக்கு அழைத்துச் சென்று சேர்த்தனர். அங்கு உடனடியாக மாணவன் தீவிர சிகிச் சைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டார்.

சியாம்பலாண்டுவை வைத்தியசாலையில் நோயாளர் காவுவண்டி இருந்தும், குறிப்பிட்ட நோயாளியை அழைத்துச் செல்ல நோயாளர் காவுவண்டியை வழங்காமை குறித்து வைத் திய அதிகாரியிடம் வினவியபோது, ஒரு நோயாளிக்காக நோயாளர் காவு வண்டியை வழங்க முடியாது என்று தெரிவித்தார் என்று கூறப்படுகின்றது. இந்தச்சம்பவம் தொடர்பாக மாணவனின் பெற்றோர், சுகாதார அமைச் சருக்கு முறைப் பாடு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்துக்கு விரைவில் தீர்வு

## கிழக்கு ஆளுநர் நம்பிக்கை

மட்டக்களப்பு,பெப்.16

காணாமல் ஆக்கப்பட்டவர் களின் நிலைமை மிகவும் அவலமானது. அவர் கள் தொடர்பான விவகாரத் துக்கு வெகு விரை வில் தீர் வு கள் காணப் படும்.



தற் போதைய கூட்டு அரசு அதற்கான நடவடிக்கை களை முன்னெடுக்கும் என்று நான் நம்பு கிறேன். -இவ் வாறு கிழக்கு மாகாண ஆளு னர் ஒஸ்ரின் பெர் னாண்டோ தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக் களத்தின் ஏற்பாட் டில் தும் பங்கேணி அரச ஆடு மரபு ரிமை வள மேம்பாட்டு நிலை யம் நேற்றுமுன்தினம் செவ் வாய்க்கிழமை திறந்து வைக் கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரி விக் கையிலே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட் டார்.

அவர் தெரிவித்ததாவது:

பாதுகாப்புச் செயலாளராக நான் இருந்தமையால் இனப்பிரச்சினைகளின் அவ லங்கள் தொடர்பில் நன்கு அறிந்தவனாக உள்ளேன். தற்போது நாட் டில் மாற்றங் களே உடன டியாகத் தேவைப் படுகின் றன. இந்தக் கால கட்டத்தில் மக்கள் மத்தியில் பல்வேறு அபிவிருத்தி நடவ டிக்கை களையும் செயற் படுத்த வேண்டியுள்ளன.

எமது நாட்டு மக்களின் நலிவடைந்த பொருளா தாரங்கள் முன்னேற்றப்பட வேண்டும். இனப்பிரச் சினை ஒரு பெரிய பிரச்சினை. அவை கிழக் கைப் பார்க்கி லும், வடக்கில் அதிகமாகும். சம்பூர் மக்களின் நிலத்தை வழங்க ஏற்பாடு செய்தேன்.

அதுபோல் மீள் குடியமர்வுகளும் வெகு விரைவில் செய்யப்பட வேண்டும்.

காணாமலாக்கப்படவர் கள் தொடர்பில், உண்மைகளைக் கண்டறியும் குழு வின் அறிக்கை கள் விரை வில் வெளியிடப்படும். எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந் தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகி யோர்கள் அரசுடன் பேச் சுக்களில் ஈடுபட்டுக் கொண் டிருக்கின்றனர்.-என்றார்.

16 மில்லியன் ரூபா நிதி ஒதுக் கீட்டில், அமைக்கப் பட்ட இந்த அரச ஆடு மரபு ரிமை வள மேம் பாட்டு நிலைய திறப்பு விழா கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங் கம் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய் நுலாப்தீன் நஸீர் அஹமட், கல் வியமைச்சர் சி.தண்டாயுத பாணி, கிழக்கு மாகாணசபைத் தவி சாளர் சந்திரதாச கலப் பதி, நடாளு மன்ற உறுப் பினர் சீ.யோகேஸ் வரன், கிழக்கு மாகாணசபை உறுப் பினர்களான ஞா.கிருஷ்ண பிள்ளை, மா.நடராசா, திணைக் களத் தலைவர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ஐ)

நினைவஞ்சலி



தோற்றம் 25 • 07 • 1938
மறைவு 16 • 02 • 2016

பொன்னம்பலம் சீவரட்ணம்

Proprietor : Kamala Beedi, Hotel Seevams - Colombo.
Seevam Export (pvt) Ltd - Colombo, Seevam Textiles - Jaffna.

என் வாழ்வில் ஆண்டு ஒன்று போனது
நீ இல்லாமல் - என் நிழல்

பாசமுடன் திருமதி. தயாநிதி சீவரட்ணம்
No.15 Palm Grove, Colombo - 03.

# விசேட தேவையுடைய படையினருக்கு ஓய்வூதியம்

கொழும்பு,பெப்.16

நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட, சுமார் 12 வருடங்களுக்குக் குறைவான சேவைக்காலத்தை உடைய, விசேட தேவையுடைய பாதுகாப்புப் படையினருக்கான ஓய்வூதியம் வழங்கும் திட்டம் அரச தலைவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்துக்கு அமைவாக முப்படையைச் சேர்ந்த 2 ஆயிரத்து 261 பேருக்கும், பொலிஸ்படையைச் சேர்ந்த 136 பேருக்கும், ஓய்வூதியம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரைகாலமும் 12 வருடங்கள் சேவைக் காலத்தை உடைய, படையினருக்கே ஓய்வூதியங்கள் வழங் கப்பட்டன. இந்த நிலையில் 12 வருடத்துக்கும் குறைவான சேவைக் காலத்தை உடைய படையினருக்கு, முதல் முறையாக குறித்த ஓய்வூதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் குறித்த திட் டத்தின் முதற்கட்டமாக சுமார் 150 படையினருக்கு அண்மையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜப்பான் பயணமானார் இடர் முகாமைத்துவ பணிப்பாளர்

மட்டக்களப்பு,பெப்.16
ஜப்பானில் நடைபெறும் இடர் முகமைத்துவப் பயிற்சி செயலமர்வில் கலந்து கொள்வதற்காக, மட்டக்களப்பு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் ஜப்பான் பயணம் ஆனார்.

15 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கு கொள்ளும் இந்தச் செயலமர்வில், இலங்கை சார்பாகக் கலந்துகொள்ளும் ஒரேயொரு பிரதிநிதி இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### பிலக்குடியிருப்பு நிலமீட்புப் போராட்டத்தில்

# கட்சி பேதங்களைப் புறந்தள்ளி மக்களுக்காகப் போராடுங்கள்

### கிழக்கு மாகாணசபைத் தவிசாளர்; அரசியல் தலைவர்களுக்கு அழைப்பு

மட்டக்களப்பு,பெப்.16
கடந்த காலங்களில் உரிமைகளுக்காகப் போராடிய தமிழ்மக்கள் இன்று வாழ்வதற்கும் போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் அரசியல் தலைமைகள் இவற்றை இன்னும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

இவ்வாறு கிழக்கு மாகாணசபையின் பிரதி தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார் தெரிவித் தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது:

கேப்பாபிலவில் நிலம் மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு ஆதரவாகப் போராடுவதற்கு, கட்சிபேதங்களுக்கு அப்பால் அனைத்து தமிழ் அரசியல் தலைவர்களும் முன்வரவேண்டும்.

இலங்கையில் எங்கும் இல்லாத கொடுமை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. தமது சொந்த நிலங்களில் சுதந்திரமாக வாழும் உரிமை, தமிழ் மக்களுக்கு மட்டுமே மறுக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் தங்களது உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், தமது சொந்த இடங்களில் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகவுமே கூட்டு அரசை ஏற்படுத்தினர்.

தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் எந்தச் செயற்பாட்டையும் கூட்டு அரசு இது வரையில் மேற்கொள்ளவில்லை.

நீண்டகாலமாகத் தமது காணிகளை இழந்திருந்த கோப்பாபிலவு மக்கள், தமது காணிகளைக்கோரி தொடர்ச்சியான முறையில் கடந்த 31 ஆம் திகதியில் இருந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களின் போராட்டங்களில் நாங்கள் வெறும் பார்வையாளர்களாக இருக்க முடியாது.

தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே, நாங்கள் போராட் டங்களில் இணைந்து கடந்த காலத்தில் போராட்டங்களை நடத்தினோம். இங்குள்ள தமிழ் அரசியல் தலைமைகளும் ஏதோ ஒரு வகையில் தமிழ் மக்களுக்காகப் போராட வந்தவர்களே. கேப்பாபிலவு மக்களுக்கு ஆதரவாக அணிதிரண்டு போராட வேண்டிய அவசியம் இன்று அனைத் துத் தமிழ் தலைமைகளுக்கும் ஏற்பட்டுள்ளது. அரசியல் வேறுபாடுகளோ, அரசியல் நோக் கங்களோ இல்லாமல், அனைவரும் இணைந்து போராடுவதற்கு முன்வரவேண் டும். இல்லாது போனால் அது அந்தமக்களுக்குசெய்யும்மாபெரும் துரோகமாகவே அமையும்- என்றுள்ளது. (ஐ)



கேப்பாப்புலவு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்கள், கறுப்புப் பட்டியணிந்து கடந்த திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மட்டக்களப்பு சுவாமி விபு லானந் தர் அழகியற் கற்கைகள் நிறுவகத்துக்கு முன்னால் ஒன்று கூடிய மாணவர்கள், தமது வாய்களைக் கறுப்புத் துணிகளால் கட்டிக்கொண்டு, பதாகைகளைத் தாங்கியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

## கிழக்கில் நடந்த 'எழுக தமிழ்' சுயநல அரசியலின் வெளிப்பாடு

### நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் கொதிப்பு

செங்கலடி, பெப்.16
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்து வதற்காகவே 'எழுக தமிழ்' எனக் கூறியவர் கள், மட்டக்களப்பில் நடைபெற்ற எழுக தமிழ் மேடையில் தங்களுடைய சுயநல அர சியலை வெளிக்காட்டினர்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ம ட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.ஸ்ரீநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு, இலுப்படிச்சேனை அம்பான் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் இறுதிநாள் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த காலத்தில் தவறான பாதையில் சென்று எமது மக்களை துன்புறுத்தியவர்கள் இன்று கூட்டமைப்பின் தலைமையை மாற்ற வேண்டும் எனக் கூறுகின்றனர்.

தரித்திரம் பிடித்த சரித்திரத்தை உடையவர்கள் மீண்டும் புதிய தலைமைகளை உருவாக்கி, மக்களைப் புதிய பாதையில் கொண்டு செல்லலாம் என்று நினைத்தால் நாங்கள், அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

'எழுக தமிழ்' மேடையில் பிரகடனப்படுத்தப்பட்ட வார்த்தைகளைப் பார்க்கும்போது, தமிழ் எழுச்சி பெற வேண்டும், தமிழர்கள் எழுச்சி பெறவேண்டும், தமிழ் மக்களின் அரசியல், சமூக மற்றும் பலம் அதிகரிக்க வேண்டும் என்ற அடிப்படையில் பிரகடனங்கள் அமைந்திருந்தால், அதனை நான் வாழ்த்துகின்றேன். ஆனால் கூட்டமைப்பின் தலைமையை மாற்ற வேண்டும், புதிய தலைமையைக் கொண்டு வரவேண்டும் என்று



தங்களது சுயநல அரசியலைக் காட்டுகின்ற மேடையாக அது அமைந்திருந்தது.

தங்களது தோல்விக்குத் தாங்களே காரணம் எனச் சிந்திக்காதவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையின் மீது குற்றஞ்சாட்டுகின்ற நாகரிகமில்லாத அரசியலைச் செய்கின்ற சில தலைமைகள் எவ்வாறு புதிய தலைமைகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தலைமை தாங்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

'எழுக தமிழ்' ஏற்றுக்கொள்கின்றோம், தமிழர் எழுச்சி பெற வேண்டும் என்பதை எற்றுக் கொள்கின்றோம், உரிமைக் குரலை ஏற்றுக் கொள்ளுகின்றோம். ஆனால் உரிமைக் குரல் கொடுக்கின்றோம் எனக் கூறிக் கொண்டு அதில் சுயநல அரசியல் செய்பவர்களை ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

அரசியலில் அனுபவம் இருக்க வேண்டும். சாதாரணமாக சிறிய விடயங்களை அறிந்து விட்டு, மற்றவர்களுக்கு போதனை செய்ய முற்படுபவர்களுக்கு மக்கள் எதிர்காலத்தில் தகுந்த பாடம் புகட்டுவர் – என்றார். (ஐ-ய-47)

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு தில்லைநடேசர் (சாமியார்)



மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் பெரிய அரசடி சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தில்லை நடேசர் (சாமியார்) நேற்று(15.02.2017) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் கார்த்திகேசு (ஓய்வு நிலை ஆசிரியர்) - வள்ளிநாயகம் தம்பதியினரின் கனிஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜலிங்கம், இரத்தினபூபதி ஆகி யோரின் சகோதரனும் காலஞ்சென்ற இராஜலட்சுமியின் (ஓய்வு நிலை ஆசிரியை) அன்புக் கணவரும் முருகதாசனின் (மதுவரி திணைக்களம்) பாசமிகு தந்தையும் நிர்மலாவின் (ஆசிரியை, யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) அன்பு மாமனாரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவிகளான விஸ்ணுகா, கம்சிகா, சரணிகா, ஆரணியா ஆகியோரின் அன்புப் பேரனும் இரத்தினம்மா காலஞ்சென்ற வேலுப்பிள்ளை (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனரும் சி. கந்தசாமி - சிவகாமி தம்பதியரின் (ஐங்கரன் மணிமண்டபம் - சாவகச்சேரி) சம்பந்தியும் ஜெகதீஸன் (பிரான்ஸ்), ரோகினி (ஆசிரியை யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), ஜெயக்குமார் (அமெரிக்கா), ஜெயபாலன்(கனடா), ஜெயபரன்(கனடா) ஆகியோரின் சிறிய தந்தையாரும் சறோஜினி (பிரான்ஸ்), பரஞ்சோதி, துஷ்யந்தி (அமெரிக்கா), புனிதவதி (கனடா), அன்பரசி (கனடா), முருகதாசன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பெரிய அரசடி,**
**சாவகச்சேரி.**

**தகவல்**
**தி.முருகதாசன்(மகன்)**

**077 717 8069**

# 30 ஆண்டுகளாக திருத்தப்படாத வீதியால் 19 கிராம மக்கள் திண்டாட்டம்

வவுனியா, பெப்.16

வவுனியா மாவட்டத்தில் இரணை இலுப்பைக்குளம் முதல் விளாத்திக்குளம் வரையான 10 கிலோமீற்றர் நீளமான பிரதான வீதி 30 வருடங்களாகச் சீரமைக்கப்படவில்லை. 19 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நாளாந்தம் இந்த வீதியைப் பயன்படுத்துகின்றனர். போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ள வீதியைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

"மன்னார் வீதியில் பூவரசங்குளம் வைத்தியசாலைக்கு அண்மையில் வடக்குத் திசையாகச் செல்கின்றது இரணை இலுப்பைக் குளம் விளாத்திக்குளம் வீதி. அந்த வீதியை புலவனார் ஊர், மடுக் குளம், வேலங்குளம், கோயில் மோட்டை, சிவநகர், சின்னத்தம் பனை, செங்கற் படை, கருங்காலிக்குளம், குஞ்சுக் குளம், தெகிளங்குளம், கோயிற் புளியங்குளம், பூசாரி குளம், இரணை இலுப் பைக்குளம், புதுக்குளம், காக்கையன் குளம், மண்கிண்டி பரசங்குளம், விளாத்திக் குளம், சின்ன வலைஞன் கட்டு, பெரிய வலையன் கட்டு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நாளாந்தம் பயன்படுத்துகின்றனர்.

இந்த வீதி நீண்டகாலமாகச் சீரமைப்புச் செய்யப்படாதுள்ளது. போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் வீதி உள்ளது. இந்தக் கிராமங்களைச் சேர்ந்தவர்களின் வாழ்வாதாரத் தொழில் விவசாயமே. எமது உற்பத்திப் பொருள்களை வவுனியாவுக்குக் கொண்டு செல்வதில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றோம்.

இந்த வீதியைச் சீரமைத்துத் தர வேண்டும் என்று கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி வவுனியா வேலங்குளம் கிராம சேவையாளர் பிரிவிலுள்ள மக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பூவரசங்குளம் ஊடாக இரணை இலுப்பைக்குளம் செல்லும் சந்தியில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.

அங்கு வந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை உறுப்பினர் எம்.தியாகராசா, எம்.பி.நடராசா, மாகாண சபை சுகாதார அமைச்சின் செயலாளர் பி.சத்தியசீலன், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் உத்தியோகத்தர் வசந்தன், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உத்தியோகத்தர்கள் மற் றும் வவுனியா மாவட்டச் செயலாளர் ஆகியோர் மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தனர்.

"வீதி அபிவிருத்தி உத்தியோகத்தர் இரண்டு வாரங்களில் வீதி செப்பனிட்டுத் தரப்படும் என்று கூறினார். இலங்கைப் போக்குவரத்துச் சபை உத்தியோகத்தர் ஒரு வாரத்தில் பஸ் சேவை ஏற்படுத்தப்படும் என்று கூறினார். அவை எதுவுமே இதுவரை நடைபெறவில்லை. வீதியைச் சீரமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்."- என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

"இந்த வீதி கிரவல் வீதியாக உள்ளது. அதைக் காப்பெற் வீதியாக மாற்ற வேண்டும் என்றால் ஒரு கிலோ மீற்றருக்கு 30 மில்லியனுக்கு மேல் செலவாகும். அதற்கான நிதி எம்மிடம் இல்லை. உலக அபிவிருத்தி வங்கியினுடைய திட்டத்துக்குள் இந்த வீதி சேர்க்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டளவில் வீதி சீரமைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது."- என்று வீதி அபிவிருத்தி திணைக்கள அதிகாரி தெரிவித்தார். (ந-21)

# பிலக்குடியிருப்பு போராட்டம் வெற்றியளிக்கவேண்டும்

## மௌலவி பி.ஏ.எஸ் சுப்யான் தெரிவிப்பு

முல்லைத்தீவு, பெப்.16

முல்லைத்தீவு, கேப்பாப்புலவு மக்கள் கடந்த பதினைந்து நாள்களாக தங்களது சொந்தக் காணிகளுக்காக ஜனநாயகவழியில் நடத்தும் போராட்டம் வெற்றியளிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் மௌலவி பி.ஏ.ஸ் சுப்யான் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

காலம் தாழ்த்தாமல் ஜனாதிபதியும், பிரதமரும் இந்த விடயத்தில் நேரடிக் கவனம் செலுத்த வேண்டும். மக்களின் உரிமைகள் மதிக்கப்படவேண்டும், பாதுகாக்கப்படவேண்டும்.

மக்களின் நியாயமான கோரிக்கைக்குஅரசு நிச்சயமாக செவிசாய்க்க வேண்டும். இந்த மக்களின் போராட்டம் சுயாதீனமானது. எந்தப் பின்னணியையும் கொண்டதாகத் தெரியவில்லை. எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி தங்களுக்கு நிச்சயமாக நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

பச்சிளம்குழந்தைகளும், பிள்ளைகளும், வயோதிபர்களும் இந்தப் போராட்டத்தில் முழுமையாகப் பங்கெடுத்துள்ளனர். தங்களுக்கு இந்தப் போராட்டத்தில் நியாயமான தீர்வு கிடைக்காவிட்டால் தங்களது போராட்டத்தின் வடிவங்களை மாற்றி தொடர்ந்து ஜனநாயக வழியில் போராடுவதற்குள்ள மனவலிமையுடன் இந்த மக்கள் உள்ளனர்.

இவர்களின் ஜனநாயக ரீதியான போராட்டத்துக்கு மனிதநேயத்துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட முஸ்லிம் மக்கள் பணிமனை ஆதரவு வழங்குகின்றது.

மக்களின் கோரிக்கையை ஏற்று இவர்களது காணியை இவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சகல அடிப்படை வசதிகளுடன் அந்தப் பிரதேசத்தில் மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும். இது போன்ற தனியார், பொதுமக்களின் காணிகள் இலங்கை பாதுகாப்புத் துறையைச் சேர்ந்தவர்களின் பயன்பாட்டில் இருந்தால் அவற்றையும் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்று ஜனாதிபதியிடமும், பிரதமரிடமும், அரசிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். – என்றார். (ந-21)



கிளிநொச்சி டிப்போச் சந்தியில் நடந்த விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்தார். விதிமுறைகளை மீறி வேகமாகப் பயணித்த பிக்கப் ரக வாகனம் பெண் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதிவிட்டுத் தப்பிச் சென்றது. விபத்துத் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-21)

# தராபுர கட்டடங்கள் தொடர்பில் உடன் சட்ட நடவடிக்கை தேவை

## மன்னார் அரச அதிபரிடம் சாள்ஸ் எம்.பி. கோரிக்கை

மன்னார், பெப்.16

மன்னார், தராபுரத்தில் அமைக்கப்பட்டு வரும் சட்ட விரோதக் கட்டடங்கள் தொடர்பில் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் அரச அதிபரிடம் கோரியுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

தாராபுரத்தில் கடலுடன் இணைந்த பிர தேசத்தில் கடலில் இருந்து 19 மீற்றர் தூரத்தில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஒரு வரால் சட்ட விரோதமாகக் கட்டடம் அமைக்கப் படுகின்றது என்று செய்தி வெளியாகி யிருந் தது. அங்கு சென்று நேரில் பார்வையிட் டேன்.

பிரதேச சபை, கரையோர பாதுகாப்புத் திணைக்களம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டு விவரங்கள் கோரினேன். அவர்களுக்கு எந்தவிதமான மேலதிக தகவல்களும் தெரியவில்லை. எவரும் கட்டடங்களுக்கு அனுமதி பெறவில்லை.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினரின் தகவலின்படி கடற்கரை யில் இருந்து 80 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் எந்தக் கட்டடங்களும் அமைக்க முடியாது. தராபுரத்தில் கட்டடங்கள் அமைக்கப்பட்டு கட்டுமானம் முடிவடையும் நிலையில் உள்ளது. அரச அதிபர் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ந-101)



# ஜெயாவின் வழியில் என்றால் உங்கள் ஆட்சியிலும் ஊழலா

## ஓ.பி.எஸ்ஸிடம் கேட்டார் ராமதாஸ்



சென்னை, பெப். 16
ஜெயலலிதாவின் வழியில் தனது ஆட்சியும் அமையும் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ள நிலையில், உங்கள் ஆட்சியிலும் ஊழல் இருக்குமா என்று கேள்வி எழுப்பினார் பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ்.

சசிகலா சிறை செல்வதால், தனது தலைமையின் கீழ் சட்மன்ற உறுப்பினர்கள் தத்தம் மனக் கசப்புக்களை விடுத்துச் செயற்பட வேண்டும். அம்மா ஜெயலலிதா விட்டுச்சென்ற ஆட்சியை நாம் தொடர வேண்டும் என்று முதல்வர் தெரிவித்தார். இதற்கு பதில் கருத்துத் தெரிவிக்கும் விதத்தில் ராமதாஸ் சில கேள்வி களைத் தொடுத்தார்.

ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில், இந்த வழக்கின் தீர்ப்பானது, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரை சமூக வாழ்க்கை வாழ்வதற்காகவோ, அல்லது மனிதநேய அடிப்படையிலோ தமது போயஸ் தோட்ட இல்லத்தில் ஜெயலலிதா தங்க வைக்கவில்லை. மாறாக, ஜெயலலிதா சொத்துக்களை கையாளுவதற்காக அவர்கள் தீட்டிய சதித்திட்டப்படிதான் போயஸ் தோட்ட இல்லத்தில் சசிகலா உள்ளிட்டோர் தங்க வைக்கப்பட்டனர். தமது சொத்துக்களைக் கையாளுவதற்கான உரிமையை சசிகலாவுக்கு ஜெயலலிதா அளித்திருந்தார் என்பது இதை உறுதி செய்கிறது.

அதாவது ஒரு மாநிலத்தின் முதல்வராக இருந்தவர் அவரது பதவிக் காலத்தில் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி சொத்துக்களைக் குவித்தார். அவரின் சதிகளுக்கு உடந்தையாக இருந்தவர்களும் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தத் தீர்ப்பின் மூலம் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தியவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தச் சிறப்பான தீர்ப்புக் குறித்து இப்போது முதல்வர் பதவியிலுள்ள ஓ.பன்னீர்செல்வம்தான் முதன்முதலில் கருத்துத் தெரிவித்திருக்க வேண்டும்.

ஆனால், இத்தீர்ப்பின் பக்கவிளைவுகள் குறித்தெல்லாம் கருத்துக் கூறிய முதல்வர் பன்னீர்செல்வம், மக்கள் பணத்தைக் கொள்ளையடித்ததற்காக ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை ஆதரிக்கிறாரா? எதிர்க்கிறாரா? என்பது பற்றி இதுவரை வாய் திறக்காமல் அமைதியாக இருப்பது ஏன்? ஊழல் முதல்வருக்கு வழங்கப்பட்ட தண்டனையை வரவேற்பதுதானே நல்ல முதல்வருக்கு அடையாளம்?

அதுமட்டுமின்றி, சென்னையில் நேற்று (நேற்றுமுன்தினம்) செய்தியாளர்களிடம் பேசும்போது, "அம்மாவின் அணுகுமுறை தொடர வேண்டும் என்பதையே சற்று முன் வழங்கப்பட்ட தீர்ப்பு உறுதி செய்திருக்கிறது" என்று கூறினார். அதன்பிறகு வெளியிடப்பட்ட அறிக்கையில், "அம்மா விட்டுச் சென்ற பணிகளைத் தொடர அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எனக்கு ஆதரவளிக்க வேண்டும்" என்று கோரியிருக்கிறார்.

இதற்கான பொருள் என்ன? அம்மாவின் ஊழல் ஆட்சியைத்தான் அவரும் செய்யப்போகிறாரா என்பதை ஓ.பன்னீர்செல்வம் விளக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



# சசிகலாவிற்கு அவகாசம் தர மறுத்து விட்டது உச்சநீதிமன்று

## சூழ்ச்சியில் இருந்து விடுபடுவேன் என்று சபதமெடுத்து சிறை சென்றார் சின்னம்மா

சென்னை, பெப். 16
சொத்துக் குவிப்பு வழக்கில் குற்றவாளி என்று தீர்ப்பு வந்ததை அடுத்து தான் சரணடைய 2 வாரங்கள் அவகாசம் கேட்டிருந்தார் சசிகலா. அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஜெயலலிதாவின் சமாதிக்குச் சென்று சூழ்ச்சி, துரோகம், இக்கட்டு ஆகிய மூன்றில் இருந்தும் மீண்டு வருவேன் என சபதம் எடுத்து நேற்று மதியம் பெங்களூர் சிறையை நோக்கிச் சென்றார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் ஜெயலலிதா, சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் நால்வரும் குற்றவாளிகள் என்று இந்திய உச்சநீதிமன்றம் நேற்றுமுன்தினம் காலை அதிரடித் தீர்ப்பு வழங்கியது. ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாவும் ஏனைய மூவருக்கும் தலா 10 கோடி ரூபாவும் அபராதமாகவும் விதிக்கப்பட்டது. ஜெயலலிதா சாவடைந்துவிட்டதால் அவருக்கு தண்டனை விலக்கு வழங்கப்பட்டது. ஏனைய மூவரும் உடனடியாக பெங்களூர் நீதிமன்றில் சரணடைய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனால், நேற்றுமுன்தினம் இரவு சசிகலா சரணடைவார் என்று கருதப்பட்டது. ஆனால் அவர் சரணடையவில்லை.



நேற்றுக் காலை சரணடைவதற்கு 2 வாரங்கள் அவகாசம் வேண்டும் என்று சசிகலா தரப்பு வழக்கறிஞர் கோரிக்கை வைத்தார். அவரது கோரிக்கை உடனடியாக நிராகரிக்கப்பட்டது. சரணடையவில்லையாயின் பிடியாணை பிறப்பிக்கப்படும் என்றும் மன்று எச்சரித்தது. இதனையடுத்து சென்னை போயஸ் கார்டனில் இருந்து புறப்பட்டு ஜெயலலிதாவின் நினைவிடத்தில் மரியாதை செலுத்திவிட்டு பெங்களூர் நோக்கி தனது காரில் சென்றார் சசிகலா.

இதனையடுத்து சென்னையில் பொலிஸ் பாதுகாப்பு சற்று அதிகரிக்கப்பட்டது. பெங்களூர் சிறையிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டன. சிறைக்கு முன்பாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம)

# நெருப்புடன் விளையாட வேண்டாம் இந்தியாவை எச்சரித்தது சீனா

பீஜிங், பெப். 16
தாய்வன் விவகாரத்தில் இந்தியா நெருப்புடன் விளையாடுகிறது என்று கடுமையான எச்சரிக்கை கொடுத்தது சீனா.

தாய்வானை சீனாவுடன் ஒன்றுபட்டது என்று சீனா அழைத்து வருகிறது. இதனால் தாய்வானுடன் நட்புறவு பாராட்டும் நாடுகளை அந்த நாடு தனது எதிரிகளாகப் பார்க்கிறது. தாய்வன் அதிபருடன் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் நடத்திய உரையாடலை கடுமையாகக் கண்டித்து முறுகலை சந்தித்தது. இந்த நிலையில் தாய்வான் மகளிர் நாடாளுமன்றக் குழு இந்தியாவுக்கு அண்மையில் வந்தது. இதனைய டுத்தே இந்தியாவை எச்சரித்தது சீனா. (ம)

# 104 செயற்கைக் கோள்களை அனுப்பி இஸ்ரோ உலக சாதனை

புதுடெல்லி, பெப். 16
ஒரே தடவையில் 104 செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பி உலகசாதனையை நேற்றுப் படைத்தது இஸ்ரோ.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ செயற்கைக் கோள்கள் மற்றும் அவற்றை விண்ணில் செலுத்தப் பயன்படும் ஏவுகணைகளையும் தயாரித்து வருகிறது. உள்நாட்டு செயற்கைக் கோள்கள் மட்டுமல்லாமல் வெளிநாடுகளின் செயற்கைக் கோள்களையும் வர்த்தக நோக்கில் இஸ்ரோ விண்ணில் செலுத்தி வருகிறது. ஆந்திர மாநிலத்தில் இருந்து நேற்றுக் காலை 9.30 மணியளவில் பி.எஸ்.எல்.வி. சி37 ஏவுகணை மூலம் 104 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது.

இந்தியா, இஸ்ரேல், கஜகஸ்தான், நெதர்லாந்து, சுவிற்சர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் செயற்கைக் கோள்களே அவ்வாறு கொண்டுசெல்லப்பட்டன. முன்னதாக ஒரே நேரத்தில் 20 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்தியதுதான் இஸ்ரோவின் ஆகச் சிறந்த அடைவாக இருந்தது. 37 செயற்கைக் கோள்களை ரஷ்யா செலுத்தியதுதான் உலகசாதனையாக இருந்தது. இந்த நிலையில் 104 செறய்கைக் கோள்களைச் செலுத்தி உலகசாதனை படைத்தது இஸ்ரோ. (ம)

ஜெய

சென்னை,
அ.தி.மு. கழ
செயலாளர
மணியின்
நியமித்தார்
கடந்த 20
லலிதா, தி
குடும்பத்தி
இருந்து நீ
மன்னிப்பு
அடிப்படை
விட்டு வில

சசிக
ஆள்
வழ



சென்னை
அ.தி.மு. ச
கலா மற்
தெரிந்
பழனிச்சா
பொலிஸ்
உள்பட மூ
பதிவுசெய்
சசிகலா த
தலின் அ
னேன் என்
வம் கடந்
கிழமை இ
புதிய ஆட்
பில் சசிக
தக்கவை
செல்வமு
இதனால்
கூவத்தூர்
வைத்தார்
காலமாக
அங்கேயே
பல்வேறு
அவர்கள்
யில் இருந்
உறுப்பின
என்று கு
மதுரை
உறுப்பின
உள்ளிட்ட
செயலாள
சசிகலா
பழனிச்சா
பதிவுசெய்



# ஜெயாவால் தூக்கி எறியப்பட்டவரை துணைப் பொதுச்செயலாளராக நியமித்தார் சசி

சென்னை, பெப். 16
அ.தி.மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக தனது சகோதரி வனிதா மணியின் மகன் டி.டி.வி. தினகரனை நியமித்தார் சசிகலா.
கடந்த 2011 ஆம் ஆண்டு ஜெயலலிதா, தினகரன் உட்பட சசிகலா குடும்பத்தினரை அ.தி.மு. கழகத்தில் இருந்து நீக்கினார். பின்னர் சசிகலா மன்னிப்புக் கேட்டுக் கொண்டதன் அடிப்படையிலும் தனது குடும்பத்தை விட்டு விலயுள்ளேன் என்று தெரிவித்ததன் அடிப்படையிலும் அவரை மட்டும்மீண்டும்கட்சியில்சேர்த்தார்ஜெயலலிதா. ஜெயலலிதாவின் சாவின் பின்னர் தினகரன், சசிகலாவுடன் போயஸ் இல்லத்தில் வாழ்ந்து வருகிறார். முக்கிய சந்திப்புக்களில் சசிகலாவுடன் கூடவே இருந்தார். இதனால் சசிகலா, ஜெயலலிதாவால் ஒதுக்கப்பட்டவர்களை மீண்டும் இணைக்கிறார் என்றும் தனது குடும்ப ஆட்சியை நிலைநாட்டத் துடிக்கிறார் என்றும் தெரிவித்து முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் போர்க்கொடி தூக்கினார்.
இந்த நிலையில் துணைப் பொதுச்செயலாளராக தினகரன் நியமிக்கப்பட்டமை ஓ.பி.எஸ்ஸின் குற்றச்சாட்டுக்களை மேலும் வலுப்படுத்தும் விதமாக அமைந்தது.
சசிகலா, தான் சிறை சென்றாலும் கட்சியில் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைநாட்டும் நோக்கிலேயே தனது உறவினரைத் துணைப் பொதுச்செயலாளராக நியமித்தார் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். (ம)



# சசிகலா மீது ஆள்கடத்தல் வழக்குப் பதிவு



சென்னை, பெப். 16
அ.தி.மு. கழக பொதுச் செயலாளர் சசிகலா மற்றும் அவரால் முதல்வராகத் தெரிந் தெடுக்கப்பட்ட எடப்பாடி பழனிச்சாமி இருவர் மீது கூவத்தூர் பொலிஸ் நிலை யத்தில் ஆள்கடத்தல் உள்பட மூன்று பிரிவுகளில் வழக்குப் பதிவுசெய்யப்பட்டது.
சசிகலா தரப்பினரால் தான், வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவி விலகினேன் என்று முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கடந்த 7 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இரவு குறிப்பிட்டார்.
புதிய ஆட்சியை அமைக்கும் முனைப்பில் சசிகலாவும், தனது ஆட்டசியைத் தக்கவைக்கும் முனைப்பில் பன்னீர் செல்வமும் இருந்தனர்.
இதனால் சட்டமன்ற உறுப்பினர்களை கூவத்தூர் நட்சத்திர விடுதியில் தங்க வைத்தார் சசிகலா. கிட்டத்தட்ட ஒருவார காலமாக சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கேயே தங்கவைக்கப்பட்டிருந்தனர்.
பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. விடுதியில் இருந்து தப்பிவந்த சில சட்டமன்ற உறுப்பினர்கள் தாம் கடத்தப்பட்டோம் என்று குறிப்பிட்டனர். இந்த நிலையில் மதுரை தெற்குத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சரணவன், ஆட்கடத்தல் உள்ளிட்ட மூன்று பிரிவுகளில் பொதுச் செயலாளர் சசிகலா, முதல்வர் பதவிக்கு சசிகலாவின் தெரிவான எடப்பாடி பழனிச்சாமி இருவர் மீதும் வழக்குப் பதிவுசெய்தார். (ம)






நீரிலும், ஆகாயத்திலும் பயணிக்கவல்ல விமானத்தை அமைத்து வருகிறது சீனா. ஏ.ஜி.-600 என்று விமானத்துக்குப் பெயரிடப்பட்டது. இந்த வருடத்தின் முதல் பாதிக்குள் விமானத்தில் கட்டுமானங்கள் முடிவடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்சீனக் கடல் விவகாரம் முற்றிவரும் நிலையிலும், அமெரிக்கா, சீனா இடையே முறுகல் இருந்துவரும் நிலையிலும் இந்தக் கட்டுமானம் துல்லியத்தன்மையுடைய வெற்றியை அளித்தால் அது சீனாவுக்கு பெரும் சாதகம் என்று கருதப்படுகிறது. (ம)

# கிம் ஜோங் உன்னின் சகோதரர் விச ஊசி போடப்பட்டு படுகொலை

பியாங்யாங், பெப். 15
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் சகோதரர் மலேசியாவில் படுகொலை செய்யப்பட்டார் என்று நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டது. அவர் விசஊசி போடப்பட்டே கொல்லப்பட்டார் என்று முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. கிம் ஜோங் உன்னின் ஒன்றுவிட்ட சகோதரரான (உன்னின் தந்தையின் சகோதரரின் மகன்) கிம் யோங் நாம் என்பவரே அவ்வாறு படுகொலை செய்யப்பட்டார். இரண்டு பெண் முகவர்கள் மூலம் விசஊசி போடப்பட்டு அவர் படுகொலை செய்யப்பட்டார் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)







# தென்சீனக் கடல் பரப்பில் மிதக்கும் அணு உலைகள்

## அமைக்க சீனா திட்டம்

பீஜிங், பெப். 16
தென்சீனக் கடற்பரப்பில் மிதக்கும் அணு உலைகளை அமைக்க சீனா திட்டமிட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தென்சீனக் கடல் பகுதியின் பெரும் பகுதியை சொந்தம் கொண்டாடி வரும் சீனா, அங்கு செயற்கைத் தீவுகளை உருவாக்கி கடற்படைத் தளங்களை அமைத்து வருகின்றது.
சீனாவின் இந்த நடவடிக்கைக்கு அண்டை நாடுகளான வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, தைவான் ஆகிய நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.
தென்சீனக் கடலில் உள்ள சில தீவுகள் மற்றும் சீன அரசு அமைத்து வரும் செயற்கைத் தீவுகள் ஆகியவற்றின் மின்சாரத் தேவைகளுக்காக, கடலில் சுமார் 20 மிதக்கும் அணு உலைகளை அமைக்க சீன அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
இதுதொடர்பாக, சீன பாதுகாப்பு அமைச்சக அறிவியல், தொழில்நுட்ப நிறுவனத்தின், இணை இயக்குநர் வாங் ஜேய், இயற்கைச் சீற்றங்களில், மிதக்கும் அணு உலைகள் சிறிய அளவிலான பாதிப்பை மட்டுமே சந்திக்கும். ஏதேனும், அவசரமான சூழ்நிலை ஏற்பட்டால்கூட அணு உலைகளை எளிதாகக் கையாளலாம். பராமரிப்பு செய்வதும் எளிது. தென்சீனக் கடலில் 23 அணு உலைகள் படிப்படியாக அமைக்கப்படும் என நேற்றுமுன்தினம் தெரிவித்தார். (ம)



# ட்ரம்புக்கு எதிரான மக்கள் கருத்தை நிராகரித்தார் மே

லண்டன், பெப். 16
அமெரிக்காவின் புதிய அதிபராக பொறுப்பேற்றுள்ள டொனால்ட் ட்ரமப், பிரிட்டனுக்கு வரக்கூடாது என்று நடத்தப்பட்ட கையெழுத்து வேட்டையில் 18 லட்சம் பேர் கையெழுத்திட்டுள்ள நிலையிலும் அவற்றை நிராகரித்தார் பிரிட்டன் அதிபர் திரேசா மே.
ட்ரம்ப்பின் அழைப்பை ஏற்று கடந்த மாதம் 27 ஆம் திகதியன்று ட்ரம்பைச் சந்தித்தார் பிரிட்டன் பிரதமர் திரேசா மே. இந்தச் சந்திப்பின் பின்னர், அரசு முறைப் பயணமாக பிரிட்டனுக்கு வருமாறு ட்ரம்புக்கு அழைப்பு விடுத்தார். இந்த ஆண்டுக்குள் ட்ரம்ப் பிரிட்டன் செல்வார் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் அவருக்கு பிரிட்டனில் பெரும் எதிர்ப்பு எழுந்துள்ளது. ஆனால் ட்ரம்பை அழைத்தது சரியே என்று தெரிவித்து கையெழுத்து வேட்டையை ஏற்க மறுத்தார் மே. தேவைப்பட்டால், நாடாளுமன்றத்தைக் கூட்டி இதுதொடர்பாக விவாதம் நடத்தத் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ம)

# 9,000 வருடங்கள் பழைமையான மது

பீஜிங், பெப். 16
சீனாவின் வடக்குப் பகுதியில் 9 ஆயிரம் வருடங்கள் பழைமையான மதுசாரம் கண்டுபிடிக்கப்பட்டது.
கல், மரத்தால் உருவாக்கப்பட்ட தொட்டியில் இந்த மதுசாரம் பாதுகாக்கப்பட்டிருந்தது. அரிசி, தேன், பழங்கள் என்பவற்றைப் பாவித்து இந்தப் பானம் உருவாக்கப்பட்டுள்ளது என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். தம்மை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதற்காக இந்தப் பானத்தை மனிதர் கள் தயாரித்திருக்கலாம் என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ம)



# கடந்த ஆட்சியில் 110 மில்லியன் ரூபா நிதி இழப்பு நட்டமாக பதிவகியுள்ளது

## நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவிப்பு

வணிகம்



அதிக நிதி உள்ளீடுகளின் பரம்பலோடு அழிவுதருகின்ற போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

கடந்த ஆட்சியிலேயே அதிக நிதி மூலங்களின் இழப்பு நட்டமாக ஏற்பட்டுள்ளதான தகவல் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.


இதன்படி 110 மில்லியன் ரூபா நிதி மூலங்களின் இழப்பானது நட்டமாக பதிவகியுள்ளதாக சொல்லப்படுகிறது.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தலைமையில் இடம்பெற்றிருந்த கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போதே இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தவிர, 11 அரச நிறுவனங்களில் இடம்பெற்றுள்ளதான மோசடிச் செயற்பாடுகளின் காரணமாக ஏற்பட்டுள்ளதான நட்டத்தை ஈடுசெய்ய தொடர்ந்தும் மக்கள் மீதே வரிச் சுமைகள் திணிக்கப்படும் விடயம் தொடர்பிலும் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்து கருத்துரைத்துள்ள நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க,

110 மில்லியன் ரூபா நட்டம் என்பது மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திலேயே ஏற்பட்டது. ஆனால் நல்லாட்சி அரசானது மக்கள் மீதாக எந்த வகையான நிதி சார் சுமைகளையும் திணித்துவிடாத வகையிலே ஒவ்வொரு செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது. கடந்த காலத்தில் நிதி ஈட்டங்களை வீண் விரையம் செய்து நிதி மூலங் களிடையே பாரியநட்டத்தை ஏற்படுத்தும்வகையில்செயற்பாடுகளை முன்னெடுத்தவர்களே தற்போது அதிக சத்தங்களை யும், கோங்களையும் எழுப்புகின்றனர். இந்த விடயங்களை பத்திரிகைகளிலும் இலத்திரனியல் ஊடகங்களிலும் காண முடிகின்றது. இவை நேற்று அல்லது நேற்று முன்தினம் இடம் பெற்ற விடயங்கள் அல்ல. அனைத்துமே மஹிந்த ராஜ பக்ஸவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற கைங்கரியங்களே" என்றார்.



# பழங்களை ஊடுருவிப் பார்க்கும் தொழில்நுட்ப செயலி அறிமுகம்

பழங்களை ஊடுருவிப் பார்ப்பதன் ஊடே அங்கு காணப்படுவதான புழு அல்லது பூச்சிகளை கண்டுகொண்டு கொள்வனவு செய்யக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் விதமான புதிய தொழில்நுட்ப செயலி அறிமுகம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி பிரான்ஹோபர் பேக்ட்ரி ஆப்பரேன் மற்றும் ஆட்டோமேன் நிறுவனத்தைச் சேர்ந்த பொறியியலாளர்கள் ஹாக்ஸ்பெக்ஸ் மொபைல் எனும் செயலியை உருவாக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த செயலியானது பொருள்களை அதிதிறன்பேசி மூலமாக ஒளிப்படப் பிரதி (ஸ்கான்) செய்து அதனுள் இருப்பதைக் கண்டறிந்து வெளிப்படுத்துகிறது.

உதாரணமாக அப்பிள் ஒன்றை ஸ்கான் செய்ய வேண்டுமெனில் ஹாக்ஸ்பெக்ஸ் செயலியை அதிதிறன்பேசியிலே இயங்குநிலை பெறச்செய்து பழத்தை ஒளிப்படப் பிரதி செய்ய வேண்டும். இதன்போது அப்பிள் பழத்தில் இருப்பதான பூச்சிக் கொல்லி எச்சங்கள் மற்றும் அதன் உறுப்புக்கள் என்பன அதிதிறன்பேசியின் திரையில் தென்படுகிறது.

சந்தையில் ஏற்கனவே பல்வேறு ஒளிப்படப்பிரதி சாதனங்கள் இருந்த போதும் இவை அதிதிறன்பேசிகளில் கூடுதலான பிரிசம் ஒன்றை தரவேற்றம் செய்யும் போது மட்டுமே வேலை செய்யும். ஆனாலும் இந்த செயலிஜனது இருந்தாலே போதுமானது அத்னுடன் அதிதிறன்பேசி யின் கமராவினை மட்டும் கொண்டே ஒளிப்படப்பிரதியை மேற்கொள்ளமுடிகிறது.

இந்த செயலியைக் கொண்டு உணவு வகைகளின் தரம் மற்றும் விவசாயம் சார்ந்த பயன்பாடுகளைப் பெற முடியுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன் வணிகப் பயன்பாட்டிற்காக இவை இந்த ஆண்டு நிறைவடைவதற்கு முன்பாக வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய தர விருதை பெற்றுக்கொண்டது

## களனி கேபிள்ஸ் பி.எல்.சி

இலங்கையின் முதல் தர பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தி வருகின்ற களனி கேபிள்ஸ் பி.எல்.சி இரண்டாவது தடவையாக தேசிய தர விருதை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த விருது வழங்கும் நிகழ்விலேயே பாரியளவு உற்பத்தி நிறுவனமான இயங்குகின்றமை, இலங்கை தரக்கட்டளைகள் நிறுவனத்தின் தர நிர்ணயங்களை ஒரு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக பேணுகின்றமை என்பதான வரையறைகளின் கீழான தெரிவாக 2017 ஆம் ஆண்டிற்கான இந்தவிருது களனிகேபிள்ஸ்பிஎல்சிக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

தவிர, விசேடத்துவமான விருதாக கருதப்படுகின்ற மேற்படி தேசிய விருதினை இரு தடவைகள் வெற்றியீட்டிய இலங்கையின் ஒரே வயர் உற்பத்தி நிறுவனமாக களனி கேபள்ஸ் பி.எல்.சி திகழ்கின்றமை நோக்கத்தக்கது.

இந்த விருதை பெற்றுக்கொண்டமை தொடர்பில் கருத்துரைத்துள்ள களனி கேபள்ஸ் பிஎல்சியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மஹிந்த சரணபால,

களனி கேபிள்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான இயக்கத்தின் பின்னணியில் சிறந்த தர நிர்ணயங்களை பேணிவருகிறோம். எமது தயாரிப்புகள் வாடிக்கையாளர்களினால் முதல் தர பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர் பாடல்கள் கேபிள்கள் உற்பத்தியாளர்களாக நாட்டில் இனங் காணப்பட்டுள்ளன. எமது நிறுவனத்துக்கு இது ஒரு சொத்தாக அமைந்துள்ளது. எமது தயாரிப்பின் சிறந்த தரத்துக்கு இது உண்மையான உறுதிமொழியாக அமைந்துள்ளது. தேசிய தர விருதுகளை இரண்டாவதாக வெற்றியீட்டியமையானது களனி கேபிள்ஸ் தயாரிப்புகளில் 2006 ஆம் ஆண்டு முதல் பேணப்படும் நிலைபேறான தரங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன- என்றார்.

# நுகர்வோர் சட்ட திட்டங்களை மீறுவோர் மீது நடவடிக்கை

## கைது செய்வதற்கு விசேட சோதனைப் பிரிவு ஆரம்பம்

நுகர்வோர் சட்ட திட்டங்களை மீறுவோருக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் அவர்களைக் கைது செய்வதற்குமாக புதிதாக விசேட சோதனைப் பிரிவொன்றை தற்போது நியமித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி பிரதேச ரீதியாக நிறுவப்பட்டுள்ள சுற்றிவளைப்பு பிரிவுகளுக்க மேலதிகமாக இந்த விசேட பிரவு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நிஸ்மத் டீன் தெரிவித்துள்ளார்.

இத்தகைய பிரிவுகள் ஒவ்வொன்றும் தங்களுக்கென தனியான தொலைபேசி இலக்கங்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன் நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான அதிகாரம் மேற்படி விசேட பிரிவுகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தவிர, நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் பிரதிப் பணிப்பாளர்களின் நேரடி கண்காணிப்பின் கீழாக இந்த புதிய பிரிவுகள் இயங்குநிலை பெறவுள்ளமை நோக்கத்தக்கது.





# உச்சநீதிமன்றத் தீர்ப்பினால் அடங்கிப்போனது சசிகலாவின் முதலமைச்சர் கனவு



கடந்த 33 ஆண்டுகளுக்கும் மேலாக ஜெயலலிதாவின் நிழலாகத் தொடர்ந்து வந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சசிகலா, அரசியல் வாழ்வில் தற்போது மாபெரும் சரிவை சந்திக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது.

1956 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி திருத்துறைப்பூண்டியில் விவே கானந்தன் - கிருஷ்ணவேணி தம்பதியினருக்கு ஆறு குழந்தைகளில் ஐந்தாவதாகப் பிறந்தவர் சசிகலா. எல்லா பெண்களைப்போலவே வளர்ந்த சசிகலாவின் வாழ்வில் திருமணம் பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியது. தி.மு.கவில் தீவிர ஈடுபாடு கொண்டவரும், மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரியுமான மன்னார் குடியைச் சேர்ந்த ம.நடராஜனை சசிகலா திருமணம் செய்து கொண்டார். இவர்களது திருமணத்தை தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி நடத்தி வைத்தார்.

**ஜெயலலிதாவுடன் அறிமுகம்**

தீவிர அரசியலில் இறங்கிய ஜெயலலிதா 1983 இல் அதிமுக கொள்கைப் பரப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டார். அப்போது கடலூர் மாவட்ட ஆட்சியராக இருந்த் சந்திர லேகாவை ஜெயலலிதாவுக்கு ஆலோசனை வழங்கவும், வழிகாட்டவும் எம்.ஜி.ஆர் . கேட்டுக் கொண்டார். இதனால் ஜெயலலிதாவுக்கு நெருக்கமானார் சந்திரலேகா.

அந்த நேரத்தில் கடலூர் மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்த நடராஜன் தனது மனைவி சசிகலாவை சந்திரலே காவிடம் அறிமுகப்படுத்தினார். அப்போது சசிகலா திவாகரனுடன் இணைந்து ஆழ் வார்பேட்டையில் வீடியோ கடை நடத்தி வந்தார். அந்த வீடியோ கடையிலிருந்து ஜெயலலிதா தனக்குப் பிடித்த படங்களின் வீடியோக்களை வாங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அப்போது போயஸ் கார்டனுக்கு அடிக்கடி சென்று வந்த சசிகலா ஜெயலலிதாவின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்தார்.

**முதல் அரசியல் பணி**

அந்தக் காலகட்டத்தில் எஸ்.டி.சோமசுந்தரம், அழகு திருநாவுக்கரசு ஆகியோர் ஜெயலலிதாவை அழைத்து மன்னார்குடியில் பொதுக் கூட்டம் நடத்தினர். இதற்கு சசிகலாவும், திவாகரனும் ஏற்பாடு செய்தனர். இந்தப் பொதுக் கூட்டம் வெற்றிகரமாக அமைந்ததால் ஜெயலலிதாவும் - சசிகலாவும் நெருங்கிய தோழிகளாக மாறினர். இதுதான் சசிகலாவின் முதல் அரசியல் பணி.

அதன்பிறகு போயஸ் தோட்ட இல்லத்திலேயே சசிகலா தங்கத் தொடங்கினார். ஜெயலலிதா எங்குச் சென்றாலும் அங்கு சசிகலாவும் இருப்பார். அந்த அளவுக்கு இருவரது நட்பும் வளர்ந்தது.

**எம்.ஜி.ஆர். மறைவு தந்த வாய்ப்பு**

1987இல் முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர். மறைந்ததும் அரசியலில் இருந்து ஜெயலலிதாவை ஓரங்கட்ட அ.தி.மு.க. மூத்த தலைவர்கள் முயன்றனர். எம்.ஜி.ஆரின் உடல் அருகில் கூட ஜெயலலிதாவை நிற்க அனுமதிக்காமல் அவமானப்படுத்தினர்.

அந்த நேரத்தில் ஜெயலலிதாவுக்கு ஆறுதல் தெரிவித்த சசிகலாவும், அவரது குடும்பத்தினரும் அவரின் அரசியல் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தனர். எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பிறகு அ.தி.மு.க. ஜெயலலிதா அணி, ஜானகி அணி என இரண்டாகப் பிரிந்தது.

1989 தேர்தலில் அ.தி.மு.க. ஜெ. அணி பிரதான எதிர்க் கட்சி அந்தஸ்தைப் பெற்றது. ஜெயலலிதா எதிர்க்கட்சித் தலைவரானார். ஜெயலலி தாவுக்கு கிடைத்த வெற்றியால் அவரது தலைமையில் அ.தி.மு.க. ஒன்றிணைந்தது. இரட்டை இலை சின்னம் மீண்டும் கிடைத்தது. இதுபோன்ற சோதனையான கால கட்டங்களில் ஜெயலலிதாவுக்குத் துணையாக இருந்தவர் சசிகலா.

**வளர்ப்பு மகன் திருமணம்**

1991 இல் ஜெயலலிதா முதல்வரானார். சசிகலாவின் அக்கா மகன் சுதாகரனை தனது வளர்ப்பு மகனாக அறிவித்த ஜெயலலிதா, அவருக்கு ஆடம்பரமாகத் திருமணம் நடத்தினார். இது அவரது அரசியல் வாழ்வில் பெரும் பின்ன டைவை ஏற்படுத்தியது. இந்தக் கால கட்டத்தில்தான் சசிகலாவுக்கு அ.தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது. இந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் எழுந்தன. இதனால் 1996 தேர்த லில் அ.தி.மு.க. படுதோல்வி அடைந்தது. ஜெயலலிதாவால் கூட எம்.எல்.ஏ. ஆக முடியவில்லை.



> அதிகாரபூர்வமாக அ.தி.மு.க. சசிகலாவின் கட்டுக்குள் வந்தது. சசிகலாவின் அரசியல் வாழ்வில் பெற்ற மிகப்பெரிய ஏற்றம் இது. கட்சியைக் கட்டுக்குள் கொண்டு வந்த அவர் முதல்வர் பதவியை நோக்கி காய்களை நகர்த்தினார். கடந்த 5 ஆம் திகதி அ.தி.மு.க. சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக சசிகலா தேர்வு செய்யப்பட்டார். 7 அல்லது 9 ஆகிய திகதிகளில் அவர் முதல்வராக பதவியேற்பார் என் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார்.

**சசிகலா வெளியேற்றம்**

அதனைத் தொடர்ந்து சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினரை ஜெயலலிதா வீட்டை விட்டு வெளியே அனுப்பினார். சுதாகரனைத் தனது வளர்ப்பு மகன் இல்லை என்றும் அறிவித்தார். கட்சிப் பொறுப்புக்களில் இருந்தும் நீக்கினார். ஆனால், சில மாதங்களிலேயே போயஸ் தோட்ட இல்லத்துக்கு சசிகலா திரும்பினார். அதன்பிறகு சசிகலாவின் அக்கா மகன் டி.டி.வி தினகரனை ஜெயலலிதா எம்பியாக்கினார். சசிகலாவின் அண் ணன் மகன் டாக்டர் வெங்கடேசன் சில ஆண்டுகள் கட்சிப் பொறுப்பில் இருந்தார். இவர்களைத் தவிர, சசிகலா குடும்பத்தில் எவருக்கும் ஜெயலலிதா பதவி அளிக்கவில்லை.

**இரண்டாவது முறையாக வெளியேற்றம்**

2011 இல் ஜெயலலிதா முதல்வரானதும் சில மாதங்களிலேயே சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் அனைவரையும் கட்சியை விட்டு நீக்கியதுடன், போயஸ் கார்டனில் இருந்தும் வெளியேற்றினார். ஆனால், சசிகலா மன்னிப்புக் கடிதம் கொடுக்க 10 மாதங்களில் அவரை மட்டும் போயஸ் கார்டன் வீட்டில் ஜெயலலிதா அனுமதித்தார். மற்ற வர்கள் எவரையும் ஜெயலலிதா கட்சியிலும், வீட்டிலும் அனுமதிக்கவில்லை.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் பதவி தவிர வேறு எந்தப் பொறுப்பும் சசிகலாவுக்கு வழங்கப்படவில்லை. ஆனால், அ.தி.மு.கவில் ஜெயலலிதாவுக்கு அடுத்த அதிகார மையமாக அவரே இருந்தார். அதுவும் கடந்த 5 ஆண்டுகளில் கூட்டணி பேச்சு, அ.தி.மு.க. நிர்வாகிகள் நியமனம், வேட்பாளர் தேர்வு, அமைச்சர்கள் நியமனம், நீக்கம் என அனைத் தையும் சசிகலாவே மேற்கொண்டார் என பேசப்பட்டது. அந்த அளவுக்கு அதிகாரம் மிக்கவராக சசிகலா இருந்தார்.

**ஜெ. மறைவுக்குப் பிறகு..**

கடந்த செப்ரெம்பர் 22 ஆம் திகதி அப்பலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஜெயலலிதா டிசம்பர் 5 ஆம் திகதி காலமானார். அதனைத் தொடர்ந்து கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி சசிகலா அ.தி.மு.க .பொதுச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். அதிகாரபூர்வமாக அ.தி.மு.க. சசிகலாவின் கட்டுக்குள் வந்தது. சசிகலாவின் அரசியல் வாழ்வில் பெற்ற மிகப்பெரிய ஏற்றம் இது. கட்சியைக் கட்டுக்குள் கொண்டு வந்த அவர் முதல்வர் பதவியை நோக்கி காய்களை நகர்த்தினார். கடந்த 5 ஆம் திகதி அ.தி.மு.க. சட்டப்பேரவைக் கட்சித் தலைவராக சசிகலா தேர்வு செய்யப்பட்டார். 7 அல்லது 9 ஆகிய திகதிகளில் அவர் முதல்வராக பதவியேற்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், முதல்வராக இருந்த ஓ.பன்னீர்செல்வம் அவருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினார். இதனால் அவரது அரசியல் வாழ்வில் சறுக்கல் தொடங்கியது. முதல்வர் பதவியேற்பு தள்ளிப்போனது.

தற்போது சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலாவுக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.10 கோடி அபராதமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனால் அவர் 4 ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டியிருக்கும். 10 ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சசி கலாவின் முதல்வர் கனவு தகர்ந்துள்ளது. அரசியல் ஏற்ற-இறக்கங்களை சந்தித்த சசிகலா, ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு கட்சியை கைப்பற்றி உச்சத்துக்குச் சென் றார். ஆனால், உச்ச நீதிமன்ற தீர்ப்பு மூலம் மிகப்பெரிய சரிவைச் சந்தித்துள்ளார்.

*நன்றி: தமிழ் இந்து*

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பேச்சு எதுவாக இருந்தாலும் இலக்கு மாறுபட முடியாது!

சுவட்டாட்சிக்குப் பதிலாக, அர்த்தமுள்ள வகையில் அதிகாரப் பகிர்வு தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குக் கூட்டமைப்புத் தயாராகவே இருக்கின்றது என்று அதன் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிக்கிறார். பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் (பிபிசி) சிங்கள சேவைக்கு அவர் இதைக் கூறினார்.

அவரது இந்தக் கருத்துக்குக் கூட்டமைப்பு எதிர்ப்பாளர்களிடமிருந்து பலத்த விமர்சனம் எழும்பியுள்ளது. கூட்டமைப்புக் கடைசியில் கூட்டாட்சியையும் கைவிட்டுவிட்டது என்று அவர்கள் கூற ஆரம்பித்திருக்கிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினரின் கூற்று தமிழ் மக்களிடமும் இதேபோன்ற சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. அதற்கு உறுதியான ஒரு பின்னணியும் உண்டு.

1977இல் தனித் தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்துத் தமிழ் மக்களின் பேராதரவை அள்ளியது தமிழர் விடுதலைக் கூட்டணி. அதன் மூலம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியாகவும் இடம் பிடித்தது. ஆனால், அதன் பின்னர் தனது கோரிக்கையைச் செயற்படுத்தக் கூட்டணி நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் இளைஞர்களிடம் எழுந்த சீற்றம் வன்முறையாக மாறி தமிழ்த் தலைவர்களையே கொன்றொழித்தமை வரலாறு.

இந்தப் படிப்பினை தமிழ் மக்களுக்கு இன்னமும் ஞாபகத்தில் இருக்கிறது. இதனால் தமிழ்த் தலைவர்களைச் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நோக்கும் குணம் இப்போது தமிழ் மக்களிடம் இல்லை. எனவே நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் "கூட்டாட்சியை (சமஷ்டி) விட்டுக்கொடுக்கவும் தயார்" என்று சொன்னதை அவர்கள் சந்தேகத்துடன் நோக்குவது நியாயமானது.

இருந்தாலும், அண்மைக் காலமாக எதிர்க் கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் தெரிவித்து வரும் கருத்துகளின் பின்னணியில் இந்த விடயத்தை நோக்க வேண்டியுமிருக்கிறது. இதுவரையான அமைதி முயற்சிகள் அனைத்தையும் முறித்துக்கொண்டது தமிழர்களின் தரப்பு என்கிற பார்வையே இருக்கிறது, மீண்டும் ஒரு தடவை அப்படி நடப்பதை நாம் அனுமதிக்கப்போவதில்லை என்று அவர்கள் திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகிறார்கள்.

அதாவது எத்தகைய சவால் வந்தபோதிலும் அமைதி முயற்சியைவிட்டுத் தமிழர் தரப்பு விலகிச் செல்லவில்லை என்ற செய்தியை உலகுக்கு உறுதியாகத் தெரியப்படுத்த அவர்கள் விரும்புகிறார்கள். ஒருவேளை இந்த அமைதி முயற்சியைச் சிங்களத் தரப்புக் குழப்பியடித்து அது முறிந்துபோனால், அல்லது சிங்களத் தரப்பினர் ஏமாற்றிவிட்டால் அப்போது உலக நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதற்கு தமது இந்த நிலைப்பாடு மிக முக்கியமான அடிப்படை என்று சம்பந்தரும் சுமந்திரனும் கருதுகிறார்கள்.

அதனால்தான் கூட்டாட்சி (சமஷ்டி) என்பதுதான் சிங்களத் தரப்பினருக்குப் பிரச்சினையாக இருந்தால், அதையும்கூடக் கைவிட்டு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு ஒன்றுக்குத் தயாராக இருக்கிறது தமிழர் தரப்பு என்கிற தொனியில் சுமந்திரனது கருத்துப் பார்க்கப்பட வேண்டும்.

ஆனால், இதன் பின்னுள்ள மிக முக்கிய கேள்வி என்னவென்றால், எவ்வளவு காலத்துக்கு இப்படியே "நாம் நல்லபிள்ளைகள்தான்" என்கிற வகிபாகத்தைத் தமிழர்கள் தக்கவைத்துத் தொடர்வது? ஏனெனில் இப்போது மைத்திரியும் ரணிலும் செய்வதைப்போன்றே, சிங்களத் தரப்பு காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தால் அதன் பின்னாலேயே தமிழர்கள் எவ்வளவு காலத்திற்கு இழுபட முடியும்?

இந்தக் கேள்விக்குப் பதில் எதிர்க்கட்சித் தலைவரிடமோ நாடாளுமன்ற உறுப்பினரிடமோகூடக் கிடையாது என்பது திண்ணம். இந்த அடிப்படையில் பார்த்தால், இதுபோன்று சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தித் தமிழ் மக்களைக் குழப்பும் விதத்திலான பேச்சுத் தேவைதானா என்கிற கேள்வியும் நியாயமானதே!

என்றாலும், "அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு" என்ற சொல்லையும் சுமந்திரன் அதற்குள் புகுத்தியிருக்கிறார். அந்த அர்த்தமுள்ள என்பது, தமிழ் மக்களின் இறைமையின் அடிப்படையிலான, வடக்கு–கிழக்கு இணைந்த, தமிழர்கள் தம்மைத்தாமே ஆளத்தக்க, தமிழர் ஒரு தேசம் என அங்கீகரிக்கப்பட்ட, தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்ட ஒரு தீர்வு எனப் பொருள்பட்டிருக்கவேண்டும். அதல்லாத ஒன்றைத் தமிழர்கள் ஏற்கப்போவதில்லை. பேச்சில் எதைக் கூறினாலும், இலக்கு ஒன்றாக மட்டுமே இருப்பதை உறுதிசெய்வது தமிழ்த் தலைவர்களின் மிக முக்கிய கடமை.



# காணாமல் போனோர் விவகாரம் இனியும் இழுத்தடிக்கப்படக் கூடாது

■ எம்.ஐ.முபாறக்

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துவிட்டன. அந்த மாற்றம் ஏற்பட்ட வேளையில் சிறுபான்மை இன மக்களிடம் காணப்பட்ட உற்சாகமும் மகிழ்ச்சியும் இப்போது இல்லை என்றே சொல்ல வேண்டும். அரசுமீதான நம்பிக்கை படிப்படியாகக் குறைந்துகொண்டு போகின்றது; இந்த ஆட்சியிலும் தமது உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தத்தான் வேண்டுமா என்ற என எண்ணத் தலைப்பட்டுள்ளனர் அவர்கள்.

குறிப்பாக, வடக்கு–கிழக்கு தமிழர்கள் விடயத்தில் அரசு ஆரம்பத்தில் காட்டிய அக்கறை அளவுக்கு அதன் செயற்பாடுகள் அமையவில்லை. அவர்களின் காணித் துண்டுகள் சில விடுவிக்கப்பட்டதுடன் சரி. ஏனைய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் எல்லாம் பேச்சளவில் மட்டும்தான் உள்ளன.

அரசியல் தீர்வு கிடைக்குமா, கிடைக்காதா என்ற சந்தேக நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

> சர்வதேசத்தில் இலங்கையின் பெயர் மிக மோசமாகப் பேசப்பட்டதால் தமிழர்களுக்கு நீதி வழங்க நடவடிக்கை எடுப்பதுபோல் மகிந்த நாடகமாடத் தொடங்கினார். அந்த நாடகத்தின் ஓரங்கமாக காணாமல் போனோரைக் கண்டுபிடிக்க–அது தொடர்பிலான முறைப்பாடுகளைத் திரட்டுவதற்காக ஜனாதிபதி ஆணைக் குழுவை அமைத்து படங்காட்டத் தொடங்கினார்

இந்த வருடம் அரசியல் தீர்வு வழங்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி கூறும் அதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ இழுபறியான கருத்துக் கூறத் தொடங்கியுள்ளது. அப்படித்தான் தீர்வு வழங்கப்பட்டாலும், அது தமிழர்கள் விரும்பும் தீர்வாக இருக்குமா என்பது அடுத்த சந்தேகம். ஆனால் அரசு தனது வாக்குறுதிகளைச் சொல்லிச்சொல்லியே சர்வதேசத்தைச் சமாளித்துக்கொண்டு செல்கின்றது.

**முடிவு காண்பதான அரசின் வாக்குறுதி இன்னமும் இழுபறியில்**

அவ்வாறு வாக்குறுதியோடு நிற்கின்ற விடயங்களுள் ஒன்றுதான் காணாமல் போனோரைக் கண்டறியும் நடவடிக்கை. போர் இடம்பெற்ற வேளையில் உறவினர்களின் கண் முன்னே படையினரால் கைது செய்யப்பட்ட -வெள்ளை வான்களில் கடத்தப்பட்ட தமது உறவுகளைத் தேடித் தமிழர்கள் பல வருடங்களாகப் போராடி வருகின்றனர்.

மகிந்தவின் ஆட்சியில்தான் இந்தக் கடத்தல்களும் கைதுகளும் உச்சத்தில் இருந்தன. கடத்தப்பட்டவர்கள் - காணாமல் போனவர்கள் எவரும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவர்களின் உறவினர்கள் அவர்களைத் தேடி அலைகின்றனர். ஆனால், எதுவித பயனும் இன்னமும் கிட்டவில்லை. அது குறித்து அப்போதைய

மகிந்த அரசு பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.இருந்தும்,மக்கள் விடவில்லை.சர்வதேசத்தின் கவனத்துக்கு அந்த விடயத்தைக் கொண்டு சென்றனர்.

சர்வதேசத்தில் இலங்கையின் பெயர் மிக மோசமாகப் பேசப்பட்டதால், தமிழர்களுக்கு நீதி வழங்க நடவடிக்கை எடுப்பதுபோல் மகிந்த நாடகமாடத் தொடங்கினார்.அந்த நாடகத்தின் ஓரங்கமாக காணாமல் போனோரைக் கண்டு பிடிக்க-அது தொடர்பிலான முறைப்பாடுகளைத் திரட்டுவதற்காக ஜனாதிபதிஆணைக்குழுவை அமைத்துப் படங்காட்டத் தொடங்கினார்.

அந்த ஆணைக் குழு வடக்கு- கிழக்குக்குச் சென்று விசாரணைகளை நடத்தியது.புதிய அரசிடம் அது தொடர்பிலான அறிக்கையைக் கையளித்தது.அந்த அறிக்கையைப் பிரதமர் நாடாளுமன்றிலும் சமர்ப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து காணாமல் போனோரைக் கண்டுபிடிப்பதற்காக காணாமல் போனோர் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டமூலம் ஒன்றும் கடந்த வருடம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.ஆனால், எதுவுமே நடைமுறைக்கு வரவில்லை.ஆனால்,காணாமல் போனோரைத் தேடும் உறவினர்களின் போராட்டம் மாத்திரம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது?அவர்கள் உயிருடன் இருக்கின்றார்களா, இல்லையா என்று இன்னமும் அறிய முடியாமல் இருக்கின்றமைக்குக் காரணம், கடத்தியவர்கள் யார் என்று தெரியாதமைதான். கடத்தல்காரர்கள் அடையாளங் காணப்பட்டிருந்தால் இந்தப் பிரச்சினைக்குப் பெரும்பாலும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும். காணாமல் போனவர்கள் கண்டு பிடிக்கப்பட்டிருப்பார்கள், அல்லது அவர்கள் கொல்லப்பட்டிருந்தால் கொலையாளிகளுக்குத் தண்டனை கிடைத்திருக்கும்.உறவினர்களுக்கும் இறுதி முடிவு கிடைத்திருக்கும்.தேடுதல் நடவடிக்கையைக் கை விட்டிருப்பார்கள்.இந்தப் பிரச்சினை முழுமையாக முடிவுக்கு வந்திருக்கும். இந்த நிலையில்,கடத்தல்காரர்களைக் கண்டு பிடித்து இந்தப் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க இந்த அரசுக்கு ஒரு வாய்ப்பு இப்போது கிடைத்திருக்கின்றது.

**சாட்சிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுதல் அவசியம்**

அரசு இந்தச் சாட்சிகளின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கி அவர்களின் உதவியைப் பெற வேண்டும். அந்தச் சாட்சிகளை அடையாளங் கண்டு அவர்களை வெளி உலகுக்குக் காட்டாமல் மிகவும் ரகசியமாக அவர்களை வைத்துக் கொண்டு கடத்தல்காரர்களைக் கண்டு பிடிக்க அரசு முயல வேண்டும்.

இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர இதுதான் சரியான வழி.கடந்த காலங்களில் விசாரணைகள் என்ற பெயரில் படையினர்களும், அவர்களுடன் இணைந்த ஆயுதக் குழுக்களும் தங்களின் கண் முன்னே தங்கள் உறவினர்களைக் கடத்திச் சென்றனர் என்று உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அதுபோக,அநேகமான உறவினர்கள் விசாரணைகளுக்காக அவர்களே படையினரிடம் உறவினர்களை ஒப்படைத்திருக்கின்றனர்.பின்பு அவர்கள் திரும்பி வரவில்லை.ஆகவே, இவர்களை எந்த முகாமில் ஒப்படைத்தார்கள், எந்த ஆயுதக் குழு கடத்தியது என்பவை போன்ற விசாரணைகளை நடத்தினால் உண்மைகள் வெளி வரும்.

மாறாக,மக்களின் முறைப்பாடுகளை மாத்திரம் பதிவு செய்து, அவற்றை அரசிடம் ஒப்படைத்து, பின்பு நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதில் எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை. தற்போதைய விசாரணையின் வடிவத்தை மாற்றினால் மாத் திரமே இதில் ஒரு முன்னேற்றத்தைக் காண முடியும்.

உறவினர்கள் வழங்கும் தகவல்களுக்கு அமைய படையினரும் ஆயுதக் குழுக்களும் விசாரணைக்கு உற்படுத்தப்பட வேண்டும்.இந்தக் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட ஆயுதக் குழுக்களில் இருந்தவர்களின் பெயர், விபரங்கள் அநேகமான உறவினர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்களின் விபரங்களைப் பெற்று விசாரணைகளின் போக்கை மாற்றினால் இதில் இறுதி முடிவை எட்ட முடியும். கடத்தப்பட்டவர்கள் உயிருடன் உள்ளார்களா,இல்லையா என்ற விபரங்கள் நிச்சயம் வெளி வரும்.

இதைச் செய்வதற்கு சரியான வழி, சம்பவங்களைநேரில்கண்டவர்களின் உதவியைப் பெறுவதுதான்.அந்த உதவியைப் பெறுவதற்குத் தேவை அவர்களுக்கான பாதுகாப்பு.

இவ்வாறான விசாரணையை நோக்கி ஜனாதிபதி ஆணைக் குழுவை நகர்த்த வேண்டும் என்றால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உதவி அவசியம். சாட்சிகள் ஆணைக் குழுவை நம்பிச் சாட்சி சொல்ல முன்வரமாட்டார்கள். கூட்டமைப்பு இதில் நேரடியாகத் தலையிட்டால் மாத்திரமே இது சாத்தியப்படும்.சாட்சிகளைப் பாதுகாப்பது தொடர்பில் கூட்டமைப்பு சாதகமான வழிவகைகள் பற்றியும் சிந்திக்க வேண்டும்.


இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய தேவை எல்லோரையும் விட இந்த அரசுக்குத்தான் அதிகம்உண்டு.தமிழர்களின் பிரச்சனைகளுக்கு இந்த அரசு உரிய தீர்வை முன்வைக்கும் எனத் தமிழர்கள் நம்புவதாலும், நல்லாட்சி என்ற சுலோகத்துடன் இந்த அரசு ஆட்சி செய்வதாலும், அவற்றைத் தக்கவைப்பதற்காக இந்தப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய தேவை அரசுக்கு உண்டு.

ஆகவே,காணாமல் போனோர் அலுவலகத்தை உடன் நிறுவி இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அரசு துரிதகதியில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.





காணாமல் போனோரைக் கண்டுபிடிப்பதற்காக காணாமல் போனோர் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கான சட்டமூலம் ஒன்றும் கடந்த வருடம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டது. ஆனால், எதுவுமே நடைமுறைக்கு வரவில்லை. ஆனால்,காணாமல் போனோரைத் தேடும் உறவினர்களின் போராட்டம் மாத்திரம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.



# வாசகர் திருமுகம்

## பட்டதாரிகள் ஆகும் வாய்ப்பு எமக்குக் கிட்டப் போவதில்லையா?

2001/2002 ஆண்டு வெளிவாரி மாணவர்களாகச் சேர்ந்து இன்றுவரை மீண்டும் மீண்டும் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் எங்களுக்கு பரீட்சையில் சித்தியெய்திப் பட்டம் பெற்றுக் கொள்ளும் ஆசை இருப்பது நியாயமே. ஆனால் எங்களால் அது முடியாதுள்ளது. காரணம் நாங்கள் எடுத்த பாடமோ அல்லது எமது கஷ்ட காலமோ தெரியாது. மீண்டும் மீண்டும் பரீட்சை எழுத வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகின்றோம்.

பட்டம் பெறுவதற்கு கலை முதற்தேர்வு, பகுதி 1, பகுதி 2, என மூன்று பகுதிகளில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அதில் கலை முதற் தேர்வில் மூன்று பிரதான பாடங்களும், இரண்டு துணைப் பாடங்களும் காணப்படும். பகுதி 1 இல் 3பிரதான பாடங்களுடன் ஆங்கிலம் கட்டாய பாடமாகும். பகுதி 2, மூன்று பிரதான பாடங்கள் மட்டுமே. ஒவ்வொரு பிரதான பாடங்களும் இரு பகுதிகளைக் கொண்டவை. எனவே ஒரு மாணவனோ மாணவியோ பட்டம் பெறுவதற்கு முழுமையாக பல பரீட்சைப் பகுதிகளில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

இந்த வருடம் வரை அரச வேலை வாய்ப்புக்குரிய வயதெல்லை 35 வருடங்கள் என வரையறுக்கப்பட்டிருந்தது. கடந்த மாதம் தான் அது 40 வயதாகக் கூட்டப்பட்டு இருக்கின்றது. இந்த நிலையில் எப்படி எம்மால் பரீட்சையில் சித்தியெய்திப் பட்டம்பெற முடியும்? புதிய வயதெல்லைக்குள் அரச தொழில் ஒன்றில் இணைய முடியும்? எனவே எம்மைப்போன்ற மாணவர்களுக்கு எமது பல்கலைக்கழகம் இரக்கம் காட்டவேண்டும்.

பட்டம் பெற்று நாம் வெளியேறினாலும், ஒவ்வொரு வேலைவாய்ப்புக்கும் போட்டிப் பரீட்சையை எதிர் கொள்ள வேண்டும். அப்படி இருக்கும்போது எமது எதிர்காலம் கேள்விக்குறியாகவே அமைகின்றது. எமது பிள்ளைகளே கல்வி கற்கப் பாடசாலைக்குச் செல்லும் பொழுது, நாம் தொடர்ந்தும் பரீட்சை எழுதிக் கொண்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும். அடுத்து ஆரம்பத்தில் ஒரு யூனிற்றுக்கு 200 ரூபாவாக இருந்த பரீட்சைக்கட்டணம், இன்று ஒரு யூனிற்றுக்கு 500 ரூபாவாகக் காணப்படுகின்றது. இதனால் எம்மில் பலர் நெருக்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

நாம் வெளிவாரிப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களாகப் பதிந்து நீண்ட (5, 6) ஆண்டுகளுக்குப் பிறகுதான் பரீட்சை நடந்தது. அதற்கு காரணம் நாட்டுச் சூழ்நிலை. இவ்வாறு சூழ்நிலைகள் எமக்குப் பாதகமாக மாறி விடுகின்றன. எனவே எம்மைப்போன்ற நீண்டகால மாணவர்களைக் கருத்தில்கொண்டு, எமது பட்டப்படிப்பை முழுமை செய்வதற்கான ஒருவாய்ப்பை ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*பாதிக்கப்பட்ட மாணவர்கள்*

Facebook : UTHAYAN_PRINT
Twitter : UTHAYANPRINT




**மனைவி :** என்னாங்க, இதுவரைக்கும் ரெண்டு பேரா இருந்து வந்த நாம, இனிமே மூனு பேரா ஆகப் போகிறோம்

**கணவன் :** அடி கள்ளி.. எங்கிட்ட சொல்லவே இல்லையே. எத்தனை மாசம்....?

**மனைவி :** அதில்லை எங்க அம்மாவும் நம்ம கூடவே வந்து தங்கப் போறாங்க.


# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 2 | | | |
| | 8 | | | 7 | | | 3 | |
| 9 | | 6 | | | | 8 | | 5 |
| | | 8 | | | | | | 2 |
| | 4 | | | 1 | | | 7 | |
| 5 | | | | | | 9 | | |
| 6 | | 2 | | | | 4 | | 9 |
| | 3 | | | 8 | | | 1 | |
| | | | 4 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 2 | 6 | 5 | 7 | 3 | 4 | 8 |
| 8 | 3 | 6 | 4 | 9 | 2 | 5 | 7 | 1 |
| 7 | 5 | 4 | 3 | 1 | 8 | 9 | 2 | 6 |
| 6 | 1 | 5 | 8 | 4 | 9 | 7 | 3 | 2 |
| 2 | 4 | 3 | 7 | 6 | 5 | 1 | 8 | 9 |
| 9 | 7 | 8 | 2 | 3 | 1 | 4 | 6 | 5 |
| 5 | 6 | 7 | 9 | 8 | 4 | 2 | 1 | 3 |
| 4 | 8 | 1 | 5 | 2 | 3 | 6 | 9 | 7 |
| 3 | 2 | 9 | 1 | 7 | 6 | 8 | 5 | 4 |





# 1000 கோடி வசூலை குவித்த தீபிகா படுகோன் படம்

தீபிகா படுகோனேவின் முதல் ஹொலிவூட் படமான 'ரிபிள் எக்ஸ் ரிட்டன் ஆப்த சேன்டர் கேஜ்' படம் 1000 கோடி ரூபா வசூலை குவித்துள்ளது.

தமிழில் வெளியாகும் படங்கள் வசூலில் 100 கோடியை தொட்டு விட்டால் சாதனை என்று அறிவிப்பது வழக்கம். இந்தியிலும் முன்பு சாதனையாக கருதப் பட்டது. 100கோடிவசூல். இப்போது 300 கோடி தான் சாதனை என்று மாறி விட்டது.

இந்த நிலையில் ஹிந்தி நடிகை தீபிகா படுகோனே நடித்த முதல் ஹொலிவூட் படமான டிரிபிள் எக்ஸ் ரிட்டன் ஆப்த சேன்டர் கேஜ் உலகம் முழுவதும் ஆயிரம் கோடி வசூலித்து இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

550 கோடி செலவில் தயாரான இந்தப் படத்தின் வசூல் கடந்த ஞாயிறு வரை ஆயிரம் கோடி ஆகும். தொடர்ந்து இந்தப்படம் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தி பிரபல ஹீரோக்களையும் மிஞ்சும் அளவு தீபிகா படுகோனே, ஆயிரம் கோடி வசூல் பட பட்டியலில் சேர்ந்து இருப்பது தான் ஹிந்தி பட உலகில் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் செய்தி என சினிமா வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகின்றன.

போதுமென்ற மன நிறைவுக்கு நிகரான செல்வம் எதுவுமில்லை...

கடலில் கலந்த கச்சான் எண்ணெய்யை அகற்ற மாணவர்கள் முன்வரவேண்டும். - சுற்றுச் சூழல் துறை




அதெல்லாம் வர முடியாது. எங்க சின்னம்மா சும்மாதான் இருக்கு. அத கூட்டிட்டு போங்க. 33 வருட அனுபவம் வேற இருக்கு...

அம்மா, சின்னம்மா, இப்போ தீபா அம்மாவா.....



டேய் முடியலடா உங்க அம்மா பாசம்...

போன வருசம் டிசெம்பர் நியூஸ் சானல் பார்க்க ஆரம்பிச்சோம்...



இன்னும் முடியவே இல்லை....



நீலச்சாயம் வெளுத்து போச்சு! டும்... டும்... டும்... ராஜா வேசம் கலைஞ்சு போச்சு டும்... டும்... டும்...

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.







**மேடம்:** உங்கள் மீது பலரும் நல்ல எண்ணம் கொள்வர். மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். தொழில், வியாபாரத்தில் உருவான குறுக்கீடு மறையும். வருமானம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.



**இடபம்:** சிலர் உங்களின் வளர்ச்சி கண்டு பொறாமை கொள்வர். தொழில், வியாபாரத்தில் போட்டி குறுக்கிட்டாலும் லாபம் குறையாது. பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு கூடும்.



**மிதுனம்:** பணி நிறைவேற்ற விடாமுயற்சி தேவைப்படும். எவரிடமும் சண்டை, சச்சரவு வேண்டாம். தொழிலில் வருமானம் சீராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடும். ஆரோக்கியம் மேம்படும்.



**கடகம்:** நன்றி மறந்தவரைக் கூட மன்னிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.



**சிங்கம்:** அவசரப்பணியால் அவதிப்பட நேரிடலாம். அக்கம் பக்கத்தினரிடம் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.



**கன்னி:** எதிலும் சமயோசிதமாக செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். குடும்பத்தினரின் தேவை குறைவின்றி முழுமையாகும்.



**துலாம்:** நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறையை சரி செய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.



**விருச்சிகம்:** பேச்சில் இனிமை நிறைந்திருக்கும். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்தின் பரிசு, பாராட்டு கிடைக்கும். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்..



**தனுசு:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். திட்டமிட்ட பணிகள் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். நிலுவைப் பணம் வசூலாகும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும்.



**மகரம்:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படும்.



**கும்பம்:** மற்றவரிடம் குடும்ப விடயம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.



**மீனம்:** திட்டமிட்ட பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். இனிய அனுபவம் வாழ்வில் உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

# 2017 பெப்ரவரி மாத பலன்



## தனுசு


சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் இருக்கும் தனுசு ராசியினரே! இந்த காலகட்டத்தில் ராசிநாதன் குரு பலவந்தமாக லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எதிர்பார்த்த காரி யங்கள் மனதுக்கு திருப்தி அளிக்கும் விதத்தில் நடந்து முடியும், கடன் சுமை குறையும். எதிர்ப்புகள் அகலும். எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்யத் தோன்றும். எவருக்காவது உத்திரவாதம் தரும்போது கவனமாக இருப்பது நல்லது. சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும்.

தொழில் ஸ்தானாதிபதி புதன் தன ஸ்தானத்தில் பாக்கிய ஸ்தானத்தில் சூரியனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். தொழில், வியாபாரத்தில் கடினமான முயற்சிக்கு பிறகு எதிர் பார்த்த லாபம் வந்து சேரும். போட்டிகள் குறையும். புதிய வாடிக்கையாளர்களால் திருப்தி ஏற்படும்.
கடன் தொல்லைகள் குறையும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பதவிகள் தாமதமாக கிடைக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்தவர்களுக்கு நல்ல பலன் ஏற்படும். குடும்ப ஸ்தானத்தில் சூரியன் புதன் சஞ்சரிக்க விரய ஸ்தானத்தில் இருக்கும் சனி தனது மூன்றாம் பார்வையால் குடும்ப ஸ்தானத்தைப் பார்க்கிறார். வாழ்க்கைத் துணையின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும். எதிர்பாராமல் ஏற்படும் குடும்பச் செலவை சமாளிக்க தேவையான பண உதவியும் கிடைக்கும். சுக்கிரனின் சஞ்சாரத்தால் வீட்டுக்குத் தேவையான வசதிகள் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கப் பெறுவீர்கள்.
பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவி செய்யும்போது கவனம் தேவை. எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. கலைத்துறையினர் உற்சாகமாக செயற்பட்டு வேலைகளை உடனுக்குடன் செய்து முடிப்பார்கள். புதிய பதவி அல்லது பொறுப்புக்கள் கிடைக்கும். சாதகமாக பயன்படுத்தி முன்னேறுவீர்கள். குடும்பத்துடன் விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் சூழ்நிலை வரும். அரசியல்துறையினர் மனதிருப்தியுடன் காரியங்களை செய்து சாதகமான பலன் பெறுவீர்கள். பயணம் செல்ல நேரலாம். மனதுக்கு பிடித்தவர்களைச் சந்திக்க நேரிடலாம். பெரியவர்களின் சந்திப்பு மனதுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். உடனிருப்பவர்களுடன் எச்சரிக்கையாகப் பழகுவது நல்லது. ரகசியங்களை கையாளுவதில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற ஆசிரியர்களின் ஆலோசனையைக் கேட்டு பயன் பெறுவது நல்லது. முயற்சிகள் வெற்றி பெறும்.

பரிகாரம்:
திருவாசகம் படித்து வர எல்லா பிரச்சினைகளும் தீரும். மனதில் அமைதி உண்டாகும்.
அதிர்ஷ்ட கிழமைகள்:
திங்கள், வியாழன், வெள்ளி.

# உடலில் நச்சு நீக்கம் செய்யும் சில வழிமுறைகள்...


- ★ காலை – புதினா, வெள்ளரி, இஞ்சித் துண்டு, ஓரேஞ்சு ஆகியவற்றைத் தேவையான அளவு எடுத்து மிக்ஸியில் அரைத்து, வடிகட்டி இரண்டு லீற்றர் நீரில் கலந்து பிறகு பருகலாம்.
- ★ மதியம் – தேவையான அளவுக்கு பீட்ரூட், கரட், புதினா ஆகியவற்றை எடுத்து, மிக்ஸியில் போட்டு ஒரு சுற்று அரைத்துப் பிறகு பருகலாம். இந்தச் சாறு உடல் எடையைக் குறைப்பதோடு, சோம்பலையும் விரட்டும்.
- ★ ஓரேஞ்சு ஜூஸுடன் கிர்ணிப் பழ ஜூஸ் சேர்த்து அதனுடன் சீனி சேர்த்துக் குடிக்கலாம்.
- ★ இளநீருடன் சீரகத் தூள் சேர்த்துப் பருகலாம். இது, சருமத்தைப் பொலிவாக்கும்; உடலைக் குளிர்மையாக்கும்.



## இது புதுசு







முடிச்சு வூல் பான்டுகள் அறிமுகமாகியுள் ளன. முடிச்சிட்ட இவற்றின் அடிப்பகுதியில் வர்ண குமிழ்கள், வடிவங்கள் பொருத்தப் பட்டிருக்கும். இவை 80 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

# வரலாற்றில் இன்றைய தினம்

1742 - பிரிட்டன் அரசின் முதலாவது பிரதமரானார் ஸ்பென்சர் கொம்ரன்.
1937 - நைலோனுக்கான காப்புரிமத்தை அமெரிக்காவில் வல்லஸ் எச் கரோதேர்ஸ் பெற்றுக் கொண்டார்.
1945 - இரண்டாம் உலகப்போர் பிலிப்பைன்ஸின் கொரிகிடர் தீவில் அமெரிக்க படைகள் கால் பதித்தது.
1959 - ஜனவரி முதலாம் திகதி சர்வாதிகாரி புல்கென்சியோ படிஸ்பி வீழ்த்தப்பட்டபின் பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் பிரதமரானார்.
1998 - சீனவிமான சேவை விமாஸ் 676 சியாங்கைஷேக்பன்னாட்டுவிமானநிலையத்துக்கு சமீபமாக மக்கள் குடியிருப்புப் பகுதியிலுள்ள வீதியில் விபத்துக்குள்ளாகி அதிலிருந்த 196 பேரும் தரையிலிருந்த 7 பேரும் உயிரிழந்தனர்.
2013 - பாகிஸ்தான் கஷாறா நகரின் சந்தையொன்றில் குண்டு வெடித்ததில் 80 க்கு மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 190 பேர்வரை காயமடைந்தனர்.
1993 - பட்டினியின் கோர விளைவு பனை மட்டை பிடுங்கி விற்று பாண் வாங்க மரமேறிய சிறுவன் பனையால் விழுந்து சாவு .
1993 - ஆசிய உபகண்டத்தில் பாதுகாப்புக்கு அதிகளவில் செலவிடும் நாடுகளில் பாகிஸ்தானுக்கு அடுத்து இலங்கை.
2014 - ஈழத்தின் முதற் பெண் சரித்திர நாவலாசிரியர் திக்கம் சிவயோகமலர் மறைவு.
2014 - இலங்கைக்கு எதிரான பரப்புரையில் ஐ.நா. முன்னாள் அதிகாரி தீவிரம் என அரசு குற்றச்சாட்டு.
2014 - அமெரிக்காவுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்.
2014 - இராணுவம் பொறுப்பேற்ற புலிகளின் தளபதிகள் உட்பட 50 பேர் எங்கே? நேரில்கண்ட சாட்சி ஆணைக்குழுமுன் வாக்குமூலம்.
2014 - இராணுவத்தினிடம் சரணடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 5 பேர் எங்கே? சிறு குழந்தையையாவது மீட்டுத்தருமாறு ஆணைக் குழு முன் பேர்த்தியார் கதறல்.
2014 - மகனைக் கடத்தியவர்களை ஈ.பி.டி.பி. முகாமில் கண்டதாகத் தந்தை சாட்சியம்.
2014 - காணாமற் போகவில்லை இராணுவம் பிடித்துச் சென்றது என ஆணைக்குழு முன் சாட்சியம்
2016 - ஐ.நா.பரிந்துரையை மைத்திரி உதாசீனம் பரணகம ஆணைக் குழுவைக் கலைக்காது மேலும் 3 மாதங்கள் கால நீடிப்பு.
2016 - எனது நியமனத்தை மக்கள் ஏற்றுள்ளனர் என வடக்கு ஆளுநர் பெருமிதம்.
2016 - வாழ்வாதார நெருக்கடி வடக்கில் தொடர்வதாக உலக வங்கியின் ஆய்வறிக்கையில் தெரிவிப்பு.
2016 - வடக்கு ஆசிரியர்கள் புத்தளத்தில் பணியாற்றுவதால் நெருக்கடிகள். வடமேல் மாகாண அமைச்சுக்கு வடக்கு கல்வியமைச்சின் செயலாளர் கடிதம்.
2016 - பயன்தரு மரங்கள் பலவும் கேப்பாபிலவில் அழிப்பு எனக் குற்றஞ்சாட்டி நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை.

# நாளை

**மாசி-05**

வெள்ளிக்கிழமை -17.02.2017
திதி: ஷஷ்டி மு.ப. 10.34
நட்சத்திரம்: சுவாதி மா.05.20
சுபநேரம்:06.33-08.03 வரை
ராகுகாலம்:11.03-12.33 வரை

## பெயர் மாற்றம்

குளமாங்கால், மல்லாகத்தை வசிப்பிடமாக கொண்ட **யேசுராசா முகுதாசகதீசன்** ஆகிய எனது பெயரை இன்று முதல் **யேசுராசா கதீசன்** என்று பெயர் மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் **யே.கதீசன்** என்றே கையொப்பம் இடுவேன் என்று உறுதி அளிக்கின்றேன்.

**யே.கதீசன்**

## தேவை

சாவகச்சேரியில் இயங்கும் தேநீரகத்திற்கு சப்ளையர்கள் தேவை.

**தொடர்பு - 077 163 34 70**

## ஊர்க்கோழிகள் விற்பனைக்கு

2 மாத, 3 மாத ஊர்க்கோழிகள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 076 34 88 645**

## மரண அறிவித்தல்

# பொன்னம்பலம் நல்லையா

**( பேக்கரி நல்லையா.**
**செல்வம் பேக்கரி, சோளங்கன் கரணவாய் மேற்கு)**



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், கரணவாய் மேற்கு, சோளங்கனை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நல்லையா 12.02.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - செல்லம்மா தம்பதியரின் அன்புப்புதல்வரும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - ஆயிலியம் தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் (இராசமணி) ஆருயிர்க்கணவரும் தவமணி, தில்லையம்பலம், கிருஸ்ணவேணி, சின்னம்மா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கண்மணி, மனோன்மணி, மார்க்கண்டு, அன்னலஷ்மி மற்றும் விஸ்வலிங்கம் (பிள்ளையார் மணியம்), மாசிலாமணி ஆகியோரின் மைத்துனரும் ஆனந்தமலர் (கனடா), நவரஞ்சிதமலர் (சாவகச்சேரி), தர்மரத்தினசிங்கம் (தருமன் - சுவிஸ்), செல்வமலர் (செல்வா - கனடா), ஜெயமலர், கிருஸ்ணதேவி (சமுர்த்தி உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தவபாலச்சந்திரன் (இராசன் - கனடா), நந்தகுமார் (பிரத்தியேக ஆங்கில ஆசிரியர் - சாவகச்சேரி), றோசாறியோ (சறோ - சுவிஸ்), கணேசதாசன் (செல்வம் -கனடா), யோகேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபறஞ்சினி(வினோ)-குகனேந்திரராசா (குவேந்திரன்), றேணுகா-திருமாறன் (லண்டன்), ஜெயந்தன் (பிரபு - கனடா), ஜெனார்த்தனன் (கனடா), துஸ்யந்தன் (கனடா), சஞ்சேயன் (Technical Executive), கேகயன் (Software Engineer, களனி பல்கலைக்கழகம்), ஸ்ரிபன் (Electrical Engineer - சுவிஸ்), யெநாத்தன் (Auto Mobile Engineer - சுவிஸ்), டிலான் (வங்கி முகாமையாளர், சுவிஸ்), தமிழினி (கனடா), யாழினி (கனடா), தர்மினி (கனடா), கேனுசன், ஜெனுசன் ஆகியோரின் பேரனும் சுபீந்தன்,சுகீபன், கவிசா (லண்டன்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2017) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவரசம்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சோளங்கன்,**
**கரணவாய் மேற்கு, கரவெட்டி**
**077 6737 009**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### தேங்காய்...

எதிர்பார்க்கப்படுகின்றது. எண்ணெய் உற்பத்திக்கு தேங்காய் பயன்படுத்தப்பட்டால் தேங்காய்க்கு மேலும் தட்டுப்பாடு ஏற்படும். இதனால் இன்னமும் விலை அதிகரிப்பு ஏற்படக் கூடிய சூழல் காணப்படுகின்றது.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (இயங்கக்கூடிய) மில் உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 076 378 3408**

## தவறிவிட்டது

K.K.S வீதியில் கறுப்பு நிற பேஸ், மற்றும் முக்கிய ஆவணங்கள் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும் . **077 821 5249**

## மரண அறிவித்தல்

### திருமதி நீலாவதி பரமநாதபிள்ளை



தோற்றம் 07.01.1934 — மறைவு 15.02.2017

ஈஞ்சடி, சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீலாவதி பரமநாதபிள்ளை 15.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா- ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற பரமநாதபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் சுகந்தி (ஆசிரியர், இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயம்), சுமாலினி (M.L.T போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிறிகரன் (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்) கருணாகரன் (GIZ முன்னாள் உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமியாரும் திருநீலகண்டன், கனகபூசணி, பாக்கியலட்சுமி, காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிறிசங்கர், அபிசயன், சங்கீர்த்தன், அருணன், அஸ்வினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (16.02.2017) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப 10 .00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**ஈஞ்சடிவைரவர் கோயிலடி,**
**சுதுமலை வடக்கு,மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

தேங்காய் விலையை நிலையான மட்டத்தில் முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் குறுகிய கால உபாய வழிகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. நான்கு மாதங்களுக்குத் தேவையான கனிய எண்ணெய் 40 ஆயிரம் மெட்ரிக் தொன்னை மாத்திரம் இறக்குமதி செய்வதற்கு ஏதுவான முறையில் கீழ்வரும் வகையில் சிறப்புப் பண்டங்களின் வரியை திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ கிராமுக்கான சிறப்புப் பண்டங்களின் வரியினை 150 ரூபாவிலிருந்து 130 ரூபா வரை குறைத்தல், சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ கிராமுக்கான சிறப்புப் பண்டங்களின் வரியினை 130 ரூபாவிலிருந்து 110 ரூபா வரை குறைத்தல், சுத்திகரிக்கப்பட்ட பாம் தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ கிராமுக் கான சிறப்புப் பண்டங்களின் வரியினை 150 ரூபாவிலிருந்து 130 ரூபா வரை குறைத்தலுக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

(வ-5)

### வான்...

யளித்தாக, மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். இவ்வாறான தொரு நிலையிலேயே வான்படைப் பேச்சாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். ‘பிலக்குடியிருப்பு வான்படை முகாம் அமைந்துள்ள காணியை விடுவிப்பது தொடர்பில் எதுவித ஆலோசனைகளும் வான்படைக்கு கிடைக்கப்பெறவில்லை. இருப்பினும் இது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன’ என்று கிஹான் செனவிரத்ன தெரிவித்தார். (வ-5)

**INVITATION FOR BIDS**
**TEACHING HOSPITAL, JAFFNA**

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction of lift room and installation of Lift Machine works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of Lift Room & Installation of Lift Machine | 500.00 | 135,000.00 | 91 | 6.6 | C 7 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 16.02.2017 up to 09.03.2017 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 10.03.2017, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
16/02/2017.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியரான
திரு. மு.நவகாந்த் அவர்களின் தாயார்

**திருமதி சற்குணதேவி**
**முத்துலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**பாடசாலை சமூகம்**
**யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்.**

## ஆசிரியர்கள் தேவை

ஊவா மாகாண தமிழ் பாடசாலைகளில் சேவையாற்ற விரும்புபவர்கள் மற்றும் இடமாற்றங்களை பெற்று வர விரும்பும் ஆசிரியர்கள் ஆகியோரின் விவரங்கள் தேவைப்படுகின்றன.

உயர்தர வகுப்பில் இணைந்தகணிதம், விஞ்ஞானம், அரசறிவியல் ஆகிய பாடங்களை கற்பிக்கக்கூடிய தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள். புதிதாக நியமனங்களைப் பெற விரும்பும் பட்டதாரிகள் ஆகியோர் தத்தமது சுயவிவரப் படிவங்களை கீழ் கண்ட முகவரிக்கு உடனடியாக அனுப்பவும். அத்துடன் மேலும் விவரங்களை அறிய விரும்பின் கீழ் காணும் கையடக்க தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**கௌரவ அ. அரவிந்தகுமார்**
பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்/ மலையக மக்கள் முன்னணி நிதிச்செயலாளர்/ தமிழ் முற்போக்கு கூட்டணியின் உபதலைவர்.

**பாராளுமன்ற உறுப்பினரின் செயலாளர்**
**திருமதி K. சர்மிளாதேவி/ 077 351 6116** (K/304) (22,17)

# சசிக்கு சிறப்பு வகுப்பு வழங்க பெங்களூர் நீதிமன்றம் மறுப்பு

பெங்களூர், பெப். 16
சொத்துக் குவிப்பு வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட அ.தி.முக பொதுச் செயலர் சசிகலாவுக்கு சிறப்பு வகுப்பு வழங்க முடியாது என்று நீதிபதி நிராகரித்துவிட்டார். அதுமட்டுமன்றி, சிறை உணவைத் தான் சசிகலா உண்ண வேண்டும் என்றும் நீதிபதி உத்தரவிட்டார்.

*பரப்பன அக்ரஹார சிறை*
நீரிழிவு நோய் இருப்பதால், தனியாக மருத்துவரை அமர்த்திக் கொள்ள அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது. வீட்டிலிருந்து கொண்டு வந்த மருந்துகளைப் பயன்படுத்த நீதிபதி அனுமதித்தார்.

கடந்த முறை அதே சிறையில் இருந்தபோது, முதல் வகுப்புத் தரப்பட்டதால் இந்த முறையும் அதே வகுப்பைத் தர வேண்டும் என்று சசிகலா கோரினார். ஆனால், நீதிபதி மறுத்துவிட்டார். அதுபற்றி, சிறை அதிகாரிகளிடம் பேசிப் பெற்றுக் கொள்ளுங்கள் எனத் தெரிவித்தார்.

உடல்நிலை காரணமாக, இளவரசியும் சசிகலாவும் ஒரே அறையில் தங்க அனுமதிக்க வேண்டும் என அவர்களது வழக்கறிஞர்கள் கோரிக்கை வைத்தனர். நீதிபதி நிராகரித்தார். அதுமட்டுமன்றி, தனி அறை ஒதுக்கப்படாது என்றும் மற்ற கைதிகளுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும்நீதிபதிதெரிவித்தார். அவர்களுக்கு காலை 7 மணி, பகல் 11 மணி மற்றும் மாலை 5 மணி என மூன்று வேளை சிறை உணவு வழங்கப்படும்.

*உணவு விவரங்கள்:*
காலை 7 மணி - 2 சப்பாத்தி, 250 மில்லி லீற்றர் சாம்பார், 100 மி.லி காபி., 200 மி.லி., மோர்
பகல் 11 மணி - 400 கிராம் சாதம், 400 கிராம் கேழ்வரகு களி உருண்டை, சாம்பார்
மாலை 5 மணி - கலவை சாதம்
சசி, இளவரசி இருவருக்கு தலா ஒரு போர்வை வழங்கப்படும். சிறப்பு வசதிகள் செய்து தர சிறை நிர்வாகம் மறுத்துவிட்டது. (வ)

## சபதத்தின்...

குற்றவாளிகள் என்று இந்திய உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் காலை அதிரடித் தீர்ப்பு வழங்கியது. ஜெயலலிதாவுக்கு 100 கோடி ரூபாவும் ஏனைய மூவருக்கும் தலா 10 கோடி ரூபாவும் தண்டமாக விதிக்கப்பட்டது. ஜெயலலிதா இறப்பெய்தியதால் அவருக்கு தண்டனை விலக்கு வழங்கப்பட்டது. ஏனைய மூவரும் உடனடியாக பெங்களூர் நீதிமன்றில் சரணடைய வேண்டும் என்றும் தனது உடல்நிலை சரியில்லை என்று குறிப்பிட்டு சிறிது கால அவகாசம் கேட்டிருந்தார். எனினும் மன்று மறுத்ததை அடுத்து மாலை 6.45 மணியளவில் சுதாகரன் சரணடைந்தார். (வ-ம)

## கஞ்சா...

முச்சக்கர வண்டியும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம், மாதகல் பகுதியிலிருந்து கொழும்புக்குக் கஞ்சா கடத்தப்படவுள்ளதாக இரகசியத் தகவல் கிடைத்தது. அது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றன.
நேற்று காலை 6 மணியளவில் மாதகலுக்கும் பண்டத்தரிப்புக்கும் இடைப்பட்ட பகுதியில் சந்தேகத் துக்கிடமான முச்சக்கர வண்டி ஒன்று அவதானிக்கப்பட்டு சோதனையிடப்பட்டது. அதனுள் இருந்த 3 பயணப் பைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. பயணப் பைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்ட 22 கிலோ 400 கிராம் கஞ்சா போதைப் பொருள் அடங்கிய பொதிகள் மீட்கப்பட்டன.
முச்சக்கர வண்டியில் பயணித்த மூவரும் கைது செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள். ஒருவர் யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியை சேர்ந்தவர். அவர்களிடம் ஆரம்ப கட்ட விசாரணைகள் இடம்பெறுகின்றன.
கஞ்சா பொதிகளை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குக் கடத்த முயற்சித்ததாகச் சந்தேக நபர்கள் தெரிவித்தனர். சந்தேக நபர்களை மல்லாகம் நீதிவான் மன்றில் முற்படுத்தப்படுவர் என்று இளவாளைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-8,26)

## வெளிநாட்டு...

முன்வைக்கப்படவேண்டும். இந்த வழக்கை முன்கொண்டு செல்லும் படி முறைகளை மேற் கொள்ள வேண்டும்
இவ்வாறு சிறப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா உத்தரவிட்டார்.
கடந்த வருடம் நவம்பர் மாதம் 7ஆம் திகதி திருக் கேதீஸ்வரம் மனிதப் புதை குழி தொடர்பான விசாரணை மன்னார் நீதிமன்றில் இடம்பெற்றது. அதன்போது வழக்கு விசாரணை நேற்று 15ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப் பட்டிருந்தது. இந்த வழக்கு மன்னார் நீதிமன்றில் நீதிவான் ஏ.ஜீ.அலக்ஸ் ராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.
காணாமற்போனோரின் குடும்பங்கள் சார்பாக சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சனும், மன்னார் சட்டத்தரணிகள் சங்கம் சார்பாக சட்டத் தரணிகளான எம்.சபூர்தின், பிரிமூஸ் சிறாய்வா, ஜெபனேசன் லோகு ஆகியோரும் மன்றில் முன்னிலையாகினர்.
நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய கட்டளைக்கு அமைவாக வெளிநாட்டில் உள்ள சிறந்த தடயவியல் நிபுணர் குழுவுக்கு சிறப்புக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி இருந்தனர். மின்னஞ்சலில், மன்னார் மனிதப் புதைகுழி வழக்கு தொடர்பில் ஏதாவது உதவியை வழங்கு மாறு அவர்கள் கோரியிருந்தனர்.
இந்த நிலையில் தாம் அனுப்பிய மின்னஞ்சலுக்கு தடயவியல் நிபுணர் குழுவிடமிருந்து எந்தவித பதிலும் கிடைக்கவில்லை என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று மன்றில் தெரிவித்தனர்.
குறித்த வெளிநாட்டுத் தடவியல் நிபுணர் குழுவினர் பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கைக்கு வழங்கிய பதில் பாதிக்கப்பட்டோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.
எதிர்வரும் மார்ச் மாதமளவில் மன்னார் மனிதப் புதைகுழி தொடர்பில் தேவையான உதவிகளை வழங்க முடியும். எவ்வாறான பரிசோதனைகளை செய்ய வேண்டும். 'றேடியோ காபன்' பரிசோதனை இறுதிக்கட்டத்தில் செய்யப்பட வேண்டும். குறித்த மனிதப் புதை குழியின் வயதையும், இறப்புக்கள், சம்பவத்தை அளவிடுவதற்கு குறித்த பரிசோதனை உடனடியாக தேவை இல்லை. அது சம்பந்தமான முழு ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றோம். பரிசோதனைகளுக்கு தேவையான நிதி ஏற்பாடுகளை நாமே ஒழுங்கு செய் கின்றோம் என்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெளிநாட்டில் உள்ள குறித்த தடயவியல் நிபுணர் குழு அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அது நேற்று நீதி மன்றில் முன்வைக்கப்பட்டது.
இதனை அடுத்து எதிர்வரும் 27ஆம் திகதி திங் கட்கிழமை அன்று குறித்த விடயம் தொடர்பான முழுமையான அறிக்கை முன்வைக்கப் படவேண்டும். வழக்கை முன்னெடுப்பது தொடர் பான மேலதிக நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கான படி முறைகள் அமைக் கப்பட வேண்டும் என்று சிறப்புக் குற்றப் புல னாய்வுப் பிரிவுக்கு நீதிமன்றம் கட்டளையிட்டது. (வ-21,56)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2844 திகதி 15.02.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
17 19 62 66 T
போனஸ் இல. சனிக்கிழமை ஜக்பொட்
61
ரூ. 47,519,247/-

Galaxy Star
வெற்றி வாரம் 136 திகதி 15.02.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
12 30,43,53,60
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,637,784 /-

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 25.01.1941 இறப்பு 28.02.2016


அமரர்
**கந்தையா குணராசா**
(சாகித்திய ரத்னா செங்கை ஆழியான்)
திதி: அபரபக்கஷஷ்டி

எங்கள் அன்புத் தெய்வமே நீங்கள் மறைந்து
ஓராண்டு ஓடிவிட்டது. இப்பிரிவை எங்களால்
தாங்க முடியவில்லை. இப்பிறப்பில் இனி எப்போ
உங்களை மீண்டும் காண்போம்.

15/10A, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
021 222 2337

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

## ஈராண்டு நினைவலைகள்



பிறப்பு
05.05.1945

இறப்பு
08.02.2015

**அமரர் கதிரவேலு குணரத்தினம்**

வாழவைத்து வாழ்த்தி வைத்து வறுமைதனை நீக்கிவைத்து
எம் குடும்பங்களை வானுயர கோபுரமாய் உயரவைத்து
ஆள ஒரு அரசனில்லா அவலத்தைத் தந்துவிட்டு
அப்பா! நீங்கள் மறைந்து ஆண்டுகள்
இரண்டு ஆனதுவோ - ஆயினும்
உங்கள் மறுவாழ்வு சாந்தி பெற
மனதார இறைவனை வேண்டுகின்றோம்.

பழையவீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்கள்

### திருமதி வரதராஜக்குருக்கள் அன்னம்மா


சுழிபுரம் குடியிருப்பு வள்ளியம்மன் கோயிலை சேர்ந்தவரும் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலய முன்னாள் பிரதமகுருவுமான காலஞ்சென்ற விசுவநாதக்குருக்கள் வரதராஜக் குருக்கள் அவர்களின். அன்பு மனைவி அன்னம்மா கடந்த (14.02.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2017) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மட்டக்களப்பு கல்விமங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P : - 065 222 610 7
065 222 455 0

தகவல்:
இராமசந்திர சர்மா
(பாவு ஐயா-மருமகன்)

### தாமோதரம்பிள்ளை கந்தசாமி



கொக்குவில் மேற்கு, கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தா. கந்தசாமி நேற்று (15.02.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புத்திரனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீகாந்தன் (ராசன்), ஸ்ரீதரவாசன்(வவி), ஸ்ரீரஞ்சன் (வேவி), காலஞ்சென்ற ஸ்ரீதயாளன் (வவா), ஸ்ரீநந்தன் (மோகன்-கனடா), சுமதி, வதனி (சாந்தி), நந்தினி (பாப்பா), ஜெயமணி (குமுதா), றாகினி (குஞ்சன்), ஸ்ரீகுமரன் (சுவிஸ்), ஸ்ரீஜீவன் (பிரான்ஸ்), ஜெயந்தினி (கமலா-பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான ஸ்ரீபாலன், ஸ்ரீவிஜயகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2017) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் கொக்குவில் மேற்கு, கேணியடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு.
075 764 7538

தகவல்:
குடும்பத்தினர்.

## தீர்வு...

படாவிட்டால் திங்கட்கிழமை தொடக்கம் பெரும் எடுப்பிலான ஆதரவுப் போராட்டங்கள் கட்டம் கட்டமாக நடத்தப்படவுள்ளது. பாடசாலை மாணவர்களின் கவனவீர்ப்பு, பொதுமக்களின் கவனவீர்ப்பு, வாகனப் பேரணி, முழு அடைப்புப் போராட்டம் என்பன நடத்த திட்ட மிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில், மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிவமோகன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாவட்டச்செயலருடன் முதலில் இடம்பெற்ற கலந்துரையாடலில், காணி விடுவிப்புக்காக சாத்தியம் எந்த அளவில் உள்ளது. இது தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என்று மக்கள் பிரதிநிதிகள் மாவட்டச் செயலருடன் பேசினர்.

இதன் போது, காணிகள் விடுவிக்கப்படாவிட்டால் தொடர் போராட்டம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதையும் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

20ஆம் திகதி திங்கட்கிழமை, வடக்கின் 5 மாவட்டங்களிலும் உள்ள பாடசாலை மாணவர்கள் ஒரு மணி நேரம் கவனவீர்ப்பில் ஈடுபடுவர். 22 ஆம் திகதி புதன் கிழமை வடக்கின் 5 மாவட்டங்களிலும், மாவட்டச் செயலகம் முன்பாக காலை 10 மணியிலிருந்து 12 மணி வரை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படும். 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை, வடக்கின் 5 மாவட்டங்களிலிருந்தும் இளையோர் மோட்டார் சைக்கிளில் கறுப்புக் கொடி கட்டியவாறு பிலக்குடியிருப்பை நோக்கி வருவார்கள். இதன் பின்னர் 27ஆம் திகதி திங்கட்கிழமை வடக்கு மாகாணம் முழுவதிலும் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான இறுதி அறிவிப்பு நாளை மறுதினம் சனிக் கிழமை வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-7)

## ஓரிரவுக்குள்...

கடந்த காலங்களில் ஓர் அங்குலமேனும் காணி விடுவிக்கப்படவில்லை. இப்போது படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில், ஆர்ப்பாட்டங்களும் நடைபெறுகின்றன. இதுதான் உண்மையான ஜனநாயகம். எது எப்படியோ மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும்' - என்றார்.

போருக்கு முன்னர் பிலக்குடியிருப்புக் கிராமம் மக்களுடையதாகத்தான் இருந்தது. இப்போது எவ்வாறு வனப்பாதுகாப்பு திணைக்களத்துக்கு உரித்தாக மாற்றமடைந்தது? என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித சேனாரத்ன,

ஒருவேளை மக்கள் அங்கு அனுமதியின்றி குடியேறியிருக்கலாம் அல்லவா. அவர்கள் குடியேறினார்கள் என்பதற்காக வனப் பாதுகாப்பு பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஒன்று வனப்பகுதியை விட்டு மக்களை வேறு இடத்துக்கு குடியமர்த்த வேண்டும். இல்லையேல், வனப்பகுதியை குறைத்து மக்களைக் குடியேற்ற வேண்டும். இவைதான் சரியான முறையாகும் - என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட இராணுவ ஊடகப் பேச்சாளர், கேப்பாப்பிலவு விவகாரம் தொடர்பில் வான் படை உள்ளிட்ட தரப்புடன் பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவை முடிவடைந்த பின்னர் தீர்வு எட்டப்படும் - என்றார்.

இதேவேளை, பிலக்குடியிருப்புத் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தியதாகவும், அதன் போது இராணுவத் தளபதி பிலக்குடியிருப்பு காணிகளை விடுவிப்பதற்கு உறுதியளித்ததாகவும் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். (வ-5)

## ஆஸி. முகாம்களில்...

மன்னித்து விட்டோம். இவ்வாறு நேற்று ஆஸ்திரேலிய அரச தலைவர் மல்கம் ரேன்புல்லுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இலங்கை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அகதிகள் விடயத்தில் ஐரோப்பா விட்ட தவறுகளை நாங்களும் விடமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கான்பரா நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் காலை ஆஸ்திரேலிய அரச தலைவரைச் சந்தித்துப் பேசினார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க. இதன் பின்னர் இரு நாட்டுத் தலைவர்களும் இணைந்து செய்தியாளர் மாநாடு நடத்தினர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாகச் சென்று அரசியல் தஞ்சம் கோரிய இலங்கையர்கள் அனைவரையும் நாடு திரும்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து அகதிகள் ஐரோப்பாவுக்குள் வந்து குவிந்து ஏற்படுத்திய அமளியை நாமும் செய்ய முடியாது. இது குறித்துத் தற்போதும் ஆஸ்திரேலிய அரசுடன் பேசியவண்ணம் உள்ளோம்.

ஆஸ்திரேலியாவுக்குச் சட்டவிரோதமாக இலங்கையர் வருவதை நாம் விரும்பவில்லை . அதற்கு ஒரு காரணமுமே இல்லை. சட்டவிரோதமாக நாட்டை விட்டுச் சென்றிருந்தாலும் இவர்களை மீண்டும் வரவேற்கிறோம். அவர்களை நாம் தண்டிக்க மாட்டோம். மாறாக உதவி செய்வோம். ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்ததை அவர்கள் மறக்கக்கூடாது - என்றார்.

மனுஷ், நவ்று தீவுகளில் தடுப்பு முகாம்களில் உள்ள இலங்கையர்கள் மனிதாபிமானமாக நடத்தப்படவில்லை என்று செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த இலங்கைத் தலைமை அமைச்சர், இலங்கை அகதிகள் எல்லோரும் பத்திரமாக இருக்கிறார்கள். அவர்கள் தாயகம் திரும்பிவரலாம் என்று பதிலளித்தார்

எல்லாமே மன்னிக்கப்பட்டு விட்டன. திரும்பி வாருங்கள். காணாமற்போனவர்களுக்காக அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. ஒரு போதுமே போர் இடம்பெறாத பகுதிகளில் இருந்தும் சிலர் அகதிகளாக வெளியேறி விட்டார்கள் என்றும் தலைமை அமைச்சர் ரணில் கூறினார். (வ-தி)

## ஐ.நாவின்...

குறுகிய காலம் வழங்கப்பட்டாலும், மேற்பார்வை இறுக்கமானதாகவும், மாதாந்தம் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கக் கூடிய வகையிலும் இருக்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கு கால நீடிப்பை ஐ.நா. வழங்குமாக இருந்தால், ஐ.நா.வின் மேற்பார்வை அவசியம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு 2 வருட கால அவகாசம் வழங்கப்படக் கூடாது. அப்படி வழங்கினால் தமிழ் மக்களின் பிரச்சினையைப் பன்னாட்டுச் சமூகம் மறந்து விடும். அரசுக்கு இதுவரை காலமும் ஒரு வருடம் அவகாசம் வழங்கப்பட்டது. அந்தக் காலப் பகுதியில் குறிப்பிட்ட எவ்வளவுதான் இலங்கை அரசினால் செய்ய முடிந்துள்ளது. கால அவகாசம் வழங்குவதில் பிழை இருக்க முடியாது. காலத்தை வழங்கும் போது, இதுவரை வழங்கப்பட்ட காலத்தில் என்னத்தைச் செய்துள்ளார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

குறைந்த கால நீடிப்புக் கொடுக்கலாம். ஆனால் மேற்பார்வை இறுக்கமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதுவரையிலும் ஐ.நா. மேற்பார்வை வழங்கப்படவில்லை என்பதால், இரா. சம்பந்தன் அதனை வேண்டும் என்று சொல்லியிருக்கலாம் - என்றார். (வ-5-101-106)

## 16ஆவது நாள்...

மக்கள் நேற்றைய தினம் புதிதாக இரண்டு கூடாரங்களை அமைத்துத் தமது போராட்டக் களத்தை விரிவுபடுத்தியுள்ளனர்.

வான்படையினர் ஆக்கிரமித்து வைத்துள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கோரி பிலக்குடியிருப்பு மக்கள் நேற்று 16ஆவது நாளாகவும் போராட்டம் நடத்தினர். வாக்குறுதிகள் எதனையும் ஏற்கப் போவதில்லை என்றும், காணிக்குள் கால் வைப்பது மாத்திரமே தீர்வு என்பதிலும் உறுதியாக இருந்து அவர்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

இந்த மக்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ச.சரவணபவன் நேற்று நேரில் சென்று சந்தித்தார். முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும் நேற்றுச் சென்று சந்தித்தனர். மக்கள் விடுதலை முன்னணியினரும் மக்களைச் சந்தித்தனர். இந்தப் போராட்டத்துக்கு ஆதரவாக கொழும்பில் கவனவீர்ப்புச் செய்யப் போவதாக அவர்கள் மக்களிடம் தெரிவித்தனர்.

இதுவரையில் 10 அடியில் மூன்று தகரக் கொட்டில்கள் மாத்திரம் போடப்பட்டிருந்தன. நேற்று அதனுடன் இணைந்ததாக தறப்பாள் பத்தி இறக்கப்பட்டது. மேலும் 20 அடியில் தகரக் கொட்டில் அமைக்கப்பட்டுள்ளது. போராட்டக் களத்தில் உள்ள பாடசாலை மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக புதிய தகரக் கொட்டில் பயன்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5-7)

## போரினால்...

தினராலும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகின்றார்கள். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் வெளிநாட்டு ஊடகங்களின் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

போரினால் பாதிப்புக்கு உள்ளான பெண் தலைமைத்துவப் பெண்கள் மீது இப்போதும் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களது சமூகத்தைச் சேர்ந்த அதிகாரிகளினால் இவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் கீழ் நிலையில் உள்ள கிராம அலுவலர்களும் உள்ளடங்குகின்றனர். இதனை விட பாதுகாப்புத் தரப்பினராலும் அதே பெண்கள் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு போதுமான வாழ்வாதார உதவி வழங்கப்பட்டால் இவ்வாறான பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள முடியும் - என்றார். (வ-5)

## இலங்கையில்...

தனியார் கொடையாளர்களும் உதவ வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு ஐ.நா.வின் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 107.56 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்படுவது வழக்கம். மனித உரிமைகள் பாதுகாப்பு சார்ந்த செயற்பாடுகள், சிறப்பு அறிக்கையாளர்களின் பயணங்கள் உள்ளிட்ட தேவைகளுக்காக 252.9 மில்லியன் டொலர் மேலதிகமாகத் தேவைப்படுவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் தெரிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இந்த ஆண்டில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, ஆறு இலட்சத்து 48 ஆயிரம் டொலர் நிதி தேவைப்படுவதாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் தெரிவித்தார். (வ-5)

## நல்லிணக்கம்...

ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழுவினர், கைதடியிலுள்ள முதலமைச்சரின் செயலகத்தில் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே ரங் லாய் மார்க் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசியல் நிலைமைகள் தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ்வரனுடன் பேச்சு நடத்தினோம். நல்லிணக்கம் தொடர்பில் அரசுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம். வடக்கு மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு இந்தச் சந்திப்பு உதவியாக இருந்தது. கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தினதும் ஐ.நா.வினதும் இணைந்த செயற்பாடுகள் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கு மாகாண சபையுடன் எதிர்காலத்தில் எப்படி ஒத்துழைத்துச் செயற்படலாம் என்பது தொடர்பிலும் பேசப்பட்டது. நிலையான அபிவிருத்தி இங்கு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதில் முதலமைச்சர் உறுதியாக இருக்கின்றார் என்று ஐ.நாவுக்கான இலங்கையின் வதிவிடப் பிரதிநிதி மக்காலோ தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது: நல்லிணக்கம் தொடர்பாக பலவித செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் அவை வடக்கு - கிழக்கு மக்களை எப்படிச் சென்றடைகின்றன என்பதைப் பார்க்க வேண்டும். அதனை நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினேன். கொழும்பு அரசு காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. இன்னமும் அது முழுமை அடையவில்லை. சட்டங்கள் இயற்றுவதால் மாத்திரம் பயனில்லை. அதன் ஊடாக மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும்.

அரசியல் ரீதியாகப் பல விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றில் முன்னேற்றத்தைக் காண முடியவில்லை. 69 வருட காலமாக உள்ள பிரச்சினை இனியும் தீர்க்கப்படாமல் இருந்தால் மக்கள் வேதனைப் படுவார்கள். பிரச்சினைகளும் அதிகரிக்கும். வடக்கு மாகாணத் திட்டங்களை மேற்கொள்ளும் போது மாவட்டச் செயலர்கள், தலைமைச் செயலாளருக்கு மாத்திரம் தெரியப்படுத்தாமல் எமக்கும் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர்கள் இணங்கினார்கள். ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மே 15ஆம் திகதி வரையில் இலங்கை அரசுக்கு வழங்கப்படாது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர் - என்றார். (வ-5-101-106)

## போர்க்குற்ற...

பேசினார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அண்மையில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலும் இதே கருத்தை முன்வைத்திருந்தார்.

போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பத்திரிகையாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த சந்திரிகா, எனது ஆட்சிக் காலத்தில் இருந்ததை விடவும் சவால்கள் தற்போது அதிகம். அந்தக் காலத்தில் கடும்போக்கு அமைப்புகள் இருக்கவில்லை. முன்னாள் அரச தலைவர் மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணி போன்ற பிரிவுகளும் இருக்கவில்லை. கூட்டு அரசுக்கு சவால்கள் அதிகம் உள்ளன. எவ்வாறாயினும் புதிய அரசமைப்புத் தொடர்பாக வெண்தாமரை திட்டம் போன்று மக்கள் ஆதரவு திரட்டும் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவது அவசியமாகும். இது தொடர்பில் விரைந்து செயலாற்றுவது தற்காலத்தின் தேவையுமாகும்.

இவ்வாறான சூழலில் போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பேசுவது பொருத்தமற்றது. புதிய அரசமைப்பு முயற்சியை அது கடுமையாகப் பாதிக்கும்.


புதிய அரசமைப்புத் தொடர்பில் பொது வாக்கெடுப்பு நடத்தப்படுவது அவசியமாகும். பொது வாக்கெடுப்புத் தொடர்பில் கூட்டு அரசில் உள்ளவர்களுக்கே அச்சம் காணப்படுகின்றது. ஆனாலும் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் - என்றார். (வ-5)


## உயிரெழுத்துச் சொற்களை எழுதுவோம்




1. ..................
2. ..................
3. ..................
4. ..................
5. ..................
6. ..................
7. ..................

## படங்களுக்கிடையேயான வேறுபாடுகளை இனம் கண்டு வட்டம் இடுவோம்




## ஒன்றே தெய்வம்



அக்பர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஒரு அரசர். பீர்பால் அக்பரின் நண்பர். இவர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். இவர்கள் இருவரும் மதத்தால் வேறுபட்டாலும், மனத்தால் ஒன்றுபட்டிருந்தனர். இருவரும் தமது சமயம் பற்றி இடையிடையே பேசுவதுண்டு. அக்பர் பொதுவாக இந்துக்கடவுளர்கள் தொடர்பாகக் கேள்விகள் கேட்பார். ஒருமுறை "எங்களுக்கு அல்லா, கிறிஸ்தவர்களுக்கு இயேசு, பௌத்தர் களுக்கு புத்தர், உங்கள் இந்து சமயத்தில் மட்டும் ஏன் பல கடவுள்கள்?" என்று வின வினார் அக்பர்.

அதற்கு பீர்பால் "அன்பரே எல்லாக் கடவுளும் ஒன்றுதான். அவரவர் விருப்பத்துக்கு ஏற்றதாக அவரைப் பல பெயர்களில் அழைக்கிறார்கள்" என்றார். "இதனை நீர் எனக்கு சரியான முறையில் நிரூபிக்க வேண்டும்" என்றார். "சரி நிரூபிக்கிறேன்" என்றார் பீர்பால்.

உடனே பீர்பால் ஒரு சேவகனை அழைத்து, தன் தலையில் இருந்த தலைப் பாகையைக் காட்டி "இது என்ன?" என்றார். " தலைப் பாகை" என்றான் சேவகன். சேவகனை அனுப்பி விட்டு பீர்பால் தலைப் பாகையை அவிழ்த்து தோளில் போர்த்திக் கொண்டார். பின்னர் அதே சேவகனை அழைத்து "இது என்ன?" என்றார். சேவகன் "இது போர்வை" என்றான். பின்னர் சிறிது நேரம் கழித்து போர்வையை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு சேவகனை மீண்டும் அழைத்து "இது என்ன?" என்றார். "வேட்டி" என்றான் சேவகன். நடப்பதை எல்லாம் அக்பர் கவனித்துக் கொண்டிருந்தார். சேவகன் சென்ற பின் பீர்பால் "பார்த்தீர்களா நண்பரே! ஒரு பொருள் இடத்துக்கு ஏற்றபடி எப்படி மாற்றமடைகிறதென்று. ஒரு துணி தலையில் இருக்கையில் தலைப்பாகை. தோளில் போர்வை, இடுப்பில் வேட்டியாகிவிட்டதே! இதனைப் போலவே மழை நீரானது வானத்தில் இருக்கையில் மேகம் அல்லது முகில் என்றும் நிலத்தில் பொழியும் போது மழை என்றும் நிலத்தில் விழுந்து ஓடுகையில் வெள்ளம் என்றும் பின்னர் ஆறு, கடல், சமுத்திரம் என்றும் பெயர் பெறுகிறது. இப்படியே கடவுளும் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் பெயரால் அழைக்கப்படுகிறார்கள். வேறு வேறு வடிவங்களிலும் வழிபடுகிறார். பெயர்களும் வடிவங்களும் வேறுபடுகின்றனவே அன்றி கடவுள் ஒன்றே!" என்றார் பீர்பால்.

**ஒன்றே இறைவன்; நன்றே அறிவோம்.**

## ஆத்திசூடி

(நேற்றுமுன்தினம் வெளியான பகுதியின் தொடர்ச்சி)

**7. எண் எழுத்து இகழேல்**

கணித நூலையும் இலக்கண நூலையும் விலக்கி விடாமல் நன்றாகக் கற்றுக் கொள். எண் என்றால் கணிதம். எழுத்தென்றால் இலக்கணம். இவை இரண்டும் கற்பதற்கு கடினமானவை. ஆனாலும் கடினம் என இரண்டையும் வெறுத்து ஒதுக்கக் கூடாது. கணக்கும் இலக்கணமும் இரு கண்கள் போன்றவை. இவை இரண்டும் இல்லாவிடில் கல்வி அறிவு வளம் பெறாது. அவற்றை நன்கு கற் றால் அறிவு திறமை இரண்டும் பெருகும்.

பிரபல விஞ்ஞானிகளும் அறிவாளிகளும் உலகம் புகழும் செயல்களைச் செய்தமை இவற்றைக் கற்றுத்தான். மேலும் எமது சாதாரண அன்றாட வாழ்க்கைக்கும் இவையிரண்டும் (கணிதம் - மொழி) மிகத் தேவையானவை.

**8. ஏற்பது இகழ்ச்சி**

ஒருவரிடத்தில் சென்று இரப்பது இழிவான செயலாகும். உடலில் வலு இருந்தும் உடல் உழைப்பில்லாமல் சோம்பேறிகளாகத் திரிந்து அடுத்தவரின் உழைப்பில் உண்டு வாழும் செயலையே இகழ்ச்சி என்கிறார். உழைக்க இயலாதவர்களுக்கும் குருடர், முடவர், அங்கவீனர் மற்றும் மிக வறுமை நிலையில் உள்ளோருக்கும் பசி உண்டல்லவா? இவர்கள் இரக்கும்போது அவர்களுக்கு வழங்க வேண்டும்.

**09.ஐயம் இட்டு உண்**

ஐயம் என்பது பிச்சை பிறருக்கு தருமம் செய்த பின்பே நீ உண்ண வேண்டும். இரப்பவர் பசியோடு இருக்கையில் நீ உண்ணக் கூடாது. உழைத்து ஊதியம் பெற முடியாத ஏழைகள் இரக்கும்போது அவர்களின் பசி தீர்த்த பின்பே உண்ண வேண்டும், இவர்களுள் பார்வையற்றோர், முடவர் (அங்கவீனர்) ஆகியோரும் அடங்குவர்.

(தொடரும்)

## சுவர்ப் பத்திரிகை

சுவர்ப் பத்திரிகை என்பது மாணவர்களால் ஆக்கப்பட்டு வகுப்பறைச் சுவர்களில் காட்சிப்படுத்தப்படும் பல்வேறு விடயங்கள் அடங்கிய ஒரு கற்றல் சாதனம். இதில் மாணவர்களின் தேடலின் முயற்சியினால் பெறப் பட்ட பாட அலகுகள் சார்ந்த சாராத மேலதிக கற்றலுக்கான பல்வேறு விடயங்கள் ஒரே அட்டையில் தொகுத்து எழுதப்பட்டிருக்கும் அல்லது பிரதி பண்ணப்பட்டிருக்கும்.

### மூன்று மனிதர்கள்

- ஒரு வகை மனிதர்கள் மற்ற வரை எப்படி வருத்தியேனும் தாங் கள் நன் றாக வாழ்வார்கள். இவர்கள் உண்மை யில் மனிதர்களல்லர். இரண்டு கால் மிருகங்கள்.
- வேறு சிலர் தாங்கள் நன்றாக வாழ்ந்து கொண்டு இயலுமான வரை தங்கள் நலனுக்கு ஊறு நேராத அளவில் பிறருக்கு உதவுவார்கள். இவர்கள் மனிதர் கள். நல்ல மனிதர்கள் என்றே சொல்வோம்
- இன்னும் சிலரோ தங்களுக்குத் துன்பம் நேரிடினும் மற்றவர் களுக்கு உதவுவார்கள். இவர்கள் மகாத்மாக்கள் மாந்தருள் தெய் வம் போன்றவர்கள்.

### வள்ளுவரும் ஔவையும்

குறளைக் குறுக்கியவர்:
மிகப் பெரிய கருத்துக்களையெல் லாம் இரண்டே வரிகளில் எடுத் துக் கூறி புகழ் பெற்றவர் திருவள் ளுவர்.
ஔவையாரோ ஒற்றை வரியில் அதே கருத்துக்களைச் சிறப் பாகக் கூறி சாதனை படைத்தவர்

உ+ம் எண்ணென்ப ஏனை எழுத்
தென்ப இவ்விரண்டும் கண்
ணென்ப வாழும் உயிர்க்கு
- வள்ளுவர்.

எண்ணும் எழுத்தும் கண்ணெ
னத் தகும்
- ஔவை

### எரிமலைச் செடி

ஜப்பான் நாட்டில் ஒரு வகைச் செடி உள்ளது. இது 30 அடி வரை வளரும். சூரியன் மறைந்ததும் இந்தச் செடியின் நுனியில் இருந்து வெண்ணிறமான புகை வெளி வருகின்றது. இதனால் இந்தச் செடியை ஜப்பானியர் எரிமலைச் செடி என்று அழைக்கிறார்கள்.

### ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்க தேசத்தில் கெந்துக்கி என்னும் ஓர் ஊரில் ஆபிரகாம் லிங்கன் பிறந்தார். இவரது பெற்றோர் வறியவர்கள். பெற்றோர்களுடன் சேர்ந்து வயலில் இவர் வேலை செய்வார். இவருக்கு படிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் பாட சாலை சென்று கல்வி பெற இயலாதவராக இருந்தார். இவர் தனது ஓய்வு நேரத்தில் பிறரிடம் புத்தங்களை இரவல் வாங்கிப் படிப்பார். அடக்கமும் நேர்மைக் குணமுள்ள இவரே பிற்காலத்தில் அமெரிக்க தேசத்தின் ஜனாதிபதியானார்.



### அம்மா எங்கள் தெய்வம்

பத்து மாதம் என்னைச் சுமந்து
பெற்றெடுத்த அம்மா
சொத்தாய் என்னை என்றும் காக்கும்
தெய்வம் எங்கள் அம்மா

காலைக் கோழி கூவ முன்பு
கண்கள் விழித்து நிற்பாள்
வேலையெல்லாம் எமக்காய்ச் செய்து
விரும்பி எம்மை வளர்ப்பாள்

எம்மை எழுப்பிக் காலைக் கடன்கள்
எல்லாம் முழுகச் செய்வாள்
கடவுள் பாதம் பணியச் செய்து
பாடம் சொல்லித் தருவாள்

எமக்கு நோய்கள் ஏதும் வந்தால்
தானே பத்தியம் காப்பாள்
தனக்கு வந்த வருத்தமாக
தானே வருந்தி நிற்பாள்

அம்மா எங்கள் அன்புத் தெய்வம்
அவளை என்றும் பணிவோம்
இம்மா நிலத்தில் அவளை இனிய
எமது கண்ணாய்க் காப்போம்

# இன்றைய மோதல்கள்

யாழ்;ப்பாணம், பெப். 16

**இளைஞரின் கால்பந்து**

வல்வெட்டித்துறை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து விடத்தல்தீவு ஐக்கிய அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் அணியை எதிர்த்து மன்னார் ஜோசவாஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறிந்த விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் இக்பால் பி அணியை எதிர்த்து அல்மதீனா அணி மோதவுள்ளது. (ம-23)





மகாஜனக் கல்லூரி

# மகாஜனா - ஸ்கந்தா வீரர்கள் போர் நாளை

யாழ்ப்பாணம், பெப். 16

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் - தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான வீரர்களின் போர் துடுப்பாட்டம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நாளை, நாளை மறுதினம் என இரண்டுநாள்கள் நடைபெறவுள்ளன. 2001 ஆம் ஆண்டு ஆரம்பமானது வீரர்களின் போர். இதன்படி நடப்பு வருடத்துக்கான ஆட்டம் 17 ஆவது ஆட்டமாக அமைந்தது. முடிவடைந்த 16 ஆட்டங்களில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 4 ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளது. மகாஜனக் கல்லூரி அணி 5 ஆட்டங்களில் வென்றுள்ளது. 7 ஆட்டங்கள் சமநிலையில் முடிந்தன. இதன்படி மகாஜனக் கல்லூரி ஓர் ஆட்டத்தில் அதிகமான வெற்றியைப் பெற்று முன்னிலையில் உள்ளது. இதனால் நடப்பு வருட ஆட்டத்தில் பதிலடி கொடுக்க வேண்டும் என்ற இக்கட்டான நிலை ஸ்கந்தாவுக்கு இருக்கவே செய்கிறது.

மகாஜனக்கல்லூரி அணி- எஸ்.டினேஸ் (தலைவர்), ரி.ஜசிந்தன், கே.பிரணவன், ஆர்.முரளிதரன், எஸ்.சர்மிலன், ரி.தயுஸ்ரன், ஜி.கிருசன், எம். சுஜீபன், எஸ்.சாருஜன், என்.ஜனுசன், ஜி.கனிஸ்ரன், எம்.பகீரதன், கே.வற்சாலன், ரி.மகேசன், ஜி.தார்மீகன், கே.சுஜீத்.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி- கே.சயந்தன் (அணித்தலைவர்), பி.அஜிந்தன், ரி.சாறுஜன், எஸ்.சுரேஸ், ஏ.கஜீபன், எஸ்.பிரசான், கோகுலலக்சன், ஏ.றொனிஸ்ரன், ஜெ.கலிஸ்ரன், ஏ.தனுசன், எஸ்.சோபிகன், எல்.லக்சன், வி.ரதுசன், எஸ்.டன்சன், ஏ.ராகுலன், ஆர்.கிரிஸ்னிகன். (ம)



ஸ்கந்தவரோதயக் கல்லூரி

# சம்பியனானது உதயசூரியன்

கரணவாய், பெப். 16

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத்தில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

மருதங்கேணி பொது விளையாட்டரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகமும் தாளையடி சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் உதயசூரியனின் சார்பாக முதல் கோல் பதிவானது. வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் கரன், உதயசூரியனின் கோல் கணக்கை 2 ஆக உயர்த்தினார். அன்ரனிஸால் இறுதிவரை பதிலடி கொடுக்க இயலவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது உதயசூரியன். (ம-108)

# மெதடிஸ்த பெண்கள் சம்பியன்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 20 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டத்தில் சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் வட இந்து மகளிர் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. முதல் பாதியில் 14:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் மெதடிஸ்த பெண்கள் அணி முன்னிலை பெற்றது. தொடர்ந்து இரண்டாம் பாதியிலும் ஆதிக்கம் செலுத்தியது மெதடிஸ்த பெண்கள் அணி. முடிவில் அந்த அணி 24:8 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-108)




# லயன்ஸ் அபாரம்

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் லயன்ஸ் அணி வெற்றிபெற்றது.

சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யங்ஸ்ராரின் மைதானத்தில் இந்தத் தொடர் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஆட்டத்தில் அல் ஹிஜ்ரா அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதியது. இதில் லயன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# எவர்கிறீன், சித்திவிநாயகர் அணிகள் கபடியில் சம்பியன்

யாழ்ப்பாணம் பெப்16

மன்னார் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கபடித் தொடரில் ஆண்கள் பிரிவில் பெரியகமம் எவர்கீறின் விளையாட்டுக் கழக அணியும் பெண்கள் பிரிவில் சித்தி விநாயகர் விளையாட்டுக் கழக அணியும் சம்பியனாகின.

மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் எவர்கீறின் அணியை எதிர்த்து பெரியகடை ஈகிள்ஸ் அணி மோதியது.

எவர்கிறீன் அணி 42:28 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் சித்திவிநாயகர் அணியை எதிர்த்து பள்ளிமுனை சென். லூட்சியா அணி மோதியது. இதில் சித்திவிநாயகர் அணி 32:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# புரட்சியை வீழ்த்தியது ஜொலிஸ்ரார்

யாழ்ப்பாணம், பெப். 16

நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத்தில் புளியங்குளம் புரட்சி விளையாட்டுக் கழக அணியை 45 ஓட்டங்களால் வீழ்த்தி சம்பியனானது நெடுங்கேணி வடக்கு ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி.

புரட்சி விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் புளியங்குளம் புரட்சி அணியை எதிர்த்து நெடுங்கேணி ஜொலிஸ்ரார் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக பாஸ்கரன் 66 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் கோபி 2 இலக்குகளை வீழ்த்தினார்.

114 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய புரட்சி அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 68 ஓட்டங்களையே பெற்றதை அடுத்து 45 ஓட்டங்களால் வெற்றிபெற்று சம்பியனானது ஜொலிஸ்ரார். (ம-23)

## வடமராட்சி வலயம் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 16
வடமராட்சி திணைக்களங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத்தில் வடமராட்சி கல்வி வலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில், வடமராட்சி கல்வி வலய அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணி மோதியது.
இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய வடமராட்சி கல்வி வலய அணி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 77 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக கோகுலன் 52 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி சார்பில் சஞ்சீவன், காசி, பங்கயன் ஆகியோர் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பருத்தித்துறை பிரதேச செயலக அணி நிர்ணயிக்கப்பட்ட 7 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 73 ஓட்டங்களையே பெற்றது. 4 ஓட்டங்களால் வடமராட்சி கல்வி வலய அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது. அதிகபட்சமாக சத்தியன் 25 ஓட்டங்களையும், சஞ்சீவன் 20 ஓட்டங்களையும் பெற்றனர். (ம-422)




## மெதடிஸ்த பெண்கள் வலைப்பந்தில் சம்பியன்

கரணவாய், பெப். 16
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் 18 வயதுப் பிரிவில் சம்பியனாகியது பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும், வட இந்து மகளிர் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின.
ஆரம்பம் முதல் இறுதி வரை ஆட்டத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்த மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அணி 16:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. மூன்றாமிடத்தை வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி தனதாக்கியது. (ம-108)

## வோக்ஸ் ஓய்வு

ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வீரரான வோக்ஸ்; பன்னாட்டு அரங்கில் இருந்து ஓய்வை அறிவித்தார்.
ஆஸ்திரேலிய அணியில் 2015 ஆம் ஆண்டு தனது 35 ஆவது வயதில் வோக்ஸ் அறிமுகமானார். தனது முதல் ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக சதம் விளாசினார். இதன் மூலம் அதிக வயதில் அறிமுகமாகி அதே ஆட்டத்தில் சதம் விளாசியவர் என்ற சாதனையைப் படைத்தார். கடந்த வருடம் நடைபெற்ற இலங்கைக்கு எதிரான தொடரில் சிறப்பாகச் செயற்படாததை அடுத்து அணியில் இருந்து நீக்கப்பட்டார். அணிக்குத் திரும்பாமல், நேற்றுத் தனது ஓய்வு முடிவை அறிவித்தார். (ம)

## தென்னாபிரிக்கா – நியூசிலாந்து ரி–20 ஆட்டம் நாளை ஆரம்பம்

தென்னாபிரிக்கா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ரி-20 ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.
ஓர் ரி-20 ஆட்டம், 5 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர், மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆகியவற்றில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி நியூசிலாந்துக்குச் சென்றுள்ளது. ரி-20 ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.
ஒருநாள் தொடர் 19 ஆம் திகதியும், டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் 8 ஆம்திகதியும் ஆரம்பமாகவுள்ளது. (ம)



## மணற்காடு றோ.க.பா. - நெல்லியடி மத்தி. இறுதியில் இன்று எதிர்த்துப் பலப்பரீட்சை

கரணவாய், பெப். 16
வடமராட்சிப் பாடசாலைகளின் 18 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மணற்காடு றோ.க. பாடசாலையை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி இன்று மோதவுள்ளது.
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இந்த இறுதியாட்டம் இடம்பெறவுள்ளது. முன்னதாக காலை 8.30 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில், வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியை எதிர்த்து வல்வை சிதம்பராக் கல்லூரி மோதவுள்ளது. (ம-108)

## இலங்கை - ஆஸ்திரேலியா ரி-20 தொடர் நாளை

இலங்கை - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது.
மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது. முதலாவது ஆட்டம், மெல்போர்னில் நாளை நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் எதிர் வரும் 19 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி யும் நடைபெறவுள்ளன.
இந்தத் தொடருக்கான இரு அணிகளும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன. காயம் காரணமாக மத்தியூஸ் தொடரில் இருந்து விலகியதால், அணித்தலைவர் பொறுப்பு தரங்கவுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.
ஸரீவ் சிமித் தலைமையில் முன்னணி வீரர்களைக் கொண்ட ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாட இந்தியாவுக்கு வந்துள்ளதால், இலங்கைக்கு எதிரான தொடரில் இளம் ஆஸ்திரேலிய அணியே களமிறங்கும். அதேநேரம் மலிங்க அணிக்குத் திரும்பியுள்ளதால் இலங்கை பலமான அணியாக உள்ளது. (ம)



## சிம்பாப்வே - ஆப்கான் ஒருநாள் தொடர் இன்று

ஆப்கானிஸ்தான் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் சிம்பாப்வேயில் இன்று ஆரம்பமாகிறது. ஆட்டங்கள் அனைத்தும் ஹராரே மைதானத்தில் இடம்பெறவுள்ளன.
இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதியும், நான்காவது ஆட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதியும், ஐந்தாவது ஆட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதியும் இடம்பெறவுள்ளன.
ஆப்கானிஸ்தானுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்க பன்னாட்டு கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது.
ஏப்ரலில் இது தொடர்பான முடிவு வெளியாகவுள்ளது. இதனால் இந்தத் தொடரில் தன்னை நிரூபிக்க வேண்டிய தேவை அந்த அணிக்கு உள்ளது. (ம)



## அஸ்வினில் பிரட்மனைக் காண்கிறார் ஸ்ரீவ் வாக்

அஸ்வின், பந்துவீச்சில் ஓர் பிரட்மன் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ் வாக்.துடுப்பாட்டத்தில் பிரட்மன் எவ்வாறு முத்திரை பதித்தாரோ அவ்வாறு பந்து வீச்சில் சாதிக்கிறார் அஸ்வின். அவரைக் கடந்தால்தான் ஆஸ்திரேலியா வால் வெல்ல முடியும். எனவே அவரைச் சமாளிக்கும் வழி முறையை ஆஸி அறியவேண்டும் என்று வாக் மேலும் தெரிவித்தார். (ம)

## ஹாட்லி அணி சம்பியனானது

கரணவாய், பெப். 16
வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத்தில் 20 வயதுப் பிரிவில் சம்பியனாகியது பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும் மோதின. வாய்ப்புக்கள் கிடைப்பதும் அவை கோலாக மாற்றம் பெறாமல் போவதுமாக முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் 12 ஆவது நிமிடத்தில் ஹாட்லியின் சார்பாக ஓர் கோல் பதிவானது. அந்தக் கோலே ஆட்டத்தின் இறுதிக் கோலும் ஒரே கோலுமாக அமைந்தது. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது ஹாட்லி. மூன்றாமிடத்தை உடுப்பிட்டி அ.மி. கல்லூரி பெற்றது. (ம-108)



# தலைமை தொடர்பில் மிஸ்பாவிடமே முடிவு

## சகாரியர் கான் கருத்து

பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியில் தலைவராகத் தொடர்வதா அல்லது பதவியில் இருந்து விலகுவதா என்பது தொடர்பில் முடிவெடுக்கும் உரிமை மிஸ்பாவிடமே வழங்கப்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் சகாரியர் கான் தெரிவித்தார்.

பாகிஸ்தான் டெஸ்ட் அணியில் மிஸ்பா ஒரு முக்கிய வீரராக உள்ளார். அவர் அணியில் இருக்க வேண்டும் என்பதே ரசிகர்கள் உள்ளிட்ட பலரினதும் விருப்பமாகும். தலைமைத்துவத்திலும் மிஸ்பா சிறந்தவர். பாகிஸ்தான் அணியைப் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்துக்குக் கொண்டுசென்ற பெருமை மிஸ்பாவுக்கு உண்டு.

இவ்வாறான காரணங்களால் அவர் தொடர்பான முடிவெடுக்கும் உரிமையை அவரிடம் மட்டுமே விட்டுள்ளோம். அதில் நாங்கள் தலையிடப் போவதில்லை.

எனினும், அணியில் தொடர்ந்து விளையாட முடியும் என்ற உடற்தகுதி தன்னிடம் இருப்பதாக உணர்ந்தால், தொடர்ந்து விளையாடினால் அவர் தலைவராக நீடிப்பது சிறந்தது. ஆனால், சில காலம் மட்டுமே அணியில் விளையாடுவார் என்றால் பிறிதொருவரை நியமிப்பது சிறப்பானதாக இருக்கும் என்பது எனது கருத்து என்று சகாரியர் கான் மேலும் தெரிவித்தார்.

மிஸ்பா பதவி விலகினால், இலக்குக் காப்பாளரும் ரி-20 ஆட்டங்களின் தலைவருமான சர்பிராஸ் அகமட் டெஸ்ட் ஆட்டங்களினதும் தலைவராக நியமிக்கப்படுவார் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது. (ம)



**உடனடி வேலை வாய்ப்பு**

யாழ்ப்பாணத்திலுள்ள எமது நிறுவனமான **Everest Lanka** வின் புதிய கிளைகளிற்கு பதவி வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. வேலையாள்கள் நேர்முகதேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர். முன் அனுபவங்கள் தேவை இல்லை. வெற்றிடங்கள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

**No.28,3rd Cross Jaffna**

தொடர்பு - 077 517 9034, 077 937 4316, 076 864 3505

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



**தோற்றம்** **மறைவு**
**1945 . 01 .15** **2017 . 01 .17**

**அமரர்**
**கந்தையா நடேசன்**

எங்கள் உயிராக எங்கள் உணர்வாக
என்றும் எங்கள் உறவாக இருந்து
எங்களை வழி நடத்திய
அன்புத்தெய்வமே!
எம்மையெல்லாம் ஆரத் தழுவி
அன்பு முத்தம் தந்து
அறிவுரைகள் பலவும் தந்து
அவனியில் பெயர் சொல்ல வைத்தீர்கள்.
இன்று விண்ணகம் காணவென
விரைந்தோடி சென்றதேனோ !

எங்கள் குடும்பத்தலைவரின் பிரிவுச் செய்தி கேட்டு எங்கள் இல்லங்களுக்கு வருகைதந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழியிலும் உதவி நின்ற அன்பான உறவுகளுக்கும் எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து கொள்வதோடு அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (16.02.2017) வியாழக்கிழமை ஏழாலையில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.**

**ஏழாலை மேற்கு . தம்புவத்தை.** **குடும்பத்தினர்.**



# எதிர்பாரா வெற்றியை சாதிக்கவே வந்தோம்

## ஸ்ரீவ் சிமித் வெளிப்படை

இந்தியாவுக்கு எதிரான 4 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் எவரும் எதிர்பாரா வெற்றியைப் பதிவுசெய்வோம் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணித் தலைவர் ஸ்ரீவ் சிமித்.

இந்தியாவில் இந்தத் தொடர் நடைபெறுகிறது. முதலாவது ஆட்டம் புனேயில் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தியாவில் தொடர் நடைபெறுவதால் இந்திய அணியின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் என்ற பரவலான எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில், இவ் வாறு தெரிவித்தார் சிமித்.

இந்தியாவில் விளையாடுவது மிகப்பெரிய சவால், நாங்கள் இங்கு தொடரை வெல்வோமானால் 10-20 ஆண்டுகளுக்குப் பிறகு எங்கள் வாழ்க்கையின் சிறந்த காலக்கட்டம் இந்தத் தொடரை வென்ற காலக் கட்டமாகவே நினைத்துப் பார்த்து மகிழ்வோம். டெஸ்ட் வரலாற்றில் எவரும் எதிர்பாராத ஒரு வெற்றியைச் சாதிக்கவே இங்கு வந்திருக்கிறோம், ஆனால் இது அவ்வளவு சுலபமல்ல என்பதையும் நன்றாக அறிந்துள்ளோம்.

அடுத்த 6 வாரங்களுக்கு நடக்கவிருப்பதை எண்ணி நாங்கள் மிகவும் உற்சாகமடைந்துள்ளோம். வெற்றிகளை விட தோல்விகளிலிருந்தே நாம் பாடம் கற்றுக்கொள்ள முடியும். நாங்களும் நிறைய கற்று வருகிறோம். தற்போது அணி இருக்கும் நிலை குறித்துத் திருப்தி ஏற்பட்டுள்ளது. வீரர்கள் தங்களது இயல்பான ஆட்டத்தை மாற்றிக் கொள்ளக்கூடாது என்றே நான் நினைக்கிறேன். தடுப்பாட்டம்தான் ஆட வேண்டும் என்று முன்கூட்டியே தீர்மானிப்பது தான் பிரச்சினையின் ஆரம்பம். அஸ்வின், ஜடேயாவை ஆரம்பம் முதல் எச்சரிக்கையாக அணுக வேண்டும்.

இந்தியத் துடுப்பாட்ட வீரர்களுக்கு எதிராக குறிப்பாக விராட் கோக்லிக்கு எதிராக சில உத்திகளைத் திட்டமிட்டுள்ளோம். அது என்ன என்பதை நான் வெளிப் படுத்தப் போவதில்லை என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

# ஆஸி. தலைமை அமைச்சர் அணியை இலகுவாகத் தோற்கடித்தது இலங்கை

மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளது. தொடருக்கான பயிற்சி ஆட்டமாக ஆஸ்திரேலியத் தலைமை அமைச்சர் பதினொருவர் அணியும் இலங்கை அணியும் நேற்றுமோதின. இலங்கை அணி 5 இலக்குகளால் அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை, முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஹேஸ்லெட் 58 ஓட்டங்களையும், வோஜஸ் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பண்டார 3 இலக் குகளையும், மலிங்க, உதான இருவரும் தலா ஓர் இலக்கை யும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 17 பந்துகள் மீதமிருக்க, 5 இலக்குகளை இழந்து இலங்கை இலக்கை அடைந்தது.

அதிகபட்சமாகத் தரங்க ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களையும், டிக்வெல்ல 47 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

# தரப்படுத்தலில் இந்தியாவுக்கு அச்சுறுத்தல்

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் தரப்படுத்தலில் டெஸ்ட் அணிகள் வரிசையில் இந்திய அணி முதலிடத்தில் இருந்து வருகிறது. இன்றும் ஒரு வாரத்தில் நடைபெறவுள்ள ஆஸ்திரேலிய - இந்தியத் தொடர் தரப்படுத்தலில் முதலிடத்தில் எவர் தொடர்வது என்பதைத் தீர்மானிக்கவல்ல ஒன்றாக அமையப் போகிறது.

தற்போதைய நிலவரத்தின்படி இந்திய அணி 121 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. 109 புள்ளிகளுடன் ஆஸ்திரேலிய அணி இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்த நிலையில், ஆரம்பமாகவுள்ள நான்கு ஆட்டங்கள் கொண்ட தொடரில் இந்திய அணி ஒரு வெற்றியைப் பெற்றால், தரப்படுத்தலில் முதலிடத்தில் தொடரலாம். ஆனால் 3:0 அல்லது 4:0 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலியா தொடரை வென்றால் இந்திய அணி சரிவுகாண ஆஸ்திரேலிய அணி தரப்படுத்தலில் ஏற்றம் காணும்.

ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருக்கும் அணிக்கு டெஸ்ட் சம்பியன் என்ற அந்தஸ்தை ஐ.சி.சி. வழங்குகிறது. இந்தநிலையில் இந்தத் தொடர் மேலும் பரபரப்பான ஒன்றாக மாறியுள்ளது. (ம)

# கோக்லியால் அச்சமில்லை என்கிறார் மக்ஸ்வெல்

கோக்லி மிகத் திறனில் உள்ளார். அவருக்குத் தொட்டதெல்லாம் துலங்குகிறது. இதனால் அவரை நினைத்து ஆஸ்திரேலிய அணி அச்சமடையும் என்று கருத இயலாது இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரரான மக்ஸ்வெல்.

ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நான் கோக்லியைச் சீண்டி எதுவும் தெரிவிக்கப்போவதில்லை. அவரைச் சீண்டுவதன் மூலம் அவர் தவறான தெரிவுகளை மேற்கொண்டு ஆட்டமிழப்பார் எனின், நான் வார்த்தை மோதலுக்கு இழுக்கலாம். ஆனால் தற்போது அவரை அசைக்க முடியும் என்று தெரியவில்லை. அவரது சிறந்த ஆட்டத்துக்கு அவரது உத்திகள் காரணம் என்பதில் எனக்கு உடன்பாடில்லை. சில வீரர்களுக்கு, தொடர் அதிரடி தானாக அமைந்துவிடும். அவர்களில் கோக்லியும் ஒருவர். அவரால் எமது அணி அச்சப்படவில்லை என்பதை உறுதியாகத் தெரிவிக்க முடியும் என்று மக்ஸ்வெல் மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.